
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஜூன் 07, 2012 | புரட்சி 11 | முழக்கம் 21 | விலை: ரூ.2.50

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

# ‘திராவிட’ எதிர்ப்பாளர்களின் குழப்பம்

*அனைத்து தமிழர் சிக்கல்களுக்குக் காரணம் ‘திராவிடம்’ என்ற சொல் தானா? எந்த ஒரு மனிதரையும் ஒற்றை அடையாளத்தில் பொருத்தி விட முடியுமா? என்று பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேட்டுள்ளார். அடுக்கடுக்கான கேள்விகளோடு கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை.*

இன்றைய நிலையில் சமுதாயத்தில் நிலவும் ஏராளமான சிக்கல்கள் உரிய அளவுக்கு கவனிக்கப் படாமலும், கவனத்துக்கு வந்தாலும் அதைத் தீர்ப் பதற்கான உரிய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப் படாமலும் உள்ளன.

சமூக தளத்தில் சாதிய அடக்குமுறைகள்; தீண்டாமை வன்கொடுமைகள்; அரசுத் திட்டங்களே சாதிய ஆதிக்கத்திற்கு சாதகமாக தீட்டப்படுதல்; தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்கூட சட்டக் கடமைகளை ஆற்ற முடியாமல் தடுக்கப் படுதல்; இரட்டைக் குவளை, இரட்டை சுடுகாடுகள், இரட்டை வாழ்விடங்கள் என்ற ஜனநாயக விரோத ஜாதிய முரண்பாடுகள் எண்ணிலடங்காமல் கிடக் கின்றன.

அரசியல், பொருளியல் தளங்களிலோ பற்பல பின்னடைவுகள். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக போராடி பெறப்பட்ட தொழிலாளர் உரிமைகள், சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் புறந் தள்ளப்படுவது, எட்டு மணி நேர வேலை என்ற சட்டபூர்வ உரிமையைப் பறித்து பத்துமணி நேரத்துக்கு மேலாகக்கூட வேலை வாங்கும் பன்னாட்டு நிறுவனங்கள், பெரு முதலாளிகளை மனதில் கொண்டே தீட்டப்படும் திட்டங்கள், ஊழல் மயமாகிப்போன அரசு இயந்திரங்கள்; தன்னளவில் முழுமை பெற்றிருந்த உள்ளூர் உற்பத்தி முறைகள் அழிக்கப்படுதல்; சிறு தொழில்கள் - வளர்ந்துவரும் வறுமை, தேய்ந்து வரும் கிராமப் பொருளாதாரம், சாவதே மேல் என எண்ண வைக்கும் விவசாயம் என ஏராள சிக்கல்கள் நிலவி வருகின்றன.

ஆனால், இவை எவற்றையும்விட தமிழ்நாட்டு அரசியல் தளங்களில் - நுண்ணரசியல் தளங்களில் பெரும் விவாதப் பொருளாக மாறியிருப்பது - மாற்றப்பட்டிருப்பது “திராவிடர் - திராவிடம்” என்ற சொற்களே ஆகும்.

அதுவும் இச்சொற்களே ஈழத்தில் நடந்த பேரழிவுக்கும், இங்கு தமிழ்நாட்டில் நிலவும் எல்லா சிக்கல்களுக்கும் காரணம், இச்சொற்களை மக்கள் சிந்தனையில் இருந்தே அகற்றாவிட்டால் உய்யும் வழியே இல்லை என்பதுபோலப் பேசப்படுகின்றன; எழுதப்படுகின்றன; கருத்துப் பரப்பல் நடக்கின்றன.

இச்சொற்கள் மட்டுமல்ல; பெரியார் என்ற மனிதன் - பெரியாரியல் என்ற கருத்தியல் தமிழர் களிடம் ஏற்படுத்திய சிந்தனை தாக்கம்தான் தமிழர் வீழ்ச்சிக்கே காரணம் என்று உளம் வருந்தி பாவ மன்னிப்புக் கோரி சில முன்னாள் பெரியாரியர்களும் தூய ‘தமிழர்’ ஏடுகளில் எழுதுகிறார்கள்.

ஆக, பார்ப்பனியத்தையும், செயற்கை இந்திய தேசியத்தையும், பன்னாட்டு சுரண்டலையும்விட கொடூரமானதாக திராவிடர் - திராவிடம் ஆகியவைக் காட்டப்படுகின்றன.

எப்போதும் இதையே பேசிக் கொண்டிருந்த ம.பொ.சி., குணா போன்றோரோடு,

பெரியாருக்குத் தமிழ்த் தேசத்தின் தந்தை என்று முன்னர் பட்டம் சூட்டிய ‘தமிழ்த் தேச’ப் பொதுவுடைமைக் கட்சி -

தனது கட்சியின் ஆவணப்படி (பக்கம் 39) “நட்பு முரண் வகையிலும், அல்வழிப் பகை முரண் வகையிலும் எச்சரிக்கையோடும், விழிப்போடும் கையாளப்பட வேண்டிய” தரப்பினரைச் சேர்ந்த சீமான் அவர்களின் நாம் தமிழர் கட்சி -

“நாம் தமிழ்த் தேசிய மக்களே திராவிடர்கள் அல்லர்” எனக் கூறும் தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் -

போன்றவை இப்போது புதிதாக இந்தக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் செல்லத் தொடங்கியுள்ளன.

எனவே இந்த வேளையில் நாமும் இது குறித்து விவாதிக்க வேண்டியது அவசியமாகிறது.

முதலில் ஒருவரை அடையாளப்படுத்துதல் குறித்துப் பேசுவோம்.

எந்த ஒரு மனிதருக்கும் ஒற்றை அடையாளம் மட்டுமே இருந்துவிட முடியாது. உலகில் நிலவும் எல்லா அடையாளங்களும், உறவுகளும் கற்பியல் கோட்பாட்டுக்கு உட்பட்டவையே.



தமிழ்நாட்டுக்காரர் ஒருவர் அய்ரோப்பியர் ஒருவரோடு நின்றால் கருப்பர்; ஆப்பிரிக்கர் ஒருவரோடு சேர்ந்து நின்றால் கருப்பர் அல்லர். ஒருவரே கருப்பராயும், கருப்பர் அல்லாதவராயும் இருப்பார். ஆனால் இரண்டும் உண்மையே.

ஒருவர், அமெரிக்காவில் வாழ்ந்தால் ஆசிய அமெரிக்கர்; இங்கிலாந்தில் வாழ்ந்தால் பிரிட்டிஷ் ஆசியன்.

அவரே இந்தியத் துணைக் கண்டத்தில் டெல்லி யில், பீகாரில், வங்காளத்தில் வாழ்ந்தால் தமிழ்நாட்டுக்காரர்.

அவரே தமிழ்நாட்டில் சென்னையில் வசித்தால் அவர் தஞ்சைக்காரர், சேலத்துக்காரர், மதுரைக்காரர் நெல்லைக்காரர். அவரே நெல்லை நகரில் வாழ்ந்தால் தென்காசிக்காரர், புளியங்குடிக்காரர், சங்கரன்கோயில்காரர்.

தன் சொந்த ஊரிலேயே உள்ளபோது மேல் தெருக்காரர், தெற்குத் தெருக்காரர்... என்றவாறு இருக்கும் இடம் சார்ந்தும் அவரது சொந்த இடத்தைக் குறிக்கும் சொற்கள் வெவ்வேறாக இருக் கும். என்றாலும் அவை அனைத்தும் உண்மையே.

ஒருவர் தொழிற்சாலையில் இருந்தால் அவரது அடையாளம் தொழிலாளி, மேலாளர், நேரக் கண்காணிப்பாளர் - வீட்டில் இருந்தால் அவரது அடையாளம் அவை அல்ல.

வீட்டிலும்கூட ஒருவரது அடையாளம் ஒன்றாகவே இருப்பதில்லை; இருக்க முடியாது. அதுவும் சார்பு அடையாளமாகத்தான் இருக்க முடியும்.

தாயோடு தந்தையோடு இருக்கும்போது மகன், மகள் எனப்படுவார்.

தன் குழந்தைகளோடு இருக்கும்போது தாய், தந்தை எனப்படுவார்.

சொந்த வீட்டுக்குள் இருக்கும்போதுகூட ஒருவரை அடையாளப்படுத்தும் சொற்கள் வேறு வேறாகவே இருக்கின்றன.

ஒருவர்தான் நிற்கும் திசையைக்கூட யாரோடு பேசுகிறாரோ, அவர் இருக்கும் இடம் சார்ந்தே கிழக்கில், மேற்கில், தெற்கில், வடக்கில் இருப்பதாகக் கூறிக் கொள்ள முடியும்.

இருவேறு திசைகளில் உள்ளவர்களோடு ஒரே சமயத்தில் தொடர்பு கொண்டால் அவர்கள் இரு வரிடமும் தான் வெவ்வேறு திசைகளில் இருப்பதாக ஒருவர் கூறுவார். இரண்டும் நேர் எதிர் திசையாகக் கூட இருக்கலாம். ஆனால், இரண்டும் உண்மையே.

எனவே, எவர் ஒருவரையும் இருக்கும் இடமானா லும், இருக்கும் திசையானாலும், உறவு முறையே ஆனாலும் ஒற்றைச் சொல்லால் மட்டுமே அடையாளப்படுத்திவிட முடியாது.

இடம் விட்டு நகராமல் இருக்கும் ஒருவரைச் சந்திக்க பலர் வரலாம். ஒவ்வொருவருக்கும் அவர் வெவ்வேறு அடையாளச் சொற்களாலேயே அறியப்படுவர்.

ஒருவருக்கு நண்பர்; இன்னொருவருக்கு எதிரி; மற்றொருவருக்கு கடன்காரர்; இன்னொருவருக்கு வாடிக்கையாளர்; ஒருவருக்கு விற்பனையாளர்; இன்னொருவருக்கு முகவர், என்றிவ்வாறு எண்ணிலா அடையாளங்கள்.

அடுத்து கூட்டு அடையாளச் சொல் அணியாய் திரட்டப்பட்டு நிற்கும் போதாவது ஒற்றைச் சொல்லால் கூறிவிட முடியுமா என்றால் அதுவும் முடியாது.

தொழிற்சாலையில் உரிமைக்காக அணி திரண்டால் தொழிற்சங்கம் -

சாதிக்காரனோடு சண்டைக்கு அணி திரண்டால் சாதிச் சங்கம் -

சொந்த ஊர்க்காரனோடு கட்டமைப்பு வசதி, குடிநீர் வசதி, பேருந்து வசதிக்கென அணி திரண்டு நின்றால் குடி மக்கள் குழு.

எனவே, தனி மனிதராக மட்டுமல்ல, கூட்டமாக அணி திரண்டு நின்றாலும் ஒற்றைச் சொல் அடையாளத்தோடு அணி திரட்ட முடியாது.

ஒரு பள்ளி வகுப்பறைக்குள் பல ஆசிரியர்கள் வருவார்கள்.

ஒரு ஆசிரியர் பாடத் தெரிந்தவர்கள் எல்லாம் இந்தப் பக்கம் வா; மற்றவர்கள் அந்தப் பக்கம் போ என்பார் - அவர் நாடகத்துக்குத் தேர்வு செய்ய வந்தவர்.

அடுத்துவரும் ஒரு ஆசிரியர் உயரமானவர் எல்லாம் இந்தப் பக்கம் வா என்பார் - அவர் கூடைப் பந்து விளையாட்டுக்கு பயிற்சிக் கொடுக்க வந்தவர்.

மற்றொரு ஆசிரியர் வருவார்; ஆண்களெல்லாம் இந்தப் பக்கம் வா, பெண்களெல்லாம் அந்தப் பக்கம் போ என்பார் - சான்றிதழில் உள்ள அடையாளங்களைப் பதிவுசெய்ய ஆண், பெண் ஆசிரியர்களிடம் அனுப்பி வைக்க வந்தவர் அவர்.

இன்னொரு ஆசிரியர் வருவார். ஆங்கிலத்தை

(2 ஆம் பக்கம்)

# ஒற்றை அடையாளம் மட்டுமே இருந்துவிட முடியாது

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் பாடமாய் எடுத்தவர்கள் இந்தப் பக்கம் வா; பிரஞ்சு மொழியை எடுத்தவர்கள் அந்தப் பக்கம் போ என்பார் - அவர் இலவசப் பாடப் புத்தகங்களை விநியோகிக்க வந்தவர்.

என்றிவ்வாறு ஒரே வகுப்புக்குள் நுழையும் வெவ்வேறு ஆசிரியர்கள், வெவ்வேறு வகையாக அணி பிரிகிறார்கள். காரணம், அவர்களுக்கு வெவ்வேறு நோக்கங்கள் இருப்பதே.

அப்படித்தான் கொள்கை அடிப்படையில் முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கென அணி பிரிப்பதும் கூட ஒரு வகையாய் இருக்க முடியாது.

தொழிலாளர் உரிமைகளுக்குப் போராடும் அமைப்புகள் தொழிலாளி - முதலாளி என பிரித்துக் காட்டும்; போராடும்.

(ஆனால், கோரிக்கைகள் வெவ்வேறாக இருந்தால் தொழிலாளர்களும்கூட உடலுழைப்புத் தொழிலாளர்கள், நிர்வாகத் துறை ஊழியர்கள் என பிரிக்க வேண்டியும் வரும்)

தலித் விடுதலைக்குப் போராடுவோர் ஆதிக்க சாதியினர், ஒடுக்கப்படும் சாதியினர் என்றுதான் பிரித்துப் பார்ப்பர்.

ஏரி, குள நீர்ப் பாசனம் பெறுவோர் அடிமடை விவசாயிகள், கடைமடை விவசாயிகள் என்று பிரிந்து நின்றே நீர் முறைப் பற்றிப் போராடுவர்.

சுற்றுச் சூழலுக்குப் போராடுவோர், மாசுபடுத்து வோர், மாசுகளைத் தடுக்க விரும்புவோர் என்றே பிரிந்து நிற்க முடியும்.

கிராமத்துக்குள் மோதல்கூட இந்த மதத்துக்காரர், அந்த மதத்துக்காரர்; இந்த சாதிக்காரர், அந்த சாதிக்காரர், இந்த தெருக்காரர், அந்த தெருக்காரர் என மோதலின் காரணத்தால் வெவ்வேறு வகையாக பிரிந்து நிற்பர்.

மேற்சொன்ன அணிப் பிரிவினைகளின் தரப் பினர் ஒரு நோக்கத்துக்காக ஒரு அணியில் இருப்பவர், வேறு நோக்கத்துக்காக மற்றொரு அணியில் இருக்க நேரிடும்.

அதாவது, ஒரு நோக்கத்துக்காக ஓரணியில் இருப்பவர்கள், வேறொரு நோக்கத்துக்காக எதிர் எதிர் அணிகளில் இருக்க நேரிடும்.

ஆக, நமக்கான ஒற்றை அடையாளங்கள் என்பது எதுவும் இல்லை. அனைத்தும் சார்பு அடை யாளங்களே. நாம் அணி பிரிவதும் / பிரிப்பதும் தேவைகளை ஒட்டியே!

எனவே நாம் தமிழ்த் தேசிய மக்களே; திராவிடர் அல்லர் என்பது சரியானதல்ல. ஒரே நேரத்தில் ஒரே நபருக்கு இரண்டு அடையாளங்கள் இருக்க முடியும்.

தொழிற்சங்கப் போராட்டத்தின்போது தொழி லாளராகத் தானே அடையாளப்படுத்த முடியும். அங்கு நாம் தமிழ்த் தேசிய மக்களே, தொழிலாளர் அல்ல என்று கூறுவது எப்படி சரியில்லையோ, அப்படித்தான் மேலே சொல்லப்படுவதும்.

இவற்றை மனதில் கொண்டுதான் தமிழர் / அல்லாதோர்; ஆரியர் / திராவிடர் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசியல் விடுதலை என்று வருகிறபோது, “தமிழ்நாடு தமிழருக்கே” என ‘தமிழர்’ அடை யாளத்தை முன் வைத்த பெரியார், சமூக விடுதலை, பண்பாட்டு விடுதலை என்று வருகிறபோது அடிமைப்படுத்தும் ஆரியப் (பார்ப்பன) பண்பாட் டில் அல்லலுறும் அனைத்து பார்ப்பனரல்லாத மக்களை மீட்க ஆரியரின் எதிர் அடையாளமாக ‘திராவிடர்’ என்ற அடையாளத்தை முன் வைத்தார்.

‘திராவிடர்’ என்பது தமிழ்ச் சொல் அல்ல என்பதை அறிந்தே பெரியார் அச்சொல்லைப் பயன்படுத்தினாரே அன்றி அறியாமல் அல்ல. ஒரு சொல்லுக்கு சமுதாயம் புரிந்து கொண்டுள்ள பொருளை மனதில் கொண்டு அதைப் பயன்படுத்தினவரேயன்றி, ‘அகராதி’யோ சங்க நூல்களையோ புரட்டிப் பொருள் பார்த்து அல்ல.

‘சமூக நீதி’ என்பது தமிழல்ல என்றாலும் அச்சொல்தான் புழக்கத்தில் உள்ளதே தவிர ‘குமுக நயன்மை’ என்ற தமிழ்ச் சொல்லை யாரும் பயன்படுத்துவதில்லையே! சொல்லுக்குள் நுழைந்து கொண்டு விளையாடும் வீண் வேலைகள் எப்போதும் பெரியாரிடம் இருந்தது இல்லை.

பல வேளைகளில் ஒரு கேள்வி திரும்பத் திரும்ப எழுப்பப்படுகிறது. திராவிடர் என்று தமிழர்களில் சிலர்தான் கூறுகிறார்களேயொழிய தெலுங்கரோ, கன்னடரோ, மலையாளியோ அவ்வாறு தன்னைக் கூறிக் கொள்வதில்லையே என்பதே அது.

திராவிடர் என்ற சொல், தமிழர் என்பதை சரியாக உச்சரிக்கத் தெரியாத / முடியாத வடமொழி யாளர்களால் உண்டாக்கப்பட்டதே அந்தச் சொல் என்று கூறுகிறார்கள். படி என்பதை பிரதி எனவும், மெதுவாக என்பதை மிருதுவாக எனவும், மதங்கம் என்பதை மிருதங்கம் எனவும் உச்சரித்ததைப் போன்றே தமிழர் என்பதை திரமிளர் என்று விளக்கப்படுகிறது.

அவ்வாறாயின், திராவிடர் என்பது தமிழர் என்பதன் திரிந்த வடிவமே. தமிழர் என்ற சொல்லின் திரிந்த வடிவத்தை எப்படி தமிழரல்லாத பிறமொழியினர் தம்மைக் குறிக்கப் பயன்படுத்துவர் என்று நாம் எதிர்பார்க்க முடியும்? இருப்பினும் ஆந்திராவில்தான் திராவிட மொழிகளின் பல்கலைக் கழகம் இயங்கி வருகிறது. மைசூரில் இயங்கும் மொழிகள் ஆய்வு மையம் திராவிட மொழிகளை ஆய்வு செய்வதாகத்தான் அறிவித்துக் கொள்கிறது.

இது ஒருபுறம் இருக்க, பெரியார், திராவிடர் என்ற சொல்லை பார்ப்பனரல்லாத அனைவரையும் பார்ப்பனர் ஆரியப் பண்பாட்டால் இழிவுபடுத்தப் பட்டு, அடிமைப்பட்டுக் கிடக்கிற அனைவரையும் குறிப்பதற்கும், ஆரியத்துக்கு எதிராக அணி திரட்டு வதற்கும் அடையாளச் சொல்லாய் பயன் படுத்தினாரே அன்றி சகோதர மொழிகளைப் பேசுகிற தெலுங்கர், கன்னடர், மலையாளிகளோடு இணைவதற்கல்ல என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

- *தமிழர் என்பதன் திரிந்த வடிவமே திராவிடர் என்றால், பிற மொழியாளர்கள் ‘திராவிடர்’ என்று எப்படி தங்களை அழைப்பார்கள்?*
- *திராவிடர் இயக்கம் வேறு; திராவிட இயக்கம் வேறு.*
- *தமிழ்மொழி பேசுவதால் பார்ப்பனரை தமிழர்களாக ஏற்பீர்களா?*
- *திராவிடர் வடமொழிச் சொல்லாக இருந்தும் பார்ப்பான் அதை ஏற்க மறுப்பது ஏன்?*
- *பிற மன்னர் படையெடுப்பால் வென்ற பகுதி யில் தமது முகவர்களைக் குடியமர்த்தியதற்குக் காரணம் என்ன?*

மேலும் ‘திராவிடர்’ என்ற சொல்லை ஏன் பயன்படுத்த வேண்டும்? ‘தமிழர்’ என்று சொன்னால் போதாதா என்று பலராலும் பேசப்பட்டு வருகிறது.

திராவிடர் என்றால் பார்ப்பான் நுழைய மாட்டான் என்று கூறுகிறீர்களே திராவிட இயக்கமான அ.தி.மு.க.வில் ஆரிய (பார்ப்பன)ப் பெண் தானே தலைவராக உள்ளார் என்றும் பேசப்பட்டு வருகிறது.

மருத்துவர் இராமதாஸ் போன்றவர்கள் திராவிடர் என்று சொல்லைப் பயன்படுத்தவில்லையே. அதைப் பயன்படுத்தாமலேயே பா.ம.க.வில் பார்ப்பனர்கள் இல்லையே என்ற இன்னொரு வாதமும் வைக் கின்றார்கள்.

தி.மு.க., அ.தி.மு.க. போன்றவை **திராவிடர்** இயக்கங்கள் இல்லை. அவை **திராவிட** இயக்கங்கள் மட்டுமே. ஆரிய எதிர்ப்புச் சொல்லான மக்கள் கூட்டத்தைக் குறிக்கும் திராவிடர் என்பதை கைவிட்டு விட்டு மண்ணை, நிலப் பகுதியைக் குறிக்கும் ‘திராவிடம்’ என்ற வடநாட்டு எதிர்ப்புச் சொல்லால் குறிக்கப்படும் கட்சிகள் அவை.

பாட்டாளி மக்கள் கட்சியில் பார்ப்பான் என்ற இரத்தமும் சதையுமாய் உள்ள பார்ப்பன மாந்தர்கள் உள் நுழையவில்லை என்பதுகூட உண்மையாய் இருக்கலாம். ஆனால், சாதியம் என்ற பார்ப்பனர் கருத்தியலில் ஊன்றி நிற்கும் கட்சியாகத்தானே அது உள்ளது.

திராவிடர் என்ற சொல், பார்ப்பன - ஆரியப் பண்பாட்டின் எதிர்க் குறியீட்டுச் சொல் மட்டுமல்ல, பார்ப்பன - ஆரியப் பண்பாட்டுக்கு எதிராக - ஆரிய, சாதிய, இந்தியத்தின் அனைத்து வகை ஆதிக்கங் களுக்கு எதிராக - போராடி, போராடி அவற்றிலிருந்து விடுபடவும் அணி திரட்டலுக்கான சொல்லாகும்.

திராவிடர் என்பது தமிழர் என்ற சொல்லின் திரிந்த வடிவம் என்ற சொல்லாராய்ச்சியோடு நிறுத்திக் கொள்பவர்களிடம் நமக்கு ஒரு கேள்வி உள்ளது. மொழியடிப்படையில் பார்ப்பனரை நம்மவரே என்ற கருதச் செய்யும் போக்கு அவ்வாதத்துள் புதைந்து கிடப்பது உங்களுக்குப் புரியவில்லையா? அல்லது தெரிந்தும் யாரோ சில பார்ப்பனர் நட்புக்காக - தயவுக்காக அதை மறைக்கிறீர்களா?

முதலாவதாக, கருப்பாயி, கருத்தம்மா என்ற தமிழ்ச் சொற்களின் வடமொழி சொற்களான சியாமளா, நீலா என்ற பெயர்களையும், கார் வண்ணன், இருளப்பன் என்று பொருள்படும் சியாமள வர்ணன், கிருஷ்ணன் என்ற பெயர்களைத் தயக்கமில்லாமல் தங்களைக் குறிக்கும் பெயர்ச் சொற்களாக பயன்படுத்தும் பார்ப்பனர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள். இதேபோல் தமிழர் என்ற சொல்லின் வடமொழி சொல்லாக மட்டுமே உங்களால் கூறப்படும் திராவிடர் என்ற சொல்லால் தன்னை அடையாளப்படுத்த முன் வரும் ஒரு பார்ப்பனரையாவது உங்களால் காட்ட முடியுமா? தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் பேசும் பார்ப்பனர்கள்கூட வேண்டாம், தமிழின் திரிந்த வடிவங்களான தெலுங்கு, கன்னட மொழி பேசும் ஒரு பார்ப்பனராவது தமிழின் திரிந்த வடிவமான திராவிடர் என்ற சொல்லால் தன்னைக் குறிப்பிட ஒப்புக் கொள்வாரா? எனவேதான் நாம் வீழ்த்த விரும்பும் பண்பாட்டு ஆதிக்கமான பார்ப்பனியத்தை எதிர்க்க ‘திராவிடர்’ என்ற எதிர் அடையாளத்தை ஏற்றாக வேண்டும் என்பதையாவது உணர்கிறீர்களா? இல்லையா?

மேலும் - பார்ப்பனியத்தைக் கைவிட்டுவிட்ட, பார்ப்பனர்களைகூட பார்ப்பனிய எதிர்ப்பு இயக்கங்களில் சேர்த்துக் கொள்ளவே கூடாது என்ற இனவாதம், சாதிய வாதம் புரிகிறீர்கள் என்ற கேள்வி எழுப்புபவர்களிடமும் எமக்கொரு கேள்வி இருக்கிறது.

பவுத்தம் போன்ற பார்ப்ன எதிர்ப்பு நெறிகளைக் கூட உள் நுழைந்து சீர்குலைத்த பார்ப்பனர்களை பற்றிய வரலாற்று புரிதலால் வந்த எச்சரிக்கை உணர்வு ஒரு காரணம். பல்லைப் பிடுங்கி விட்டாவது பாம்பை படுக்கையில் போட்டு கொஞ்ச வேண்டும் என்ற ஆசை ஏனோ என்பார் குத்தூசி குருசாமி.

பார்ப்பனியம் கொடுமையானது - எதிர்க்கப்பட வேண்டியது - போராடி வீழ்த்தப்பட வேண்டியது என்ற புரிதலுக்கு வந்து சேர்ந்துவிட்ட பார்ப்பனர்கள் சிலரோ, பலரோ தமக்குள் அணி திரண்டு தம்மின மக்களான பார்ப்பனாகளிடம் கேள்வி கேட்டதே இல்லையே. ஏன்? வரலாற்றில் அப்படிப்பட்ட ஒரு பதிவே இல்லையே! அது தற்செயலானது என நம்புகிறீர்களா?

பார்ப்பனிய எதிர்ப்போடு, பிறரால் கட்டப்பட் டுள்ள அமைப்புகளில் வேண்டுமானால் தம்மை இணைத்துக் கொண்டு, அதுவும் அடிப்படை உறுப்பினராக அல்ல, தலைமைப் பொறுப்புகளில் மட்டும் இணைத்துக் கொள்கிறவர்களும், மக்களிடம் சென்று பணியாற்ற அல்ல, தம் அமைப்பில் உள்ளோரிடம் அதிகாரம் செய்கிற இடங்களில் மட்டுமே தம்மைத் தக்க வைத்துக் கொண்டு உள்ளவர்களும் தவிர, தம்மால் கொடுமை என்று கருதப்படும் பார்ப்பனியத்தை அதன் ஊற்றுக் கண்ணான பார்ப்பனர்களை திருத்த வேண்டும், திருத்தி அவர்களையும் பிறரை மதிக்கிற, சமத்து வத்தை ஏற்கிற மனிதர்களாக மாற்ற ஓர் இயக்கம் கட்ட வேண்டும் என்ற முயற்சியில் பார்ப்பான் ஈடுபடாதது ஏன்? பார்ப்பனரல்லா கரையான்கள் கட்டி எழுப்பியுள்ள புற்றுகளில் நுழைந்து கொள்ள வேண்டும்? என்பதே எமது கேள்வி.

தமிழ் நாட்டை ஆள இன்னொரு நாட்டான் கூடாது என்ற பொருளில் தான் ‘தமிழ்நாடு தமிழ ருக்கே’ என்பதில் உள்ள தமிழருக்கே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமே தவிர அதையும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பவர்களை மட்டும் குறிக்க அல்ல.

(4 ஆம் பக்கம்)

# எங்கெங்கும் பார்ப்பன ‘மனுதர்மம்’

**நாட்டில் ‘மனுதர்மமே’ அதிகாரத்தோடு ஒவ்வொரு துறையிலும் கொடிகட்டி திமிரோடு பறந்து கொண்டிருக்கிறது என்பதற்கு சான்றாக வந்து கொண்டிருக்கும் செய்திகளின் தொகுப்பு:**

## மனுதர்மக் காவலருக்கு புகழாரம்!

காஞ்சிபுரம் மடத்தின் சீனியர் சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரசுவதி, மனுதர்மத்தையும் வர்ணபேதத்தையும் வெளிப்படையாக ஆதரித்தவர். அதை தெய்வத்தின் குரல் என்ற தலைப்பில் நூலாக அச்சிட்டு வெளியிட்டு இன்று வரை பரப்பி வருகிறார்கள். அவரது ஜெயந்தியை (அதாவது பிறந்த நாள்) முன்னிட்டு ‘இந்து’ நாளேட்டில் பார்ப்பனர் ஒருவர் ‘மகா சுவாமி’ புகழ் பாடும் கட்டுரை ஒன்றை (ஜூன் 1, 2012) எழுதியிருக்கிறார். அக்கட்டுரையில் சீனியர் சங்கராச்சாரியின் கருத்து ஒன்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. நாடு ‘சுதந்திரம்’ பெற்ற காலத்தில் இவ்வாறு கூறினாராம்.


Words of wisdom
OCCASION
Anusha
The Sage of Kanchi urged people to emulate the established values of our ancient
one lives in harmony with the higher purpose as his goal." A ruler when con-

ஆட்சியாளர்களுக்கு அரசியல் சட்டமே உயர்வான தர்ம நூல். ஆனால், ஆட்சியாளர், உழைக்கும் மக்கள், வாழ்க்கையில் பின்பற்ற வேண்டியது தர்ம சாஸ்திரங்களே என்று ‘மகா பெரியவர்’ கூறியதாகக் கட்டுரையாளர் குறிப்பிடுகிறார். “மகா பெரியவர்” கூறும் தர்ம சாஸ்திரம் எது? சங்கராச்சாரியே கூறுகிறார்:

“நம் மதத்தில் பிராமணர் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு வர்ணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வாஸ்தவத்தில் ஜாதி வேறு; வர்ணங்கள் வேறு. நான்கு ஜாதிகளுக்கும் (அதாவது வர்ணங்களுக்கும்) சாஸ்திரங்களில் வெவ்வேறு விதமான கர்மாக்களையும், ஆச்சாரங்களையும் விதித்து வைக்கப்பட்டு இருக்கிறது. இதனால் ஒரு மதத்தாரிடையே ஏகப்பட்ட வித்தியாசங்கள் உள்ளன. ஒருவர் சமைத்ததை இன்னொருத்தர் சாப்பிடக் கூடாது; ஒருத்தரோடு ஒருத்தர் கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கூடாது; ஒருவர் செய்யும் காரியத்தை மற்றொருவர் செய்யக் கூடாது என்று இப்படி எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன”. (ஆதாரம்: “தெய்வத்தின் குரல்” நூல்)

- இப்படிப் பச்சையாக வர்ணாஸ்ரமத்தை ஆதரிப்பதுதான் - சங்கராச்சாரி கூறும் தர்மம்! கட்டுரை எழுதும் பார்ப்பனர்கள் இந்த உண்மைகளை அப்படியே மூடி மறைத்துவிட்டு, தர்ம சாஸ்திரம், ஆன்மீகம், அருள்வாக்கு, தசோபதேசம் என்ற சொற்றொடர்களுக்குள் இந்த வர்ணாஸ்ரம கருத்துகளை புதைத்து விடுகிறார்கள். உலகப் புரட்சி, மனித உரிமை என்றெல்லாம் எழுதும் இதே ‘இந்து’ ஏடு தான், சாதி வர்ணபேத்தை உயர்த்திப் பிடித்த, இந்த சங்கராச்சாரிகளின் புகழ் பாடும் கட்டுரைகளை பிறந்த நாள் நினைவாக இப்போதும் வெளியிட்டு வருகிறது. இதற்குப் பெயர் மனுதர்ம சிந்தனை தானே?

## சீதையின் மற்றொரு முகம்

**“மாதர் (பெண்கள்) இளமைப் பருவத்தில் பிதாவினாலும் (தந்தை), திருமண காலத்தில் கணவனாலும், மூப்பில் (முதுமையில்) மைந்தனாலும், காக்கத்தக்கவராகையால், எக்காலத்திலும் மாதர் சுவாதீனமுடையவரல்லர். (சுதந்திரமாக வாழத் தகுதியற்றவர்)** – மனு அத்.9; சுலோகம் – 3

பம்பாய் மாநில உயர்நீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பில், “இந்திய மனைவியர் சீதையைப் போல் வாழ வேண்டும். எல்லாவற்றையும் துறந்து விட்டு, பகவான் இராமனுடன், காட்டுக்குச் சென்று 14 ஆண்டுகள் காட்டில் கணவருக்காக வாழ்ந்த சீதையே இந்திய மனைவியர்களுக்கு முன்னுதாரணம்” என்று நீதிபதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். கணவர் மாற்றலாகிப் போகுமிடமெல்லாம் பின் தொடர முடியாததை எதிர்த்து, ஒரு பெண் தொடர்ந்த வழக்கில், வழங்கிய தீர்ப்பில் நீதிபதிகள் இவ்வாறு கூறியுள்ளனர்.

ஒரு பெண், வாழ்நாள் முழுதும் பெற்றோருக்கும் கணவனுக்கும் மகனுக்கும் அடிமைப்பட்டே வாழ வேண்டும் என்ற மனுதர்மதே இப்போது நீதிபதிகளின் தீர்ப்பாக வந்திருக்கிறது. இத்தீர்ப்பை கடுமையாக விமர்சித்து வினிதா தர்வா நஞ்சினா என்ற பெண், ஆங்கில நாளேடு ஒன்றில் கட்டுரை எழுதியுள்ளார். நீதிபதிகள் கூறும் - சீதைக்கு, மற்றொரு முகம் உண்டு என்கிறார், இந்த எழுத்தாளர். ‘என்னுடன் காட்டுக்கு வர வேண்டாம்’ என்று ராமன் கூறியதை மறுத்து காட்டுக்குப் போனாள். இராவணன் தூக்கிச் சென்றபோது இராவணன் ஆசைக்கு இணங்க மறுத்தாள். இலட்சுமணன் கிழித்த கோட்டையும் அவள்தான் தாண்டினாள்; இறுதியில் ராமன் தனது கற்பை சந்தேகித்தபோது அவனுடன் சேர்ந்து வாழ்வதைவிட உலகத்தை விட்டே போவது சிறந்தது என்று இறப்பதற்கு முடிவெடுத்தாள். இத்தகைய சீதையாக சுய முடிவு எடுத்து செயல்படவே இளம் பெண்கள் விரும்புகிறார்களே தவிர நீதிபதிகள் கூறும் கணவன் சொல் தட்டாத சீதைகளைப்போல் அல்ல. எந்த ஒரு பெண்ணுக்கும் எவராவது முன் மாதிரியாக இருக்க வேண்டிய அவசியம் என்ன? என்று கேள்வியை எழுப்புகிறார், வினிதா. நீதிபதிகள் மனுதர்ம சிந்தனையை முன் வைத்தாலும் அதை இளைய தலைமுறை ஏற்கத் தயாராக இல்லை!

## ஆகமம் வந்தபோதே நாங்களும் வந்தோம்

**“கல்வி – தவம், இவைகளுக்கு உரியவர்களாக இருக்கிற பிராமணர்களுக்கு கொடுக்கப்பட்ட தானங்கள், அக்னியில் (நெருப்பில்) செய்த ஓமம் போல (மந்திரங்கள் போல்) பிரகாசிக்கின்றன. அதுமட்டுமல்ல, இந்த ஜென்மத்தில் வியாதி, அரசு போய்விடுமோ என்ற பயத்திலிருந்தும் காப்பாற்றுவதோடு வறுமையிலிருந்தும், நரகத்திலிருந்தும் காப்பாற்றுகின்றன.”** – மனு 3வது அத். சுலோகம் 98

பார்ப்பானுக்கு தானம் செய்தால், செய்தவனுக்கு நோய் பயம் வராதாம். அரசனுக்கு பதவி போய்விடும் என்று பயப்பட வேண்டாமாம்! தானம் செய்தவனுக்கு வறுமை வராதாம். நரகத்துக்கும் போக வேண்டியிருக்காதாம். இப்படியெல்லாம் ‘இத்தகம்’ பேசி மிரட்டியே பார்ப்பனர்கள் இப்போதும் ‘தானம்’ வாங்குகிறார்கள். பெரும் தொழிலதிபர்களும் மக்களை கொள்ளையடித்து கோடி கோடியாக கருப்புப் பணத்தை வைத்திருக்கும் அரசியல்வாதிகளும் பார்ப்பனர்களை அழைத்து, யாகம் நடத்தி, வாரி வாரி கொட்டுகிறார்கள். பம்பாயிலுள்ள தொழிலதிபர்களுக்காக விசேட பூஜைகள் நடத்த பிரபலமான ‘ஏழுமலையான்’ தலைமை அர்ச்சகர்கள் விமானத்தில் பறக்கிறார்கள். லட்சம் லட்சமாக ‘தானம் பெறுகிறார்கள்.

மனுதர்மம் வழங்கிய உரிமையைப் பயன்படுத்தி பார்ப்பனர்கள் நடத்தும் இந்த மிரட்டலுக்கு நீதிமன்றங்களும் பணிந்து போகின்றன. தமிழக சட்டமன்றத்தில் அர்ச்சராகும் உரிமை பார்ப்பனருக்கு மட்டுமல்ல அனைத்து சாதியினருக்கும் உண்டு என்று 1970 இல் ஒருமித்து நிறைவேற்றிய சட்டத்தை எதிர்த்து, பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றம் போனார்கள். உச்சநீதிமன்றம் ஆகம விதிகளை மீறாமல் சட்டத்தை நிறைவேற்றலாம் என்றுதான் தீர்ப்பளித்தது. பார்ப்பான் மட்டுமே அர்ச்சகராக இருந்த கோயில்களில் அந்த ஆகம நடைமுறைகளை மீறக்கூடாது என்பதுதான் இத் தீர்ப்பின் சாரம். ஆக, உச்சநீதிமன்றம், பார்ப்பானிடம் பயந்து நின்றது. மீண்டும் 2006 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் நாள், 1970 ஆம் ஆண்டு சட்டமன்றத் தீர்மானத்தை அவசர சட்டமாக தி.மு.க. ஆட்சி பிறப்பித்தது. மதுரை மீனாட்சியம்மன் கோயில் சிவாச்சாரி பார்ப்பனர்கள் இதை எதிர்த்து உச்சநீதிமன்றம் போனார்கள். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் இவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா?

“ஆதி காலத்தில் சிவபெருமான் சைவ சமயத்துக்குரிய 28 ஆகமங்களை உருவாக்கினான். **அப்படி ஆகமங்களை உருவாக்கியபோதே அதை பின்பற்றுவதற்காக சிவாச்சாரியாராகிய எங்களையும் படைத்து விட்டார்.** அதனால்தான் மீனாட்சியம்மன் கோயில் கட்டப்பட்ட காலத்திலிருந்து பரம்பரை பரம்பரையாக நாங்கள்தான் பூஜை செய்து வருகிறோம். எங்களை நீக்கி விட்டு வேறு சாதிக்காரர்களை அர்ச்சகராக நியமிப்பது ஆகமத்துக்கும் சிவபெருமானுக்கும் எதிரானது” என்று மனு போட்டார்கள். உச்சநீதிமன்றம் மிரண்டது. மனுதர்ம நீதியில் குறுக்கிட மறுத்து, அவசர சட்டத்துக்கு தடைபோட்டுவிட்டது. ஒவ்வொரு ஆகமக் கோயில்களிலும் பார்ப்பான் மட்டுமே அர்ச்சகராக முடியும் என்ற ‘மனுதர்ம நீதி’ இன்று வரை நீடிக்கிறது. சூத்திரன் என்ற பார்ப்பானின் தேவடியாள் மகள் (மனுநீதி அப்படித்தான் கூறுகிறது) கர்ப்பகிரகத்தில் நுழைந்தால், சாமி தீட்டாகிவிடும் என்ற நிலையே நீடிக்கிறது. மானமுள்ள ஒருவன் இந்த மனுதர்மத்தை மலம் துடைக்கும் காகிதமாகப் பயன்படுத்த வேண்டுமா? வேண்டாமா?

## பார்ப்பான் செருப்புத் தொழில் செய்யலாமா?

**“மாட்டு மூலமாக ஜீவிக்கிறவர்களாகவும், வர்த்தகம் செய்கிறவர்களாகவும், வட்டி வாங்கி பிழைக்கிறவர்களாகவும் இருக்கிற பிராமணர்களை சூத்திரரைப்போல் எண்ண வேண்டும்.”**
– மனுதர்மம் அத்.9; சுலோகம் 102.

மனுதர்மம் விதித்த கட்டுப்பாடுகளை பார்ப்பான் மீறிவிட்டான்; அதற்கு ஏராளமான சான்றுகளைக் காட்ட முடியும். ஆனால், “சூத்திரர்களுக்கு” ‘மனு’ விதித்த இழிவுகள் அப்படியே தொடர வேண்டும் என்று சமுதாயத்தின் பொதுப் புத்தியில் பார்ப்பான் ஏற்றி விட்டான். அதுதான் சமூகத்தின் ‘மனுதர்ம சிந்தனை’.

மாடு - தோல் தொடர்பான தொழில்களில் பிராமணன் ஈடுபடுவதை மனுதர்மம் தடை செய்துள்ளது. ஆனால், செருப்பு தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் பார்ப்பன மேலாளர் இப்போது மிகப் பெரும் ஊழல் குற்றச்சாட்டில் சிக்கியுள்ள செய்தி வந்திருக்கிறது. ‘ரீ போக்’ என்பது விலை உயர்ந்த காலணிகளை தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனம், ரூ.5000-த்துக்கு குறைந்து இங்கே செருப்பு வாங்க முடியாது.

இந்நிறுவனத்தின் இந்திய நிர்வாக இயக்குனர்களாக இருந்தவர் விஷ்ணு பகவத், கவுந்தர்சிங் பிரேம் என்ற பார்ப்பனர்கள். இவர்கள் இருவர் மீதும் ‘ரீ போக்’ நிறுவனம் ரூ.870 கோடியை சுருட்டி விட்டதாக நீதிமன்றத்தில் கிரிமினல் வழக்கு தொடர்ந்துள்ளது. மும்பையில் தங்களுக்கு முன் ஜாமின் கேட்டு இவர்கள் மனு செய்துள்ளதை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. ‘சத்யம் கணினி மோசடி வழக்கிற்குப் பிறகு, இதுவே பெரும் பணம் சுருட்டிய ஊழல் என்றும், ‘ரீ போக்’ நிர்வாகத்தின் வழக்கறிஞர் வாதாடியுள்ளார். பார்ப்பானுக்கு ‘மனுதர்மம்’ தடையில்லை; ‘சூத்திரனுக்கு’ மட்டும் தீண்டாமை இழிவுத் தொழில், தனிக் குடியிருப்பு - என்று மனுதர்மம் விதித்த வாழ்க்கை முறை! இது என்ன நீதி?

## குத்துச்சண்டையும் சதுரங்க விளையாட்டும்

உட்கார்ந்த இடத்தில் பேண்ட் கோட் அணிந்துக் கொண்டு குளுகுளு அறையில் நடக்கும் சதுரங்க விளையாட்டு, ‘மூளை’க்கு வேலை கொடுப்பதால் அதற்கு ‘பிராமண’ப் பெருமையை சமூகம் வழங்குகிறது. உடலை வருத்தி விளையாடும் விளையாட்டுகளுக்கு ‘சூத்திர’ நிலைதான். தமிழ்நாட்டைச் சேர்ந்த பார்ப்பனர் விசுவநாதன் ஆனந்த், மாஸ்கோவில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் இஸ்ரேல் நாட்டைச் சார்ந்த கெய்ஃபாண்டை வென்று, 5வது முறையாக உலக சாம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துள்ளார் என்று பத்திரிகைகள் பக்கம் பக்கமாக செய்திகளை வெளியிட்டு மகிழ்கின்றன. பல பத்திரிகைகள் தலையங்கம் எழுதி பாராட்டுகின்றன. தி.மு.க. தலைவர் கருணாநிதிகூட வாழ்த்து செய்தி விடுத்துள்ளார். ஆனால், கடந்த வாரத்தில் மற்றொரு செய்தியும் வந்தது. இது ஆர்வம் காட்டப்படாமல் ஒதுக்கப்பட்ட செய்தி. சீனாவில் நடந்த உலக குத்துச் சண்டை போட்டியில் இந்தி யாவைச் சார்ந்த இரண்டு பெண்கள் வெற்றி வகை சூடி, உலகப் பரிசைப் பெற்றுள்ளார்கள். மந்தாகினி, நீத்துசாகல் என்பது அந்தப் பெண்களின் பெயர்.

“பெண்ணுக்கு எந்த சுதந்திரமும் எந்த காலத்திலும் வழங்கவே கூடாது” என்ற மனு தர்மத்தை குப்பையில் தூக்கி வீசி எறிந்துவிட்டு, குத்துச் சண்டையில் களமிறங்கி உலக சாதனை படைத்திருக்கிறார்கள் இந்தப் பெண்கள். ஆனந்துக்கு கிடைத்த பரிசுத் தொகை ரூ.8 கோடி மற்றும் தங்கப் பதக்கம்; தமிழக அரசு தனியே ரூ.2 கோடி வழங்கியுள்ளது. உடலுழைப்பை - கீழ் சாதிக்கும், ‘மூளை’த் திறனை - உயர்சாதிக்கும் பிரித்து வைத்தது மனுதர்மம். அதே மனுதான் இந்த விளையாட்டுகளிலும் இன்று வரை புகுந்து விளையாடிக் கொண்டிருக்கிறான். பெண்களின் இந்த உலக சாதனையைக்கூட பார்ப்பன ‘துக்ளக்’ ஏடு கிண்டல் செய்கிறது. “ஆமாம், பெண்கள் சண்டைக் காரர்கள் என்று ஒப்புக் கொள்கிறேன்” என்று கிண்டல் செய்து, ‘சோ’ ஒரு கேள்விக்கு பதில் எழுதுகிறார்.

**தொகுப்பு: இரா**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# வெற்றிப் பெற்ற மன்னர்கள் செய்தது என்ன?

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணமானாலும், மாநிலமானாலும் அதன் எல்லைக்கோட்டோடு ஒரு மொழி மட்டுமே பேசுவோர் என கறாராக பிரித்துவிட முடியாது. எல்லைப் புறங்களில் பிற மொழி / இரு மொழிகள் அல்லது மும்மொழிகள் பேசுவோர்கூட இருக்க முடியும். அவர்களில் பலர் பல கட்டங்களில் வணிகத்துக்காக, ஆட்சியாளர்களிடம் பணியாற்ற, பிழைப்பு தேடிக் கூட உள் பகுதிகளிலும் வாழ்ந்து வரலாம்.

எந்த வகைகளில் எல்லைப் பிரிவினைகள் நடந்தாலும் பிரிவினை நடக்கும் நேரத்தில் பிரிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்து வருபவர்கள் அப்பகுதியினராக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, ஒவ்வொரு பிரிவினையின்போதும் பிரிவினையின் முதன்மை நோக்கத்துக்கு வேறுபட்டு இருப்பவர்களைக் குடிபெயரச் சொல்ல முடியாது.

பாகிஸ்தான் இந்தியாவாக இணைந்திருந்தபோது ஆங்காங்கே வாழ்ந்தவர்கள் பிரிவினையின் முதன்மை நோக்கமாக மத வழித் தேச பிரிவினை என்று வந்தபோது அடுத்தவர்களைக் குடி பெயரச் செய்யப்பட்டமை இன்றளவும் வரலாற்று பேரவலமாகவும், பெருங்கொடுமையாகவுமே கருதப்படுகிறது.

பாகிஸ்தானமும், வங்க தேசமும் ஒன்றாக இருந்தபோது அரசுப் பணிகளுக்காக, வணிகத்துக்காக என மற்ற பகுதிக்குச் சென்று வீடு, நிலம், தொழிற்சாலைகள் என வாழ்ந்தவர்கள் பிரிவினை ஏற்பட்டவுடன் அந்தந்த பகுதிக்குத் திரும்ப வேண்டும் என்று சொல்லப்படவில்லை.

தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் என பிரிந்தபோதும், அதற்கு முன்னதாக ஆந்திரம் பிரிந்தபோதும்கூட, தமிழ்நாட்டிலே தங்கிவிட்ட பிற மொழியினரைப் போலவே கேரளத்தில் பாலக்காடு, தேவிகுளம், பீர்மேடு பகுதிகளில் வாழும் தமிழர்களும், கர்நாடகத்தில் கோலார், பெங்களூர், இரியூர் பகுதிகளில் வாழும் தமிழர்களும், ஆந்திரத்தின் சித்தூர் மாவட்டத் தமிழர்களும் தொடர்ந்து அங்கங்கே தான் வாழ்ந்து வருகின்றனர்.

காரணம், வெறும் மனிதர்கள் என்றால் குடிபெயர்வதில் சிக்கல் இல்லை. வீடு, நிலம், தொழிற்சாலை என அசையாச் சொத்துக்களோடு உள்ளவர்கள் குடி பெயர்வது அவ்வளவு எளிது அல்ல.

மேலும், நாம் தமிழர் கட்சி ஆவணத்தின் பக்கம் 34 இல் ‘உறுப்பினர் தகுதி’யில்.

“தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தால் அல்லது தமிழை வாழ்வியல் மொழியாக ஏற்றுத தாய் மொழிக்குத் திரும்பியிருந்தால்” தங்கள் கட்சியில் உறுப்பினராகச் சேரத் தகுதியுடையவர் என்று கூறுகிறது. அப்படியானால், தமிழ்நாட்டில் பிறமொழியினர் அல்லது நாம் தமிழர் கட்சி ஆவணத்தில் கூறியுள்ளபடி, ‘திராவிடர்’ எனக் குறிப்பிடுவது வேறு யாரை என்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

இந்த இடத்தில் மற்றொன்றையும் கருதிப் பார்க்க வேண்டும்.

சங்க காலம் முதல் பிற்காலச் சோழர்கள், பிற்காலப் பாண்டியர் என எல்லா தமிழ் மன்னர்களும் பல நாடுகளுக்குப் படையெடுத்துச் சென்றுள்ளனர். பல நாடுகளை வென்றும் உள்ளனர்.

ஆனால், நம் தமிழ் மன்னர்கள் அனைவரும் தோற்கடித்த மன்னரின் மணிமுடி (மகுடம்) தன் காலடியில் விழுந்தால் போதும்; அல்லது மன்னனின் பிறந்த நாளின்போது வெற்றிப் பெற்ற தமிழ் மன்னன் மட்டுமே மணி முடியோடு அரசவையில் வீற்றிருக்க, வெல்லப்பட்ட நாடுகளின் மன்னர்கள் கையுறையாக, கப்பமாக சில பொற்காசுகளை அளித்தால் போதும் என்று மட்டுமே மனநிறைவடைந்துள்ளனர். பல வேளைகளில், பகை மன்னர் பெண்டிரைச் சிறை எடுப்பதும், பகை மன்னர் அரண்மனைகளை இடித்துத் தள்ளுவதும், சில வேளைகளில் பகை அரச குலப் பெண்களை ஏரில் போட்டு எருக்கு போன்றவற்றை விதைத்தலும் செய்துள்ளனர்.

ஆனால், தமிழரல்லாத மன்னர்கள் பிற நாடுகளை வென்றவுடன் நம்பகமான தமது ஆட்களை அழைத்து வந்து தனது ஆட்சிக்குத் துணையாக வரி தண்டல் செய்ய, படைத் தலைமையேற்க, பகுதிகள், பாளையங்களில் நிர்வாகத் தலைமையேற்க என குடியேற்றங்களை வென்ற நாடுகளில் ஏற்படுத்தியுள்ளனர்.

எனவே, தமிழ் மன்னர்கள் வென்றாலும், வென்ற நாடுகளில் தமது மக்களைக் குடியேற்றவில்லை. ஆனால் வென்றவுடன் பிற நாட்டு மன்னர்கள், தமது மக்களை குடியேற்றியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் வாழும் பிற மொழியினரின் வளமான வாழ்வுக்கும், அதே நேரத்தில், தம் வாழ்க்கைப் பாட்டுக்காக பிற மொழிப் பகுதிகளில் கூலிகளாய் சென்றமர்ந்ததற்குக் காரணம் வர்க்கப் பிரச்சினையா? மொழிப் பிரச்சினையா? என்பதை கருதிப் பார்க்க வேண்டும்.

ஆக, பிறமொழியினரின் வளமான நிலைக்குக் காரணம் அவர்களது மன்னர் அளித்த ஆட்சிப் பணியில் பங்கு என்பதன் தொடர்ச்சியே அன்றி, அவர்கள் பேசும் மொழியால் அல்ல. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கிராமங்களில் மணியக்காரர், கணக்குப் பிள்ளை (முன்சிப், கர்ணம்)களாக இருந்தவர்களின் வழிமுறையினர்கூட நிலபுலன்களோடு மிக வளமாக வாழ்வதைக் கிராமங்களில் காண முடியும். அது அவர்களின் அரசுப் பணி அதிகாரத்தால் வந்ததே தவிர, அவர்கள் பேசும் மொழியால் அல்லவே!

ஆக, அவர்களது ஆதிக்கம் வர்க்க ஆதிக்கமாகக் கொண்டு எதிர்க்கப்பட வேண்டிய ஒன்றே தவிர, பிற மொழியினர் ஆதிக்கமாக எடுத்துக் கொள்வது பிழையானதாகும்.

(“திராவிடர் கழகம்” என்ற பெயர் சூட்டும் முடிவை பெரியார் ஒரே நாளில் எடுத்தார் என்ற வாதம் சரியா? -இது குறித்து அடுத்த இதழில் எழுதுவோம்.)

# அமெரிக்காவில் மரண தண்டனையில் நடந்த ஆள் மாறாட்டம்

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் 1989 ஆம் ஆண்டு கார்லோஸ் டெலுனா என்ற அப்பாவி இளைஞர் செய்யாத கொலை குற்றத்துக்காக மரண தண்டனைக்கு உள்ளானார். உண்மையில் அந்தக் கொலையை செய்தவர் கார்லோஸ் ஹெர்னான்டஸ் என்ற மற்றொரு இளைஞர். கார்லோஸ் என்ற பெயர் ஒற்றுமையும் உருவ ஒற்றுமையும் இருவருக்கும் ஒன்றாகவே இருந்தது. மரண தண்டனைக்குள்ளான இளைஞர் இறுதி வரை இந்தக் கொலையைத் தான் செய்யவில்லை என்றும், கொலை செய்த உண்மையான குற்றவாளியின் பெயரைக் கூறியும்கூட அரசு வழக்கறிஞர்கள் அதை ஏற்கவில்லை. கார்லோஸ் ஹெர்னாண்டஸ் என்ற பெயரில் ஒரு ஆளே கிடையாது என்று அரசு வழக்கறிஞர்கள் அடித்துக் கூறினார். மரண தண்டனைக்குள்ளாகும் இறுதி நேரத்தில்கூட ‘நான் அப்பாவி, குற்றமற்றவன்’ என்று கூறிக் கொண்டே அவன் மரண தண்டனையை சந்தித்தான். கொலம்பியா சட்டக் கல்லூரி பேராசிரியர் மற்றும் மாணவர்கள் குழு ஒன்று இதுபற்றி 2004 ஆம் ஆண்டு ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர். 8 ஆண்டு ஆய்வுக்குப் பிறகு மரண தண்டனை விதிக்கப்பட்டவர் அப்பாவி என்பதை உறுதி செய்து வெளியிட்டுள்ளனர்.

இந்தக் கொலை வழக்கில் அரசு தரப்பில் சேகரிக்கப்பட்ட சான்று ஆவணங்கள் மற்றும் சாட்சி விசாரணைகள், தடய ஆய்வுகளில் நடந்துள்ள முறைகேடுகளை இந்த ஆய்வு அம்பலப்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து மரண தண்டனை தேவையா என்ற வாதம் டெக்சாஸ் மாநிலத்தில் சூடு பிடித்துள்ளது. ஏற்கனவே பல வழக்குகளில் இப்படி அப்பாவிகள் பலிகடாவாக்கப்பட்டுள்ளார். இவர்களில் பெரும்பாலும் அமெரிக்காவில் வாழும் ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் மற்றும் ஹிஸ்பேனிக் அமெரிக்கர்கள் என்ற சிறுபான்மை சமூகத்தினரே ஆவர். கடந்த 20 ஆண்டுகளில் இப்படி முறையற்ற மரண தணடனைகள் விதிக்கப்பட்டுள்ளதை மிக்சிகன் மற்றும் வடமேற்கு பல்கலைக்கழக ஆய்வுகளும் உறுதிப்படுத்தியுள்ளன. அமெரிக்காவின் 50 மாநிலங்களில் 17 மாநிலங்கள் மரண தண்டனை விதிக்கும் சட்டப் பிரிவுகளை பயன்படுத்தாமல் நிறுத்தி வைத்துள்ளன. 5 மாநிலங்கள் மரண தண்டனை ஒழிக்கப்பட்டு விட்டதாகவே தனியாக சட்டம் இயற்றி விட்டன. கடைசியாக கடந்த ஏப்ரல் மாதம் கன்னக்டிக்கட் மாநிலம் மரண தண்டனையை ஒழித்து சட்டமியற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா தூக்குத்தண்டனையை சட்டப் புத்தகத்திலிருந்து அகற்றாவிட்டாலும் நிறுத்தி வைத்துள்ளது. சீனாவில் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தியாவில் கடைசியாக 2004 ஆம் ஆண்டு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

## ‘திராவிடர் இயக்கம் உருவாகிய பின்னணி (11)

### டாக்டர் நாயர் மரணத்தை இனிப்பு வழங்கி கொண்டாடிய பார்ப்பனர்

1919 – இந்திய சீர்திருத்த விஷயமாக நாயர் கொடுக்கப் போகும் சாட்சியமானது, மிக முக்கியமானது என்று கருத்தறிவித்த, சர். தாமஸ் பார்கோ என்ற நாடாளுமன்ற உறுப்பினரின் தூண்டுதலின்படி படுக்கையிலிருந்த நாயரிடம் சாட்சியம் வாங்க ஜாயிண்ட் பார்லிமெண்ட் கமிட்டியார் ஒரு சிறப்புக் கமிஷனை நியமித்தனர். அந்தக் கமிஷன ஜூலை 18 இல் மருத்துவமனைக்கே சென்று சாட்சியம் பெற முடிவு செய்திருந்தது. எனினும் நாயரின் உடல்நிலை காரணமாக அன்று சாட்சியம் பெற முடியவில்லை. நீரிழிவு மற்றும் நிமோனியா நோய் கடுமையாகி ஜூலை 19 அன்று காலை 5 மணியளவில் நாயர்முடிவு எய்தினார்.

அவரது உடல் லண்டனில் ‘கோல்டெர்ஸ் கிரீன்’ என்ற இடத்தில் எரிக்கப்பட்டு ‘அஸ்தி’ சென்னைக்கு டாக்டர் ஏ.ஆர். மேனன் என்பவரால் கொண்டு வரப்பட்டது. ‘அஸ்தி’யைக் கண்டு, பார்ப்பனர் அல்லாதார் குறிப்பாக ஆதிதிராவிடர்கள் தங்கள் தளநாயகன் முடிவெய்தியதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அழுது புரண்டார்கள்! கண்ணீர் உகுத்தார்கள்! நாயர் மறைந்த செய்தி கேட்டு பார்ப்பனர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள்! திருவல்லிக்கேணி பெரிய தெரு பிள்ளையார் கோயிலில் பார்ப்பனர்கள் ஆயிரக்கணக்கான தேங்காய்களை உடைத்தனர். காஸ்மாபாலிடன் கிளப்பில் பார்ப்பன உயர்நீதி மன்ற நீதிபதிகளும், மற்றும் பெரும் பார்ப்பனப் புள்ளிகளும் மகிழ்ச்சிக் கூத்தாடினார்கள்! இனிப்பு வழங்கி மகிழ்ந்தார்கள்!

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வங்கிக் கணக்கு எண்**


தோழர்கள், ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கான ஆண்டுக் கட்டணங்களை கீழ்க்கண்ட வங்கிக் கணக்கிலும் செலுத்தலாம்.

**கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை,**
**கணக்கு எண்: புரட்சிப் பெரியார் முழக்கம்,**
**1257.115.2041 IFSC Code KVBL 0001257**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 07th June 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஜூன் 14, 2012 | புரட்சி 11 | முழக்கம் 22 | விலை: ரூ.2.50


## அரசியல் சட்டம் வலியுறுத்தும் அறிவியல் சிந்தனை மேம்பாட்டுக்கு

# பெரியார் சிலைகள் அவசியமானவை

கிருட்டிணகிரி மாவட்டம் காவேரிப்பாக்கத்தில் ஆண்கள் அரசு மேல்நிலைப்பள்ளியின் வளாகத்தில் ஒரு மூலையில் பள்ளிக் கல்வித் துறை ஒப்புதல் மற்றும் அரசு அனுமதி ஆணையோடு நிறுவப்பட்டுள்ள பெரியார் சிலையை எதிர்த்து உள்ளூர் பா.ஜ.க.வினர், உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். பெரியார் சிலை நிறுவுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நிறுவனரான ஹெட்கேவர் சிலை நிறுவப் போவதாக அறிவித்து, அதற்கான ஏற்பாடுகளையும் தொடங்கினர். இதற்கிடையே பா.ஜ.க.வினர், நேரடியாக பெரியார் சிலையை எதிர்த்து வழக்காட முன்வராமல், பெற்றோர் மாணவர் சங்கத் தலைவர் ஒருவர் மூலமாக வழக்குத் தொடர்ந்தனர். உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி கே. சந்துரு மனுவை தள்ளுபடி செய்துள்ளதோடு, பெரியார் சமுதாய மாற்றத்துக்கு பங்களிப்பை வழங்கிய மகத்தான தலைவர் என்று தீர்ப்பில் பதிவு செய்துள்ளார்.

பெரியார் சிலையை பள்ளி வளாகத்தின் அருகே நிறுவுவதால் மாணவர்கள் நாத்திக சிந்தனைக்கு மாறிவிடுவார்கள் என்று மனுதாரர் கூறியிருந்ததுபற்றி நீதிபதி குறிப்பிடுகையில், ஒரு மகத்தான தலைவரின் சிலையை நிறுவிவிட்டாலே மாணவர்கள் எல்லோரும் தன்னிச்சையாகவே நாத்திகர்களாகி விடுவார்களா? என்று வியப்பு தெரிவித்தார். அதே நேரத்தில் பெரியாரின் சிலைகள் நிறுவப்பட வேண்டியதின் அவசியத்தையும் நீதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

"பள்ளி மாணவர்கள் பெரியாரின் வாழ்க்கையையும் இலட்சியத்தையும் கட்டாயம் அறிய வேண்டியது அவசியமாகும். இத்தகைய மாபெரும் தலைவர்களின் தத்துவங்களைப் புரிந்து கொண்டால் நமது அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கடமையாக கூறப்பட்டுள்ள பிரிவு 51ஏ(எச்) இல் வலியுறுத்தும், விஞ்ஞான மனப்பான்மையை மேம்படுத்துதல், மனித நேயம், எதையும் ஏன் எதற்கு என்று விசாரணைக்குட்படுத்துதல், சீர்திருத்தம் ஆகியவற்றை செம்மையாக பின்பற்றுவதற்கு உதவும்" - என்று நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் முறையான ஒப்புதலுக்குப் பிறகுதான் பெரியார் சிலை நிறுவப்பட்டுள்ளது. உள்ளூர் பா.ஜ.க. தலைவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு, ஆர்.எஸ்.எஸ். நிறுவனரான கேசவ் பாலிராம் ஹெட் கேவர் சிலையை நிறுவ வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்கள். எனவே, இந்த "மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல் செய்வதற்கு ஒரு அரசியல் கட்சியால் தூண்டி விடப்பட்டுள்ளார். அந்த அரசியல் கட்சி வெளிப்படையாக இப்படி ஒரு வழக்கை தாக்கல் செய்து எதிர்ப்பை சான்றாதாரமாக பதிவு செய்ய விரும்பவில்லை. அதற்கு பதிலாக இத்தகைய மனுதாரர்களுக்கு அழுத்தம் தந்து, சட்டத்தின் முன் நிற்க முடியாத காரணங்களைக் கூறி, வழக்கு தொடரச் செய்திருக்கிறார்கள். இந்த மனுவை இந்த நீதிமன்றத்தால் ஏற்க முடியாது" என்று நீதிபதி மேலும் கூறியுள்ளார்.

"பெரியார் மக்களிடம் எடுத்துரைத்த கருத்துகள் பற்றி, மனுதாரர், மனுவில் கூறியிருப்பது அவரது அறியாமையையே வெளிப்படுத்துகிறது. தமிழ் சமூகத்தை சீர்திருத்தி மாற்றியமைப்பதில் பெரியாரின் பங்களிப்பது எத்தகையது என்பது குறித்த புரிதல் மனுதாரருக்கு இல்லை. பெரியாரை ஏதோ 'நாத்திக பரப்புரையாளர்' என்று மட்டுமே முத்திரை குத்திட முடியாது. சாதிய ஒடுக்குமுறை, சமூக சமத்துவம், பெண்கள் விடுதலை போன்றவற்றில் பெரியார் முன் வைத்த சிந்தனைகள், சமகால இந்தியத் தலைவர்களின்

### நீதிபதி கே. சந்துரு வழங்கிய மற்றொரு பெருமைக்குரிய தீர்ப்பு

கருத்துகளையும் மிஞ்சி நிற்கக்கூடியவை. பூலே, அம்பேத்கரைப்போல, அயோத்திதாசர், பெரியார் போன்ற மாமனிதர்கள் நினைத்துப் பார்க்கவே முடியாத ஆழமான உண்மைகளைக் கண்டறிந்தவர்கள், உண்மையான கவலை கொண்டவர்கள். தங்கள் சுயசிந்தனைகளால் தங்கள் உடைமைகளை துறந்து சமுதாயத்துக்காக ஒப்படைத்துக் கொண் டவர்கள் தாங்கள் வாழ்ந்த சமூகம் அறியாமைச் சூழலில் மூழ்கிப் போய் அநீதிகளுக்கும் அவலங் களுக்கும் உள்ளாகிக் கிடந்ததைக் கண்டு, ஆழ்ந்த கவலை கொண்டு சமூக மாற்றத்துக்கு உழைத்தவர்கள் இந்த துயரங்களும் அநீதிகளுமே அவர்களை மிகக் கடுமையாக சிந்திக்க வைத்தது. எதைச் செய்தாவது மாற்றியாக வேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு வரத் தூண்டியது. இதேபோல் உலகம் முழுதும் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள் எப்படி விடுதலை பெற்றார்கள் என்று சிந்திக்கவும், பகுப்பாய்வு செய்யவும், செயல்படவும் முன் வந்தார்கள். ஒடுக்கப்பட்ட மக்களை போராடுவதற்கு அணி திரட்டினார்கள். அதன் வழியாக அவர்களுக்கு இழைக்கப்படும் அவமானங்களையும் ஒடுக்குமுறைகளையும் அடையாளம் காண முடிந்தது. சாதிய சமூக அமைப்பின் அநீதிகளையும் அந்த அமைப்பு நீடிக்கும் வரை சந்திக்க வேண்டிய சவால்களையும் சமூகத்துக்கு உணர்த்தியவர்கள். இப்படி இந்து சமூக அமைப்பின் ஆணிவேர் வரைச் சென்று அசைத்துக் காட்டிய தலைவர்கள் அவர்கள். இதில் மக்களைக் கவர்ந்து இழுத்த பெரியாரின் பேச்சுகள், முதன்மையான பங்காற்றியது" என்று நீதிபதி சந்துரு குறிப்பிட்டுள்ளார்.

பெரியார் திரைப்படத்துக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி ஏ.பி.ஷா தலைமையிலான அமர்வு (இதில் நீதிபதி கே.சந்துருவும் உண்டு) அளித்த தீர்ப்பில், பெரியார் பற்றி சுட்டிக்காட்டிய பகுதிகளை நீதிபதி இத் தீர்ப்பில் எடுத்துக் காட்டியுள்ளார்.

"வாழ்நாள் முழுதும் பெரியார் ஈ.வெ.இராமசாமி தீண்டாமையை அகற்றவும், சாதி அமைப்பை ஒழித்துக் கட்டவும் பாடுபட்டார். சமூக நீதிப் போராளியாக நின்று, பெண்களின் உரிமைக்குக் குரல் கொடுத்தார். பகுத்தறிவு, சுயமரியாதை கருத்துகளுக்கும் சமூக புரட்சிக்கும் நாடு முழுதும் இயக்கம் நடத்தினார். ஒரு பகுத்தறிவாளர் என்ற முறையில் மக்களிடம் விஞ்ஞான மனப்பான்மையை வளர்த்தெடுத்தார். மூடநம்பிக்கைகளை கைவிடுமாறு வற்புறுத்தினார். அது வீணானது; ஆபத்தானது என்றார். 1926 இல் சுயமரியாதை இயக்கத்தை நிறுவினார்" என்று வ.கீதா, எஸ்.வி.ராஜதுரை எழுதிய நூலிலிருந்து பெரியார் திரைப்பட வழக்கில் நீதிமன்றம் சுட்டிக் காட்டியதை நீதிபதி சந்துரு பதிவு செய்துள்ளார்.

2010 இல் அம்பேத்கர் சிலை நிறுவப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்றத்தின் அமர்வு நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பையும் எடுத்துக் காட்டியுள்ளார். அனுமதி இல்லாமலே பொது இடத்தில் அம்பேத்கர் சிலை அமைக்கப்பட்டது என்று தொடரப்பட்ட வழக்கில் அம்பேத்கரின் உயர்ந்த நிலையைக் கருதிப் பார்க்கும்போது, அந்த சிலையை இருக்குமிடத்திலிருந்து அகற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று அத் தீர்ப்பில் நீதிமன்றம் கூறியிருந்தது.

சமூகக் கண்ணோட்டத்தில் பல புரட்சிகர தீர்ப்புகளை வழங்கி வரலாறு படைத்து வருகிறார் நீதிபதி சந்துரு. இந்தத் தீர்ப்பும் அந்த வரிசையில் மற்றொரு மணி மகுடமாக திகழுகிறது.

(குறிப்பு: காவேரிப்பாக்கத்தில் திராவிடர் கழகம் நிறுவியுள்ள பெரியார் சிலையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு இது. இதே நீதிபதி கே.சுந்துரு, 'குடிஅரசு' வழக்கில் அவர்களுக்கு எதிராக நியாயமான தீர்ப்பை வழங்கிய போது, "நீதிபதி உபதேசம் செய்கிறார்" என்று கடுமையாக தீர்ப்பை விமர்சித்தது, தி.க.வின் 'விடுதலை' ஏடு. அதே நீதிபதி தான் இப்போது பெரியாரைப் பற்றிய பெருமைகளோடு அக்கழகம் நிறுவிய பெரியார் சிலை வழக்கில் இத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.)


**"பொய்யர்கள் புளுகு" கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை 2 ஆம் பக்கம்**


### *10 நாட்கள்: 80 ஊர்களில்*
## சென்னை–காஞ்சிபுரம் மாவட்டக் கழகம்
## சாதி தீண்டாமைக்கு எதிராக பரப்புரைப் பயணம்

சாதி தீண்டாமைக்கு எதிராகவும் மனுதர்ம எரிப்புப் போராட்டத்தை விளக்கியும் சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கழகச் செயல் வீரர்கள் 10 நாள் பரப்புரைப் பயணத்தைத் தொடங்குகிறார்கள்.

ஜூன் 22 ஆம் தேதி சென்னை மந்தைவெளியில் பயணத்தின் தொடக்க நிகழ்வுப் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. மந்தைவெளி மார்க்கெட் அருகில் நடக்கும் பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றுகிறார்கள். சிற்பி இராசன் 'மந்திரமல்ல தந்திரமே' என்ற அறிவியல் நிகழ்ச்சியை நடத்துகிறார்.

ஜூன் 23 இல் சென்னை இராயப்பேட்டையிலிருந்து பயணம் தொடங்கி – திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், காஞ்சிபுரம் மாவட்டங்களில் 80 ஊர்களில் 10 நாட்கள் பரப்புரைக் கூட்டங்களை நடத்துகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் ஜூலை 2இல் பயணத்தின் நிறைவு விழா பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

சிற்பி இராசன், கு.அன்புதனசேகரன், டேவிட் பெரியார், எ.கேசவன், இரா. உமாபதி, ந. அய்யனார் ஆகியோர் பரப்புரை நிகழ்த்துகிறார்கள். 15 தோழர்கள் தொடர்ந்து பரபபுரை இயக்கத்தில் பங்கேற்கிறார்கள். வடசென்னை, தென் சென்னை, காஞ்சிபுரம் மாவட்ட கழகங்கள் இணைந்து, இப்பரப்புரைக்குத் திட்டமிட்டு, களமிறங்கியுள்ளன.

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

# திராவிடர் கழகப் பெயர் சூட்டல்: பெரியாரின் திடீர் முடிவு அல்ல!

***காலையில் 'தமிழர் கழகம்' என்றே கழகத்துக்கு பெயர் சூட்ட முடிவு செய்த பெரியார், பிறகு அது தனக்கே எதிராகிவிடும் என்பதால், மாலையில் 'திராவிடர் கழகம்' என்று அறிவித்துக் கொண்டார் என்று – திரும்பத் திரும்பப் பரப்பப்படும் வரலாற்றுப் புரட்டுகளுக்கு பதில் தருகிறார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.***

திராவிடர் கழகம் - பெயர் மாற்றம் 'JUSTICE' என்ற ஆங்கில நாளேட்டை நடத்தியதன் காரணமாக 'ஜஸ்டிஸ் கட்சி' என்றும், அதன் தமிழ் மொழி பெயர்ப்பாக 'நீதிக்கட்சி' என்றும் அறியப்பட்டுவந்த தென்னிந்திய நல உரிமைச் சங்கம் 1938 டிசம்பர் 29, 30, 31 ஆகிய நாட்களில் நடைபெற்ற, அதன் 14 ஆவது மாகாண மகாநாட்டில், அதுவரை நீதிக்கட்சியில் ஒரு சாதாரண உறுப்பினராகக் கூட இல்லாதிருந்த பெரியாரை, தன் தலைவராக தேர்ந்தெடுத்தது. இராஜாஜி அமைச்சரவை பதவியை விட்டு விலகியிருந்ததால், எதிர்க் கட்சியான நீதிக்கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் கவர்னர் ஜெனரலும், கவர்னரும் இருமுறையும், தானும் கூட அமைச்சரவையில் இருந்து பணியாற்றுகிறேன் என்று பெரியாரை அணுகிய இராஜாஜியும் சென்னை மாகாண அமைச்சரவையை தலைமையேற்று அமைக்கக் கேட்டும் மறுத்துவிட்டார். (வருங்கால முதல்வர் கனவோடு இன்று ஏராளமானோர் உலவும் இந்த தமிழ்நாட்டில்தான் இதுவும் நடந்திருக்கிறது ) தனது தலைமையில் 1925-இன் இறுதி முதல் சமூக இயக்கமாக இயங்கி வந்த சுயமரியாதை இயக்கம்,1939 இறுதி முதல் தனது தலைமைக்கு வந்துவிட்ட நீதிக்கட்சி என்ற இரண்டையும் இணைத்து, 27-8-1944 அன்று சேலத்தில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டில், தேர்தலில் பங்கு பெறாத - அரசின் பட்டங்களைப் புறக்கணிக்கிற - மக்கள் விழிப்புணர்வு இயக்கமாக திராவிடர் கழகத்தை மாற்றியமைத்தார்திராவிடர் கழகம் என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்ட அன்று காலை அண்ணல்தங்கோ போன்றோர் தமிழர் கழகம் என்ற பெயரை முன்மொழிய அப்போது ஏற்றுகொண்ட பெரியாரிடம் அன்று நண்பகலில் யாரோ "நீ கன்னடனாயிற்றே! தமிழர் கழகம் என்று பெயர் வைத்தால் நாளைக்கு நீயே கூட அவ்வமைப்பில் இருக்க முடியாதே!" என்று கூறியதைத் தொடர்ந்து அமைப்பின் பெயரைத் 'திராவிடர் கழகம்' என்று மாலையில் பெரியார் மாற்றிக்கொண்டார் என்ற புளுகு அண்மைக் காலங்களில் சிலரால் பரப்பி வரப்படுகிறது.

அருகோ என்பவர், பெயர் மாற்ற நாளில் சத்திய மூர்த்தி அய்யர்தான் பெரியாருக்கு இந்த ஆலோசனையைக் கூறியதாக எழுதினார். ஆனால் அந்த சத்தியமூர்த்தியோ 28-3-1943 ல் இறந்து போனவர். இதை 'பெரியார் முழக்கம்' ஏட்டில் தோழர் விடுதலை இராசேந்திரன் சுட்டிக்காட்டிய பின், அது இராஜாஜி என்றும், பெரியாரோடு இருந்த சில பிற மொழியினர் என்றும் மாற்றி மாற்றி சொல்லப்பட்டு வருகிறது. இதற்கு எவ்வித ஆதாரங் களும் இல்லை. எனினும் ஒரு பொய்யையே திரும்பத் திரும்பக் கூறப்பட்டு வந்தால் அது மக்கள் மனதில் உண்மைச் செய்தியாகப் பதிந்துவிடும் என்ற, இட்லரின் செய்தித்துறை அமைச்சரான கோயபல்சின் செயல் திட்டத்தைப் பின்பற்ற முயற்சிக்கிறார்கள் போலும். அதன் தொடர்ச்சியாகவே மே 18 அன்று கோவையில் வெளியிடப்பட்ட 'நாம் தமிழர் கட்சி ஆவணம்' 13-ஆம் பக்கத்தில் கீழ்கண்டவாறு கூறுகிறது :

**"......திராவிடர்கள், இராசாசி இந்தியைத் திணித்த போது, அதை எதிர்த்துத் 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்று நாவலர் சோமசுந்தர பாரதியார், மறைமலை அடிகள் ஆகியோர் தலைமையில் திரண்டபோது, அவர்களை ஆதரிக்கிறாற் போல் ஆதரித்து பின், தங்களுடைய, தமிழரைத் தொடர்ந்து அடிமைப்படுத்தும் திட்டத்தின் கீழ், அண்ணல் தங்கோ முயற்சியினால் முகிழ்த்த தமிழர் கழகத்தை முறியடித்துத் திராவிடர் கழகத்தை நிறுவினர்."**

திராவிடர் என்ற சொல் குறித்தும் மேற்கண்ட மேற்கோளில் உள்ள பிற செய்திகள் குறித்தும்கூட பின்னொரு வாய்ப்பில் விவாதிக்கலாம். தமிழர் கழகம் என்ற பெயரிடும் முயற்சியைத் தோற்கடித்து திராவிடர் கழகம் என்ற பெயரை அவ்வமைப்புக்கு சூட்டிக்கொண்டனர் என்று கூறியுள்ளதற்கு மட்டும் இப்போது விளக்கம் தர விரும்புகிறோம்.

பார்ப்பனர் ஆதிக்கத்துக்கு எதிராகத்தான் பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றியது. அது 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' (South Indian Liberal Federation) என்ற அமைப்பாக மலர்ந்தது. அது கூட அரசியலிலும், அரசுப் பணிகளிலும் பார்ப்பனர்கள் தங்கள் மக்கள் தொகை விகிதாச் சாரத்துக்கு அதிகமாக மிகப்பெரிய அளவில் வகித்து வந்த பதவிகளை மட்டுமே பார்ப்பன ஆதிக்கம் என்பதாக வரையறுத்துக்கொண்டு இயங்கியது. ஆனால் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் அவற்றைவிட சமுதாயத்தில் இந்துமதம், வேதம், சாஸ்திரம், புராணம் என்ற பொய்மைகளின் துணையோடு பார்ப்பனர்கள் வகித்து வந்த சமூக மேலாதிக்கமே மற்றைய ஆதிக்கங்களுக்கான தோற்றுவாய் என்பதை உணர்ந்து சமூக மேலாதிக்கத்தின் மீதான போரை நடத்தி வந்தது. அவ்வாறு 'பார்ப்பனர் அல்லாதார்' என்று மூன்று விழுக்காட்டினராக வாழும் பார்ப்பனர்களை வைத்து தொண்ணூற்றேழு விழுக்காட்டு மக்களைக் குறிப்பிடுவது பொருத்தமற்றது என்றும், எதிர்மறைச் சுட்டாக உள்ள 'பார்ப்பனரல்லாதார்' என்ற சொல்லுக்கு மாற்றாக, இந்திப் போராட்ட சிறைவாச விடுதலைக்கு பின் 1939 மே மதம் முதல், உடன்பாட்டு சுட்டாக 'திராவிடர்' என்ற அடையாளத்தை முன்வைத்துச் செயல்படத் தொடங்கினார்.

பெரியாரே பின்னர் 9-12-1944 குடிஅரசில் வெளியான சொற்பொழிவொன்றில்......

**"நாம் ' இந்தியர் ' என்பதை மறுக்கிறபடியாலும், இன உணர்ச்சியும் எழுச்சியும் பெற வேண்டுவதாலும் ' திராவிடர் ' என்னும் பெயரைக் கொண்டோம் ! இது** புதிதாக உண்டாக்கியதல்ல. மறந்ததை நினைத்துக் கொண்டதேயாகும். நம்மைக் குறிக்க பார்ப்பனரல்லாதோர் என்கிறோம். அல்லாதார் என்பதை சேர்க்க நாமென்ன நாடோடிகளா ? நாம் ஏன் அல்லாதாவராக இருக்க வேண்டும்? சிலர் திராவிடன் என்பது வட மொழி என்பார்கள். அதைப் பற்றி கவலையோ ஆராய்ச்சியோ தேவை இல்லை. ' காபி ' ஆங்கிலச் சொல் என்று எவனாவது காபி குடிக்காமல் இருக்கிறானா? மேலும் நமக்கு திராவிடர் என்பது பெயரல்லவானால் வேறு எதுதான் பெயராகும்? பார்ப்பனரல்லாதார் என்பதா? பார்ப்பனரல்லாதார் என்று கூறிக்கொள்ளும் "ஜஸ்டிஸ்" கட்சிக்காரர்கள் எந்த வகையிலே பார்ப்பனரிலிருந்து வேறுபடுகிறார்கள்? நடை உடை பாவனையில், மதத்துறையில், வேஷத்தில் பார்ப்பானை விட இரண்டு மடங்காக அல்லவா இருக்கிறார்கள்! இந்த பார்ப்பனரல்லாதார் வீட்டுக் கலியாணம், கருமாதி, சாந்தி முகூர்த்தம், திவசம், பூஜை எல்லாம் பார்ப்பான் இல்லா விட்டால் ஆகாது; உத்தியோகத்தில் – தேர்தலில் மட்டும் பார்ப்பானுடன் போட்டி போட வேண்டும் என்றால் யார் ஒப்புக் கொள்வார்கள்?" ... எனக் குறிப்பிடுகிறார்

**பொய்யர்களே!**
**புளுகை**
**இத்தோடு**
**நிறுத்துங்கள்!**

பெரியாரால் விமர்சனத்தோடு மதிப்பிடப்பட்டுள்ள நீதிக் கட்சியின் மூல அமைப்பாக 1912ல் தொடங்கப்பட்ட 'சென்னை ஐக்கிய சங்கம்' அதன் முதலாம் ஆண்டு நிறைவில் "சென்னை திராவிடர் சங்கம்" என்றே பெயர் மாற்றம் பெற்றது. அதன் சார்பாக பார்ப்பனரல்லாத மாணவர்கள் சென்னை கல்லூரியில் படிக்க ஏதுவாக டாக்டர் நடேசனார் முன்னெடுப்பில் தொடங்கப்பட்டமாணவர் விடுதி ' திராவிடர் இல்லம் ' (Dravidian House) என்றே பெயர் பெற்றது. அதுமட்டுமல்ல, 1916 ல் தொடங்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் (நீதிக்கட்சி) கிளைகள் 'இராயப்பேட்டை திராவிடர் சங்கம்' 'ஜார்ஜ் டவுன் திராவிடர் சங்கம்' என்ற திராவிடப் பெயர்களிலேயே தொடங்கப்பட்டுள்ளன. அதற்கு முன்பாக 1892 ல் அயோத்திதாசப் பண்டிதரால் உருவாக்கப்பட்ட ஆதி திராவிட மகாஜன சபை 1894 இல் 'திராவிட மகாஜன சபை' என்ற பெயர் மாற்றம் பெற்றிருந்தது.

மேலும் 6-6-1927 அன்று கோவில்பட்டியில், சுவாமி விருதை சிவஞானயோகியாரால் தொடங்கி நடத்தப்பட்டு வந்த 'திராவிடர் கழக' த்தின் 18 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பெரியார் தலைமை தாங்கி ஆற்றிய உரை 26-6-1927 'குடிஅரசு' இதழில் வெளியாகியுள்ளது. அவ்வுரையில் -

**"..... சுவாமி சிவஞானயோகிகள் காலத்தில் மாத்திரம் இம்மாதிரி முயற்சிகள் தோன்றிற்று என்று நினைக்கிறீர்களா? என்று இந்த நாட்டில் ஆரியர்கள் கால் வைத்தார்களோ அன்று முதலே ஆரியர் – திராவிடர் என்கிற வேற்றுமையும், ஆரியர் சங்கம் – திராவிடர் சங்கம் என்கிற இயக்கங்களும் சுயமரியாதைக் கிளர்ச்சிகளும் இந்த நாட்டில் ஏற்பட்டு கொண்டு தான் இருக்கிறது"** என்று கூறியிருப்பதும் சுட்டிக்காட்டத்தக்க ஒன்றாகும்.

இவ்வாறு தமிழ்நாட்டு அரசியல் வெளியில் 'திராவிடர்' என்ற குறிப்போடு பல்வேறு அமைப்புகள் இயங்கியே வந்துள்ளன என்றாலும் இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளதை போல, 1939 மே மாதம் பெரியார் சிறையிலிருந்து வெளிவந்தது முதல் தனது அமைப்பிலும் 'திராவிடர்' என்ற அடையாளச் சொல்லோடு சில துணை அமைப்புகளை உருவாக்கியுள்ளார்.

1939 நவம்பர் இரண்டாம் நாள் சிறையிலிருந்து விடுதலையான பெரியாரின் சகோதரர் ஈ.வெ. கிருஷ்ணசாமி ஈரோட்டில் - "ஆரிய திராவிட ஆராய்ச்சிப் பள்ளி"யைத் தொடங்குகிறார். 1939 நவம்பர் 24 ஆம் நாளன்று ஈரோட்டில் 'திராவிட நடிகர் சங்கம்' உருவாகிறது. திராவிடர் மாணவர் கழகமும் உருவாகிறது. கோவையில் 19-11-1943 அன்று நடந்த 'சந்திரோதயம்' நாடகத்துக்கு வந்திருந்த பெரியாருக்கு கோவை மாவட்ட திராவிடர் கழகத்தார் வரவேற்புத்தாள் வாசித்தளித்துள்ளனர். (குடி அரசு - 18-12-1943) 26-11-1943 அன்று சேலம் தேவங்கர் பள்ளிக்கூடத்தில் பெரியார் தலைமையில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகக் கூட்டத்தில் இரண்டாவது தீர்மானமாக 'ஜஸ்டிஸ் கட்சிக்கு (S.I.L.F) தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்றிருக்கும் பெயரை "தென்னிந்திய திராவிடர் கழகம்" என்றும் ஆங்கிலத்தில் "South Indian Dravidian Federation" என்றும் பெயர் திருத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது (குடிஅரசு - 4-12-1943) 16-1-1944 அன்று சேலம் செவ்வாய்பேட்டை திராவிடர் கழக முதலாமாண்டு விழாவில் ஆற்றிய உரை "திராவிடர் கழகம் - பெயர்க் காரணம்" என்ற தலைப்பில் 12-2-1944 ஆம் நாளிட்ட குடிஅரசு ஏட்டில் வெளிவந்துள்ளது.

6-2-1944 அன்று புவனகிரியில் திராவிடர் கழக ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு பெரியார் ஆற்றிய உரை, "எதற்காக திராவிடர் கழகம் என்ற பெயர் கொடுக்கிறோம்? " என்ற தலைப்பில் 12-2-1944-ஆம் நாளிட்ட குடிஅரசு ஏட்டில் வெளிவந்துள்ளது. 24-4-1944 அன்று திண்டிவனம் திருவள்ளுவர் தமிழ்க் கழக விழாவில் உரையாற்றிய சொற்பொழிவாளர் குறள் வீ. முனுசாமி அவர்களுக்கு திண்டிவனம் நகர திராவிடர் கழகம் வரவேற்பு வாசித்தளித்த செய்தி 20-5-1944 நாளிட்ட குடிஅரசு இதழில் வெளிவந்துள்ளது. டி.கே எஸ் நாடகக் கம்பெனியிலிருந்து வெளியேற்றப்பட்ட இயக்க நண்பர் தோழர் நடிகர் டி.வி.நாராயண சாமிக்கு 18-2-1944 அன்று ஈரோடு டவுன் எலிமெண்டரி பாடசாலையில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் ஈரோடு திராவிடர் கழகத்தார் ஒரு வெள்ளிக் கோப்பையை பரிசளித்த செய்தி 4-3-1944 ஆம் நாளிட்ட 'குடிஅரசு' இதழில் வெளிவந்துள்ளது.

13-2-1944 அன்று சென்னை சவுந்தர்யம் மகாலில் நடைபெற்ற சென்னை ஜில்லா நீதிக்கட்சி மாநாட்டில் "தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்பதை 'சென்னை மாகாண திராவிடர் கட்சி' என்று மாற்றுமாறு சேலத்தில் நடைபெறப் போகும் மாகாண மாநாட்டிற்கு இம்மாநாடு தெரிவித்துக் கொள்கிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை 26-2-1944 ஆம் நாளிட்ட 'குடிஅரசு' ஏடு தெரிவிக்கிறது. 20-2-1944 அன்று திருச்சி நகராண்மைக் கழக பொதுமன்றத்தில் திருவொற்றியூர் சண்முகம் அவர்கள் தலைமையில் 'அண்ணா' கொடியேற்றி வைக்க, பெரியார் நிறைவுரை ஆற்றிய திருச்சி மாவட்ட நீதிக்கட்சியின் 15 ஆம் மாவட்ட மாநாட்டில் "அண்மையில் சேலத்தில் நடக்கவிருக்கும் நமது மாகாண மாநாட்டில் நமது கட்சியின் பெயரைத் 'திராவிடர் கழகம்' என்று மாற்ற

(6 ஆம் பக்கம்)

# அரசியல் சட்டத்துக்கு சவால் விடும் மனுதர்மம்

**கேள்வி : மனு.... மனு... என்கிறோமே, அது அரசாங்கத்திடமும் அதிகாரிகளிடமும் கோரிக்கை களை எழுதித் தருகிறோமே, அந்த மனு தானே!**

பதில்: அதுவும் மனு தான்; ஆனால், நாம் கூறுவது மனுதர்ம சாஸ்திரம் பற்றி.

**கேள்வி : அது என்ன மனுதர்ம சாஸ்திரம்?**

பதில் : அப்படி கேளுங்க. இப்ப, நம்முடைய வாழ்க்கையைப் பாருங்க. கோயிலுக்குப் போனால், அங்கே பார்ப்பான் தான் அர்ச்சகர். கல்யாணம்னு வந்தா, பார்ப்பனர்களை வைத்துதான் நடத்துறோம். புது வீடு கட்டி குடிபோகும் போதும், அவர்களைத் தான் கூப்பிடுகிறோம். இறந்தவர்களுக்கு 'திதி' கொடுக்கவும், அவருதான்! கோயில் கும்பாபிஷேகம் செய்யுறதும் அவருதான்!

**கேள்வி : உண்மைதான். எதுக்கு, இப்படி எல்லாத்துக்குமே பார்ப்பனர்களை மட்டுமே அழைக்க வேண்டும்? அவுங்க மட்டும்தான் ஆண்டவன் கிட்ட தொடர்பு கொள்ளும் உரிமை உண்டா?**

பதில் : சரியான கேள்வி. இங்கேதான் 'மனுதர்மம்' வருது. இந்த 'மனுதர்மம்' என்றால் என்னன்னு பார்ப்போமா?

இது சமஸ்கிருதத்துல எழுதப்பட்டது. பார்ப்பனர் வேதக் கருத்துகளை பாமர மக்களின் வாழ்க்கையில் புகுத்துவதற்கு வந்ததுதான் 'மனு தர்மம்'. சமுதாயத்தை 'பிராமணன்', சத்திரியன், வைசியன், சூத்திரன் என்று நான்கு பிரிவுகளாக பிரிச்சு, ஒவ்வொரு பிரிவினரும் இப்படித்தான் வாழ வேண்டும் என்று உத்தரவிடுகிறது இந்த 'மனுதர்மம்'.

**கேள்வி : இதை இன்னும் விளக்கமாகச் சொல்லுங்களேன்.**

பதில் : சொல்றேன். ரிக் வேதம் இப்படி கூறுகிறது.

'இந்த உலகம் முழுதும் கடவுளுக்கு கட்டுப் பட்டது. கடவுள் மந்திரங்களுக்கு கட்டுப்பட்டவர். மந்திரம் பிராமணர்களுக்கு கட்டுப்பட்டது" என்று ரிக்வேதம் கூறுகிறது.

ஆக உலகமும், கடவுளும் "பிராமணர்"களுக்கு மட்டுமே உரியது என்று அவர்களே எழுதிக் கொண்டார்கள். அதை நாமும் கேள்விக் கேட்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டு, எல்லா நிகழ்ச்சி களுக்கும் பார்ப்பனர்களையே அழைக்கிறோம். மனுதர்மம் நம் மீது சுமத்தும் இழிவுகளை நாம் பெருமையாகக் கருதுகிறோம்.

மனுதர்மம் கூறும் ஒரு சில கருத்துகளைப் பாருங்கள்:

"படைக்கும் கடவுள் பிரம்மாவின் முகத்தி லிருந்து 'பிராமணன்' பிறந்தான்;

தோள்களிலிருந்து 'சத்திரியன்' பிறந்தான். (அரசன், ஆட்சி செய்பவன்)

தொடையிலிருந்து 'வைசியன்' பிறந்தான். (வணிகம் செய்கிறவன்)

கால்களிலிருந்து 'சூத்திரன்' பிறந்தான். (அடிமைகளாக வாழ வேண்டியவர்கள்-இழி பிறவி)

- இப்படி யஜுர் வேதம் கூறுகிறது.

அந்த வேதக் கருத்தை அப்படியே 'மனு தர்மம்' ஏற்றுக் கொண்டு, மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பிரிவும் எப்படி வாழ வேண்டும் என்று கட்டளையிடுகிறது! மீறுவோருக்கு அளிக்கப்பட வேண்டிய தண்டனைகளையும் வற்புறுத்துகிறது.

சூத்திரன் - பார்ப்பானின் வைப்பாட்டி மகன், அடிமை; வேதத்தையோ கல்வியையோ கற்க உரிமை இல்லாதவன் என்று கூறுகிறது.

"வேதத்தை சூத்திரன் படித்தால் நாக்கை வெட்ட வேண்டும். காதால் கேட்டால் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்" என்று உழைக்கும் மக்களை அவமதிக்கிறது.

**கேள்வி : அப்படியா! நம்பவே முடியவில்லையே! இப்படி எல்லாம்கூட பார்ப்பான் சட்டங்கள் வைத்திருக்கிறானா? இப்போதும் அப்படி இருக்கிறதா?**

பதில் : ஆமாம்! ஆமாம்!

இப்போதும் 'மனுதர்மம்' சட்டப்படி தடை செய்யப்படவில்லை. நமது அரசியல் சட்டத்தில் இந்துக்களுக்கான சட்டங்களில் இந்த 'மனுதர்மம்' தான் மூல நூலாக ஏற்கப்பட்டுள்ளது. நமது சமுதாயத் தலைவர்களான பெரியாரும், அம்பேத்கரும், இந்த மனுதர்மத்தை எதிர்த்து - எரித்தார்கள். இன்னும் ஒரு உண்மையை கூறுகிறேன். அது வியப்பாக இருக்கும்.

**கேள்வி : சொல்லுங்கள்; சொல்லுங்கள்.**

பதில் : இந்த மனுதர்மம் தான், வெள்ளைக்காரன் நம்மை ஆண்ட காலத்தில் 1772 ஆம் ஆண்டிலிருந்து நமது நாட்டின் சட்டமாகவே இருந்தது. கொலை, கொள்ளை, திருட்டு போன்ற குற்றங்களுக்கு மனுதர்மத்தின் அடிப்படையிலேயே நீதிமன்றங் களில் தண்டனைகள் வழங்கப்பட்டன. லண்டனில் இருந்த உச்சநீதிமன்றமான 'பிரிவி கவுன்சில்' வரை இந்தியர்களின் வழக்கில் இதுதான் பின்பற்றப் பட்டது. 'பிராமணன்' கொலை செய்தால், உச்சிக் குடுமியிலிருந்து, மயிரை மட்டும் வெட்டினால் போதும். அதுவே 'சூத்திரன்' கொலை செய்தால் தலையையே வெட்ட வேண்டும். வெள்ளைக்கார நீதிபதிகளுக்கு மனு தர்மத்திலிருந்து இதை எல்லாம் எடுத்துக்கூற நீதிமன்றங்களிலேயே பார்ப்பனர்கள் நியமிக்கப்பட்டார்கள். பிறகு, இந்த மனுதர்மத்தை நீதிபதிகளே நேரடியாக அறிந்திட 1801 இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கமே ஹென்றி தாமஸ் கோல் புருச் என்பவரை நியமித்து, 'மனுதர்மத்தை' ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தது. 1860 ஆம் ஆண்டில்தான் கிரிமினல் குற்றங்களுக்கு மனுதர்ம அடிப்படையில் தண்டனை வழங்குவது நிறுத்தப்பட்டது. ஆனால், குடும்பம், மதம், வாரிசுரிமை, சாதி, சொத்துப் பிரச்சினை போன்ற சிவில் வழக்குகளில் 'மனுதர்ம'த்தின் அடிப்படையிலேயே தீர்ப்புகள் வழங்கப்பட்டன. சுதந்திரத்துக்குப் பிறகு 1950 ஆம் ஆண்டு அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகுதான் 'மனுதர்மத்துக்கு பதிலாக சட்டத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கும் முறை வந்தது. மனுதர்மமே காலம் காலமாக சட்டமாக இருந்த காரணத்தினால்தான் சூத்திரர்களான தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுததப்பட்ட மக்களும் கல்வி மறுக்கப்பட்டு படிக்காதவர்களாக தற்குறிகளாக இருந்தனர்.

இப்போது கல்லூரிகளில் சேருவதற்கு 'பி.சி.', 'எம்.பி.சி.', 'எஸ்.சி.', 'எஸ்.டி.' என்றெல்லாம் மனு போடுகிறோம் அல்லவா? இவை எப்படி வந்தன? நமது தலைவர்கள் பெரியாரும், அம்பேத்கரும் போராடி நமக்கு பெற்றுத் தந்த உரிமைகள், 'மனுதர்மம்' தலை தலைமுறையாக நம்மை படிக்காத மக்களாக, மடையன்களாக வைத்திருந்த சமூகக் கொடுமைக்கு நியாயம் கிடைக்க, பார்ப்பனரல்லாத நாம் போராடிப் பெற்றுள்ள உரிமைகள், அந்த அளவுக்கு 'மனுதர்மம்' என்ற பார்ப்பன கட்டளைகள், நம்மை எல்லாம் அழித்து, ஒழித்தது.

**கேள்வி: ஒரு சந்தேகம்; பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்பதற்கும், இப்போதுள்ள சாதிக்கும் என்ன தொடர்பு?**

பதில் : நல்ல கேள்வி! முதலில் வர்ணப் பிரிவுகள் தான் இருந்தன. இந்த நான்கு வர்ணப் பிரிவுகளில் மனுதர்மத்தை மீறி ஆண் பெண்களின் வர்ணக் கலப்பில் உருவான சந்ததியினரே சாதிகளாக மாறினர் என்ற மனுவே கூறுவதை அம்பேத்கர் எடுத்துக் காட்டுகிறார். நான்கு வர்ணங்களிலிருந்து இன்று பல்லாயிரக்கணக்கான சாதிகள் வந்து விட்டன. ஆனால், அய்யர், அய்யங்கார், சாஸ்திரி என்று பார்ப்பனர்கள் சாதிகளாக பிரிந்தாலும், அனைவரும் மனு கூறிய வர்ணாஸ்ரமப்படி தங்களை 'பிராமணர்' என்றே அடையாளப்படுத்தி காயத்ரி மந்திரம் ஓதி பூணூல் போட்டுத் திரிகிறார்கள். சத்திரியர், வைசியர்கள் எல்லாம் சூத்திரர்களாக்கப்பட்டு விட்டனர். சூத்திரர்களுக்கும் கீழானவர்கள் என்று தீண்டப்படாத மக்களை என்று உழைக்கும் பெருமைக்குரிய மக்களை ஒதுக்கி விட்டனர். ஆனாலும், சாதிகளாக பிரிந்து கிடக்கும் நாம் 'மனு'வின் பார்ப்பன கட்டளைகளையே காலம் காலமாய் ஏற்றுக் கொண்டு நம்மை நாமே இழிவானவர்களே என்று ஒப்புக் கொண்டு வாழ்க்கை முறையாக வாழ்ந்து வருகிறோம்.

**கேள்வி : என்ன கொடுமையடா! சரி; இப்போது அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு என்ன நிலை?**

பதில் : சொல்கிறேன். நமது நாடு ஜனநாயக நாடு என்று சொல்லப்படுகிறது. எனவே சட்டம் அனைவருக்கும் பொதுவாக இருப்பது அவசியம். அதனால் மனுதர்மத்தின் 'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' பேசும் பார்ப்பனக் கொடுமைகள் ஓரளவுக்கு சட்டத்தில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

**கேள்வி : எதில், எதில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது?**

பதில் : கூறுகிறேன். மனிதர்கள் அனைவரும் சமமாகவே முடியாது; பிராமணனை வணங்க வேண்டும்; சூத்திரன் அடிமை என்கிறது மனுதர்மம். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிறது அரசியல் சட்டம்.

சூத்திரர்களுக்கு, பெண்களுக்கு கல்வி தரக் கூடாது என்றது மனுதர்மம். 6 வயது முதல் 14 வயது வரை கல்வியை அனைவருக்கும் கட்டாயமாக்கி யிருக்கிறது, நமது அரசியல் சட்டம். பெண்களுக்கு குழந்தையாக இருக்கும்போதே திருமணம் செய்துவிட வேண்டும் என்கிறது மனுதர்மம். 18 வயதுக்கு முன் திருமணம் செய்வது குற்றம் என்கிறது நமது சட்டம். 'சூத்திரன்' இழிவானவன் என்கிறது மனுதர்மம். தீண்டாமை குற்றம் என்கிறது அரசியல் சட்டம்.

- இப்படி மனுதர்மம் வலியுறுத்திய பல பார்ப்பன கட்டளைகளை அரசியல் சட்டம் ஏற்கவில்லை.

**கேள்வி : அப்படியானால், மனுதர்மம் சட்டத்துக்கு எதிரானது தானே? அதைத் தடை செய்ய வேண்டாமா?**

பதில் : இதுதான் நியாயமான கேள்வி. அதைத் தான் 'பெரியார் திராவிடர் கழகமும்' வற்புறுத்து கிறது. அதற்காகவே மனுதர்மத்தை தீயிட்டு எரிக்கும் போராட்டத்தை எதிர் வரு:ம நவம்பர் 26 இல் தமிழகம் முழுதும் நடத்தத் திட்டமிட்டுள்ளது. அதை மக்களிடம் விளக்கவே இந்தப் பரப்புரைப் பயணம்.

**கேள்வி : உண்மையில் மிக நியாயமான போராட்டத்தை கையில் எடுத்துள்ளது 'பெரியார் திராவிடர் கழகம்'. அரசியலுக்குப் போனால் பணம் கிடைக்கும்; பதவி கிடைக்கும் என்று பலரும் ஆலாய்ப் பறந்து கொண்டிருக்கும்போது, சமூக அக்கறையோடு விளம்பரம் கிடைக்காத ஒரு முக்கிய பிரச்சினைக்காக போராட வந்திருக்கிறீர்கள். ஆனாலும் ஒரு சந்தேகம். இப்போதும் மனுதர்மம் இருக்கிறதா?**

பதில் : சரியான கேள்வி. இதற்கு விளக்கமாக பதில் சொல்ல வேண்டும். இந்து சட்டத்துக்கான மூல நூல்களில் ஒன்று மனுதர்மம் என்று ஏற்கனவே கூறினோம். நம்முடைய மக்களின் வாழ்க்கையைப் பாருங்கள்!

மனுதர்மம் கூறியவாறு பார்ப்பான்தான் மேலானவன் என்று நாம் இப்போதும் ஏற்றுக் கொண்டுள்ளோம். அவர்களையே திருமணத்துக் கும், வீடு திறப்புக்கும், பூசைகளுக்கும், சடங்கு களுக்கும் என அனைத்து நிகழ்வுகளுக்கும் அழைத்துக் கொண்டிருக்கிறோம்.

அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த பிறகும் மனுதர்மத்தையே பின்பற்றி, இழி மக்கள் என்பதை ஒப்புக் கொண்டு வருகிறோம். தீண்டாமைக்கு எதிராக சட்டம் வந்து விட்டாலும், தீண்டப்படாத மக்கள் மீது சாதி வெறியர்கள் தாக்குதல் தொடருகிறது. பிறசாதியினர் வாழும் பகுதிகளில் சைக்கிளில் போகக் கூடாது; செல்போன் பேசக் கூடாது; நாய் வளர்க்கக் கூடாது; ஊர்த் திருவிழாக்களில் பங்கேற்கக் கூடாது; முடி வெட்ட முடியாது; தேனீர்க் கடைகளில் இரட்டைக் குவளை; சுடுகாட்டில்கூட பேதம் என்று இப்போதும் அடக்குமுறைகள் நீடிக்கிறதே. இன்னமும் ஊர் வேறு, சேரி வேறு என்று பிளந்து கிடக்கிறதே. சுடுகாட்டில்கூட சாதிக்கொரு சுடுகாடு இருக்கிறதே; மனிதன் மலத்தை மனிதன் அள்ளு கிறானே; சாக்கடைக் குழிகளில் அடைப்புகளை அகற்ற 'கீழ் சாதி' மனிதன் இறங்கி, மூச்சுத் திணறி சாகிறானே; ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்கள் அடக்குமுறைகளை சந்திக்கிறார்களே; வன்முறைக்கு உள்ளாகிறார்களே! தீ வைத்து எரிக்கப்படுகிறார் களே; பெண் சிசுக் கொலைகள் நடக்கிறதே; தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் 'பெண் குழந்தைகள் திருமணம்' நடக்கும் செய்திகள் வருகின்றனவே!

திருமணங்களில் பார்ப்பானுக்கு உயர்ந்த மந்திரம்; சூத்திரனுக்கு தாழ்ந்த மந்திரம் என்று பார்ப்பன புரோகிதர்கள் ஒவ்வொரு வகை திருமண மந்திரங்களையும் சடங்குகளையும் நடத்திக்

(4 ஆம் பக்கம்)

# களப் பணியில் கழகத் தோழர்கள்

### பல்லடம் ஒன்றிய கழக முடிவுகள்

20.5.2012 அன்று பல்லடம் ஒன்றிய கழக அமைப்புக் கூட்டம் ஜி.ஆர்.ஆர். திருமண மண்டபத்தில் மாவட்ட தலைவர் சு.துரைசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஜாதி ஒழிப்புப் பிரச்சாரப் பயணம், அய்ந்துநாட்கள், 14 பகுதிகளில் நடத்த முடிவு செய்யப்பட்டது. பல்லடம் ஒன்றிய புதிய பொறுப்பாளர்களும் தேர்வு செய்யப்பட்டார்கள். பொறுப்பாளர்களை மாவட்ட தலைவர் அறிவித்தார்.

ஒன்றிய அமைப்பாளர் - சி. விசயன்; ஒன்றிய தலைவர் - நா.முத்துக்குமார்; ஒன்றிய செயலாளர் - க. ஆறுமுகம்; ஒன்றிய துணை தலைவர் - சு.வடிவேலு; ஒன்றிய துணை செயலாளர் - நா. ரமேசு; ஒன்றிய பொருளாளர் - மா.பிரகாசு. ஒன்றிய செயற்குழு உறுப்பினர்கள்: ப. குணசேகரன், நா.சின்னச்சாமி, ராஜீவ்காந்தி, சேகர், சண்முகசுந்தரம், வடிவேலு, க.குமார், பொன்னுச்சாமி, சி. இரங்கசாமி, செல்லதுரை, சுந்தரி. தமிழ்நாடு மாணவர் கழகம் - பல்லடம் ஒன்றியம் - செந்தில் குமார், இரா. மணிகண்டன், இராமராஜ், ப.பொன்னுச்சாமி.

அய்யம்பாளையம் தோழர் வடிவேலுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. புதிய தோழர்களும் பயிலரங்கம் ஏற்பாடு செய்வது. மனு தர்மம் எரிப்பு போராட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொள்வது.

### சேலம் ஆத்தூரில் மனுதர்ம எரிப்பு போராட்ட விளக்கப் பொதுக் கூட்டம்

சேலம் மாவட்டம் ஆத்தூர் பேருந்து நிலையம் அருகில், பெரியார் திராவிடர் கழகம் சார்பாக, திராவிடர் இயக்க நூற்றாண்டு விழா மற்றும் மனுதர்ம எரிப்புப் போராட்ட விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. 8.5.2012 செவ்வாய் கிழமை அன்று மாலை 6 மணிக்கு நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆத்தூர் மகேந்திரன் தலைமையேற்றார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினார். தோழர் சிற்பி இராசன் மந்திரமில்லை தந்திரமே நிகழ்ச்சியை நடத்தி விளக்கமளித்தார். நரசிங்கபுரம் மணி உரையாற்றினார். கணபதி நன்றியுரையாற்றினார். அன்று இரவு கங்கையம்மன் கோவில் தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கழகத்தின் பரப்புரை பலகையை கழகத் தலைவர் திறந்து வைத்தார். தோழர்கள் அந்தப் பலகையில் தினமும் ஒரு கருத்தை எழுதி பரப்புரை செய்து வருகின்றனர்.






### நாமக்கல் மல்லசமுத்திரம் ஒன்றிய கழக துவக்க விழா

7.5.2012 திங்கட்கிழமை அன்று மாலை 6 மணிக்கு நாமக்கல் மாவட்டம் மல்ல சமுத்திரத்தில் ஒன்றிய பெரியார் திராவிடர் கழக துவக்கவிழா மற்றும் பெரியாரியல் விளக்கப் பொதுக் கூட்டம் நடை பெற்றது. மேட்டூர் டிகேஆர். இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பொதுக் கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் பெரியண்ணன் தலைமையேற்றார். தோழர்கள் கோபி, சங்கர், தீனா, அன்பழகன், ம.தி.மு.கவை சார்ந்த வைகோ கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாமக்கல் மாவட்ட செயலாளர் சாமிநாதன், இளம்பிள்ளை கோகுல கண்ணன் ஆகியோர் உரைகளை தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். சிற்பிராசன் நிகழ்ச்சியின் துவக்கத்திலும், தோழர் களின் உரைகளுக்கு இடையேயும் 'மந்திரமா, தந்திரமா' அறிவியல் விளக்க நிகழ்ச்சிகளை நடத்தினார்.

சில மாதங்களுக்கு முன்பு முதல் கலந்துரையாடல் கூட்டம் கூட்டி, அதில் முடிவு செய்யப்பட்ட தீர்மானத்தின்படி இந்த துவக்க விழா பொதுக் கூட்டத்தை தோழர்கள் சிறப்பாக செய்திருந்தனர். பேருந்து நிலையம் முதல் பொதுக் கூட்ட மேடை வரை சுமார் ஒரு கி.மீ. தூரத்திற்கு கொடிகளை கட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது. மாயாவி நன்றி கூறினார். ரமேஷ், மகேஷ், குட்டி, சென்னிமலை, மோகன் ஆகியோருடன் இணைந்து கண்ணன் இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்திருந்தார். திருச்செங் கோடு, குமாரபாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து தோழர்கள் குடும்பத்துடன் வந்திருந்தனர். அதே போல இளம்பிள்ளை, சேலம் நகரம் ஆகிய பகுதிகளில் இருந்தும் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர். அனைவருக்கும் இரவு அசைவ உணவு வழங்கப்பட்டது.

### 'குடிஅரசு' வாசகர் வட்டத்தில் வந்தியதேவன்

13.5.2012 அன்று வடசென்னை பெரம்பூரில் இராஜலட்சுமி அரங்கத்தில் குடிஅரசு வாசகர் வட்டத்தின் சார்பாக ம.தி.மு.க. வெளியீட்டு அணி செயலாளர் ஆவந்தியதேவன், 'நீதிக்கட்சியின் அளப் பரியா சாதனைகள்' என்ற தலைப்பில் ஆய்வு சொற் பொழிவு நிகழ்த்தினார். மா.வேழவேந்தன் தலைமை யேற்க, ஓவியர் கிருபா வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர் குமாரதேவன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நிறைவாக சி.பாஸ்கர் நன்றி கூறினார். வாசகர் வட்டத்தின் சார்பாக ம.தி.மு.க. வெளியீட்டு அணி செயலாளருக்கு கேடயமும், பொன்னாடை யும் வழங்கப்பட்டது. பெருமளவில் தோழர்கள் திரண்டிருந்தனர்.

### இளம்பிள்ளையில் திராவிடர் இயக்க நூற்றாண்டுவிழா

16.5.2012 புதன் கிழமை அன்று மாலை 6 மணி அளவில் சேலம் மாவட்டம் இளம்பிள்ளை பேருந்து நிலையம் அருகே, கழகம் சார்பாக, திராவிடர் இயக்க நூற்றாண்டு விழா மற்றும் மனுதர்ம எரிப்புப் போராட்ட விளக்கப் பொதுக் கூட்டம் நடை பெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப் புரையாற்றினார். புதுகை பூபாளம் கலைக் குழு வினரின் பகுத்தறிவு கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கிறார்களே! பார்ப்பான் பூணூல் போட்டுக்கொண்டு, தன்னை "பிராமணன்" என்று அடையாளப்படுத்துகிறானே! இதன் அர்த்தம் என்ன? என்னைத் தவிர மற்றவர்கள் சூத்திரர்கள், எனது அடிமைகள் என்பதுதானே! வீடுகளை வாடகைக்கு விடுவதில்கூட சாதி பார்க்கப்படுகிறதே; பெரும்பாலான திருமணங்கள் ஒரே சாதிக்குள் தானே நடக்கின்றன! மீறி நடந்தால் பெற்றோர்களே கொலை செய்கிறார்களே! சாதி மாறி திருமணம் செய்தால் வெட்டுவோம் என்று சாதித் தலைவர்கள் மிரட்டுகிறார்களே! சாதி மறுப்பு திருமணங்களை நடக்க விட மாட்டோம் என்று மாநாடு கூட்டி தீர்மானங்களைப் போடுகிறார்களே!

இப்படி ஏராளமாக பட்டியல் போட முடியும். இவையெல்லாம் 'மனுதர்மம்' விதித்த கட்டளை தானே! மனுதர்மத்தின் சட்ட ஆட்சி விடைபெற்று விட்டது என்றாலும், அந்த இழிவான வாழ்க்கை முறை தானே இப்போதும் நம்மை ஆண்டு கொண்டிருக்கிறது. நம்மை பிளவுபடுத்தி சீரழித்து நமக்குள்ளே மோதவிட்டு ரத்தம் குடித்துக் கொண்டிருக்கிறதே. இந்த சமத்துவமற்ற அவல வாழ்வியல் நீடிக்கலாமா? சொல்லுங்க; இது நியாயம் தானா?

*கேள்வி : சரியான விளக்கம். நீங்கள் கூறுவது முற்றிலும் நியாயம். உண்மை; நேர்மை; இதோ, நாங்களும் தீப்பந்தங்களை ஏந்தி வருகிறோம். மானமுள்ள ஒவ்வொரு மனிதனும் ஓங்கி ஒலிப்போம்!*

'எரிந்து பொசுங்கட்டும் மனுதர்மம்!'

**(தோழர்கள் இதை துண்டறிக்கையாக அச்சிட்டு வழங்கலாம்)**

## மக்கள் உயிருடன் விளையாடும் மருந்து நிறுவனங்கள்!

மத்தியில் ஆளும் ஆட்சி மக்களுக்காகக் கவலைப்படுவதைவிட, பார்ப்பன-பன்னாட்டு நிறுவனங்களின் நலன் காக்கவே துடிக்கிறது. மக்கள் வாழ்க்கையில் மருத்துவ நலன் பிரிக்க முடியாத ஒன்றாகிவிட்டது. இந்த நிலையில் ஒரு காலத்தில் இந்தியாவில் அமலில் இருந்த காப்புரிமைச் சட்டத்தினால் மருந்துகள் குறைவான விலையில் கிடைத்து வந்தன- பன்னாட்டு நிறுவனங்களின் நலனுக்காக இந்த சட்டத்தை விலக்கிக் கொண்டுவிட்டது, இந்திய பார்ப்பன ஆட்சி. இதனால் மருந்துகள் விலை கடுமையாக உயரத் தொடங்கி விட்டன. சமீபத்தில் உச்சநீதிமன்றம் இது தொடர்பாக ஒரு கேள்வியை அரசிடம் வைத்தது. இந்தியாவில் இன்றியமையாத மருந்துகள் விலை, ஏழை எளிய மக்கள் பயன்படுத்துமளவுக்கு அரசு கட்டுப்பாட்டில் இருக்கிறதா என்பதே அந்தக் கேள்வி. இதற்கு பதிலளிக்காமல் அரசுத் துறைகள் மவுனம் சாதித்து வருகின்றன. இந்திய ஆட்சி, மருந்துவத் துறையில் 100 சதவிதம் அன்னிய மூலதனத்தை அனுமதித்துவிட்டதால், பன்னாட்டு நிறுவனங்களின் சந்தையாக இந்தியா மாற்றப்பட்டுவிட்டது. இன்றியமையாத மருந்துகளாக 348 மருந்துகளை இந்திய அரசு பட்டியலிட்டுள்ளது. இதில் விலைக் கட்டுப்பாடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 37 மருந்துகளுக்கு மட்டும்தான். மற்ற 311 மருந்துகளை என்ன விலையிலும் விற்கலாம்.

சந்தையில் தங்கள் உற்பத்தி மருந்துகளை விற்பதற்கு மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் கோடி கோடியாக பணத்தை லஞ்சமாக வாரி இறைக்கின்றன. 'ராணிடின்' என்ற குடல் புண்ணுக்காக மருந்து தயாரிக்கும் நிறுவனம், கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் 466 மருத்துவர்களை துபாய்க்கு உல்லாசப் பயணம் அழைத்துச் சென்று, ரூ.233 கோடி செலவிட்டுள்ளது. 'டிரக்கோ' எனும் அல்சருக்கான மாத்திரையை மருத்துவர்கள் நோயாளிகளுக்கு பரிந்துரைத்து எழுதித் தருவதற்காக ஒரு மருத்துவருக்கு சராசரியாக ஒன்றரை லட்சம் ரூபாயை இந்நிறுவனம் செலவிட்டுள்ளது. இந்தச் செலவுகள் எல்லாம் மக்கள் தலையில்தான் விழுகிறது. உயிர் காக்கும் மருந்தான 'மெரோபனம்' என்ற மருந்து அதிகபட்ச விலையாக ரூ.2300-க்கு விற்கப்படுகிறது. ஆனால், மருந்து கடைகளுக்கும், மருத்துவர்களுக்கும் இது ரூ.470 க்குத்தான் விற்கப்படுகிறது. மற்றொரு அதிர்ச்சியான செய்தி இது. ம.பி. மாநிலத்தில் நடந்த சம்பவம்; ஆண்களின் 'செக்ஸ்' உணர்ச்சியைத் தூண்டுவதற்கான 'தடாலில்' எனும் மருந்தை இரத்த அழுத்தத்துக்கு பயன்படுத்த முடியுமா என்று ஆராய ஒரு மருந்து நிறுவனம் திட்டமிட்டது. சில மருத்துவர்களை கைக்குள் போட்டுக் கொண்டு அப்பாவி மக்களிடம் பரிசோதித்துப் பார்த்தது. இதில் இரத்த அழுத்த நோய்க்குள்ளான பலர் இறந்து விட்டார்கள். எவ்வளவு பெரிய கொடுமை! இந்தக் கொடூரமான கொலைக்குக் காரணமான மருந்து உற்பத்தி நிறுவனத்தின் மீது, இந்திய ஆட்சி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த முறைகேடான சோதனையை நடத்திய மருத்துவர்களுக்கு மட்டும் ரூ5000 அபராதம் விதித்து மூடி மறைத்து விட்டார்கள். இப்படி மக்களை சுரண்டி சாகடிக்கும் இந்த பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவின் தொழிலாளர்கள் சட்டங்களையும் மதிப்பதில்லை. 'பைசா' எனும் அமெரிக்க நிறுவனம், 'பிகாசில்ஸ்' எனும் சத்து மாத்திரைகளை தயாரிக்கிறது. இந்தியாவில் தனது நிறுவனத்துக்கு தொழிலாளர்களோ, விற்பனை பிரதிநிதிகளோ ஒருவர்கூட கிடையாது என்று அப்பட்டமாக பொய் கூறுகிறது, இந்த நிறுவனம். ஆனால், தொழிலாளர் ஆணைய அதிகாரிகள் இந்நிறுவனத்துக்காக 1985 தொழிலாளர்கள் பணிபுரிவதாக உறுதி செய்துள்ளனர். தொழிலாளர்களுக்கான சட்டப்படியான சலுகைகள், உரிமைகளை வழங்காமல் இருப்பதற்கே இந்தப் பொய். இப்படித்தான் ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து மருந்து நிறுவனங்கள், இந்தியாவின் சட்டங்களையே மதிக்காமல், கோடி கோடியாய் சுருட்டுகிறார்கள். இந்திய ஆட்சி இதற்கு பச்சைக் கொடி காட்டுகிறது. (தகவல்கள்: 4.2.2012 'தீக்கதிர்' ஏட்டில் வெளி வந்த கட்டுரை)

# பெண்ணின் பெயர் அடையாளத்தையும் பெயர்த்து எறியும் மனுதர்மம்

***நாட்டில் 'மனுதர்மமே' அதிகாரத்தோடு ஒவ்வொரு துறையிலும் கொடிகட்டி திமிரோடு பறந்து கொண்டிருக்கிறது என்பதற்கு சான்றாக வந்து கொண்டிருக்கும் செய்திகளின் தொகுப்பு:***

*திருமணமான ஒரு பெண், கணவனைச் சார்ந்து வாழ வேண்டும்; 'சுயாதீனமாக' அதாவது சுய புத்தியைப் பயன்படுத்தும் உரிமையே இல்லை என்கிறது பார்ப்பன மனுதர்மம். இந்த மனுதர்ம சிந்தனைதான் இன்றும் சமூகத்தின் வாழ்க்கை முறை. 'இந்து' நாளேட்டில் வாரம்தோறும் பெண்ணியம் பற்றி கட்டுரை எழுதி வரும் கல்பனா சர்மா (மே 27) எழுதியுள்ள கட்டுரையில் மராட்டி யத்தில் தான் சந்தித்த, புதிதாக திருமணம் செய்து கொண்ட ஒரு பெண்ணைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.*

*மராட்டியத்தில் பழமையில் ஊறிய குடும்பத்தில் வந்தவர் அந்தப் பெண். திருமணம் முடிந்தவுடன், கணவர் வீட்டில், பெண்ணின் பெயரையே மாற்றி விடும் வழக்கம் இந்தியாவின் பல பகுதிகளில் இன்றும் தொடருகிறது என்று கூறுகிறார் கட்டுரையாளர். உஷா என்ற இந்தப் பெண்ணின் பெயர் திருமணத்துக்குப் பிறகு மாப்பிள்ளை வீட்டாரால் 'தபசியா' என்று மாற்றப்பட்டுவிட்டதாம். இந்த மாற்றத்தை எந்த எதிர்ப்பும் இல்லாமல் பெண்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். திருமணம் முடிந்து கணவன் வீட்டில் காலடி எடுத்து வைத்தவுடன், பிறந்து வளர்ந்த பெற்றோரின் உறவுகள் துண்டிக்கப்பட்டு, பெண்ணின் சுதந்திரமும் பறிக்கப்பட்டு, கணவன் வீட்டுக்கு, ஒரு வீட்டு வேலைக்காரியாகவும் குழந்தைகளைப் பெற்றுத் தரும் எந்திரமாகவும் செயல்பட வேண்டியிருக்கிறது. ஏதோ பெயர் தானே மாற்றப்படுகிறது என்று இதை எளிதாக எடுத்துக் கொளளாமல், ஏன் இப்படி நடக்கிறது? இது தேவை தானா? இதனால் திருமண வாழ்க்கையில் மாற்றம் வந்து விடப் போகிறதா என்ற கேள்விகளை எழுப்ப வேண்டும் என்கிறார் கட்டுரையாளர் கல்பனா. பெரும்பாலான குடும்பங்களில் பெண்ணின் பெயர் மாற்றப்படவில்லையானாலும், திருமணத்துக்குப் பிறகு பெற்றோரின் தலை எழுத்து (இனிஷியல்) நீக்கப்பட்டு, கணவனின் பெயர் தலை எழுத்தாக மாற்றப்படுகிறது. மனைவியின் பெயருக்குப் பிறகு கணவரின் பெயரும் இணைக்கப்படுகிறது. ஆனால் கணவனின் பெயர் எந்த மாற்றத்துக்கும் உள்ளாவதில்லை. ஏற்கனவே இருந்த நிலையிலேயே நீடிக்கிறது. இவை அனைத்துமே பார்ப்பன 'மனுதர்மம்' விதித்த ஆணைதான். "யவ்வனத்தில் கணவன் ஆஞ்ஞையில்" (திருமணமான பிறகு கணவனை மட்டுமே சார்ந்து) வாழ வேண்டும் என்ற மனுதர்மக் கொள்கையே அடிமை வாழ்வுக்கு அவர்களை இப்படி தயார்படுத்துகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் பார்ப்பன மனுவின் தர்மமே இன்றும் வழி நடத்திக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்று.*

*இதற்கு நேர் மாறாக, மனுதர்ம பார்ப்பனிய அடிமை வாழ்க்கை முறை இல்லாத பிரான்ஸ் நாட்டிலிருந்து ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டியுள்ளார் கல்பனா. பிரான்சு நாட்டின் அதிபராக அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பிரான்காய்ஸ் ஆலன்டே; மக்களால் வாக்களிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அவரது மனைவியோ ஆலன்டேயை திருமணம் செய்து கொள்ளாமலே அவருடன் சேர்ந்து வாழ்கிறார். டிரயர்வெய்பர் என்ற 47 வயதுடைய பெண் பத்திரிகையாளர். 20 ஆண்டுகளாக அரசியல் துறையில் பத்திரிகையாளராக செயல்பட்டு வரும் இவர், இனியும் பத்திரிகைத் தொழிலையே தொடரப் போவதாகவும், அதிபரோடு சேர்ந்து வாழ்ந்தாலும் பொருளாதாரத்தில் எவரையும் சார்ந்து நிற்கத் தயாராக இல்லை என்றும் கூறியுள்ளார். ஒரு கணவனுக்கு பணிவிடை செய்பவராக நான என்னை வளர்த்துக் கொள்ளவில்லை. சுதந்திரத்தின் அடிப்படையிலேயே என்னுடைய வாழ்க்கையை கட்டமைத்து வந்திருக்கிறேன்.* (I have not been raised to serve a husband. I built my entire life on the idea of Independence) *என்று 'நியுயார்க் டைம்ஸ்' ஏட்டுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். திருமணமே வேண்டாம் என்றோ, திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழும் முறை நல்லது என்றோ, தாம் வாதிட முன்வரவில்லை என்று எழுதும், இந்தக் கட்டுரையாளர் தனது கணவர் நாட்டின் அதிபராக வந்த பிறகும்கூட, அவரோடு வாழ விரும்பும் ஒரு பெண், தனது தனித்துவத்தை கைவிடத் தயாராக இல்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே இதை குறிப்பிட்டதாக கூறுகிறார். பிரான்ஸ் நாட்டின் அதிபர் வரலாற்றில் முதன்முறையாக இவர்கள்தான் இப்படி திருமணமின்றி இணைந்து வாழும் தம்பதிகள்!*

## இந்தியாவில் இனவாதம்

*இந்தியாவிலும் இனப் பாகுபாடு இன வெறி இருக்கிறது என்றும், இங்கே இனவெறி இல்லை என்று நடிக்க வேண்டாம் என்றும், 'இந்து' ஏட்டில் (மே 29) ஒருவர் கட்டுரை எழுதியிருந்தார். இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான அசாம், மணிப்பூர், திரிபுரா போன்ற மாநிலத்தவர்களை இந்தியாவின் பிற மாநிலங்களில் வெறுப்புக்குரியவர்களாகவே அவர்களிடம் பாகுபாடு பார்க்கிறார்கள் என்று அந்தக் கட்டுரை கூறியது. அது உண்மைதான் என்றாலும், மேல் கீழ் அடுக்கு வரிசையில் சாதியமைப்பு சமூகத்தைக் கூறு போட்டு காலங்காலமாய் மக்களை ஒதுக்கி வைத்திருப்பதை இக்கட்டுரையாளர் கண்டு கொள்ளவே இல்லை. அறிவாளிகள் என்று கூறப்படும் பிரிவினரும், நடுத்தர வர்க்கமும், சாதியமைப்பால் நிலைநாட்டப்பட்டுள்ள 'இன ஒதுக்கலை'ப் பற்றி கள்ள மவுனம் சாதிப்பதால் இந்தக் கொடூரமான அமைப்பு தேசத்தின் பிரச்சினையாக்கப் படாமல், காப்பாற்றப்பட்டு வருகிறது இந்த உண்மையை ஜூன் 1 ஆம் தேதி அதே நாளேட்டில் இனியன் இளங்கோ எழுதிய கடிதத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார். சாதி தீண்டாமை என்பதையும் இன வேறுபாடாகக் கருத வேண்டும் என்று 2001 இல் டர்பனில் நடந்த இனவெறிக்கு எதிரான சர்வதேச மாநாட்டிலேயே வலியுறுத்தபபட்டது. ஆனாலும், 'மனுதர்ம'ப் பார்வையில் ஊறிக் கிடக்கும் சமூகம், உலகிலேயே எந்த நாட்டிலும் இல்லாத 'தீண்டாமை' எனும் கொடுமையை இன வேறுபாடாகவோ, இன வெறுபபாகவோ, பேசுவதற்கோ, எழுதுவதற்கோ கூட தயாராக இல்லை.*

*"கணவன் துராசாரமுள்ளவனாகவிருந்தாலும் அந்நிய ஸ்திரீலோனாயிருந்தாலும் நற்குணம் இல்லாதவனாக இருந்தாலும் பதிவிரதையான ஸ்திரீயானவள் அவனைத் தெய்வத்தைப் போற் பூசிக்க வேண்டியது." - மனு அத் 5; சுலோகம் 154.*

*ஒரு பெண் திருமணத்துக்குப் பிறகு 'பதிவிரதையாக' இருப்பதற்கான இலக்கணம் இது. இதுவே மனு விதித்த கட்டளை. பெரியார் கேட்டார், 'பதிவிரதை' என்று பெண்ணுக்கு கூறப்படும் இலக்கணம் ஆணுக்கு உண்டா? ஏன் 'பதி விரதன் என்ற சொல் தமிழில் இல்லை? - இது பெரியார் கேட்ட கேள்வி! தமிழிலே கணவனை இழந்தப் பெண்ணுக்கு 'விதவை' என்ற சொல் இருக்கிறது. அதேபோல் மனைவியை இழந்த கணவனைக் குறிக்க 'விதவன்' என்ற சொல் ஏன் இல்லாமல் போனது? இதுவும் பெரியார் கேட்ட கேள்விதான். மனு எழுதி வைத்த 'பெண்ணடிமைக்கு எதிராக பல சட்டங்கள் வந்துவிட்டன. ஆனாலும், சமூகத்தை 'மனு தர்மமே' இன்னும் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. உதாரணமாக கிருட்டிணகிரி மாவட்டத்திலிருந்து அண்மையில் வெளி வந்துள்ள செய்தியைப் பார்ப்போம்.*

*மே 30 ஆம் தேதி ஏடுகளில் இந்த செய்தி வந்துள்ளது. இந்த மாவட்டத்தில் 2010-11 ஆம் ஆண்டில் 14 குழந்தை திருமணங்களும், 2011-12 இல் 62 குழந்தை திருமணங்களும் 2012 ஏப்ரல், மே மாதங்களில் 12 குழந்தை திருமணங்களும் தடுத்து நிறுத்தப்பட்டு, 80 குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அந்த செய்தி கூறுகிறது.*

- *8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் பருவத்தில் பெண் குழந்தைகளுக்கு திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டு விடுவதால் அரசுப் பள்ளிகளில் இந்த பருவத்தில் மாணவியர் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்துவது அதிகரித்து வருகிறது.*
- *இதற்காகவே மாவட்ட ஆட்சித் தலைவர் சி.என். மகேசுவரன் ஒவ்வொரு பள்ளிகளிலும் மாணவ மாணவியர் குழந்தைத் திருமணத்துக்கு எதிராக உறுதிமொழி எடுக்க வேண்டும் என்ற நடைமுறையை அமுல்படுத்தினார். குழந்தைத் திருமணம் நடப்பதாகத் தெரிந்தால், உடனே மாவட்ட ஆட்சித் தலைவலருக்கு தெரிவிக்க வேண்டிய தொடர்பு எண்களும் விளம்பரப் படுத்தப்பட்டன. இப்படி வந்த புகார்களின் அடிப்படையில் 89 குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.*
- *திருமணத்தை விரும்பாத மாணவிகளே நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவகத்தோடு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கிறார்கள்.*
- *மே மாத துவக்கத்தில் ஒசூரில் ஆடம்பரமாக ஒரு திருமண மண்டபத்தில் குழந்தை திருமணம் நடக்க இருந்த நேரத்தில் அதிகாரிகள் தலையிட்டு தடுத்து நிறுத்தினர்.* ***ஒசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரே களத்தில் இறங்கி அதிகாரிகளை மிரட்டி திருமணத்தை நடத்த மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.***

  *(இதே சட்டமன்ற உறுப்பினர்தான் அண்மையில் கழகத் தோழர்களை தனது சகோதரர் மூலமாகக் கொடுமையாக தாக்குவதற்கு ஏற்பாடு செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து ஏற்கனவே 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் செய்தி வெளி வந்துள்ளது.)*
- *"காது குத்துப் போன்ற பெயரில் வேறு சடங்குகளை நடத்தப் போவதாக உறவினர்களை அழைத்து அங்கே குழந்தைத் திருமணங்கள் நடத்தப்படுகின்றன. வெளியூர்களில் குடும்பத்தினருடன் சென்று வேலை பார்ப்போர் ஊர்த் திருவிழா போன்ற நிகழ்ச்சிகளுக்கு வந்து குழந்தைத் திருமணங்களை திடீரென்று நடத்தி விடுகின்றனர்" - என்று அநத் செய்தி கூறுகிறது.*

*ஏழ்மையில் உழலும் பின் தங்கிய சமூகத்தினர் மனுவின் பார்ப்பனியத்தை பிடிவாதமாக இறுக்கிப் பிடித்துக் கொண்டுள்ளனர். ஆனால், இந்த பல்ய விவாகக் கொடுமைகளை சமூகத்தில் திணித்த பார்ப்பனர்களோ தங்களின் முன்னேற்றத்துக்காக கைவிட்டுவிட்டனர்.*

## மக்கள் பிரதிநிதியும் மனுதர்மத்தின் அடிமையே!

*மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரானாலும் 'மனுதர்ம'த்துக்குத்தான் அவர் கட்டுப்பட வேண்டும் என்பதே நடைமுறை! 'மனுதர்மம்' கட்டளையிட்டுள்ள மனித ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பதற்குத் தான் ஊராட்சிகளில் 'ரிசர்வ்' தொகுதி முறை கொண்டு வரப்பட்டது. சட்டம் 'தலித்' தொகுதியை வரையறுத்து, 'தலித்' வேட்பாளரைத் தேர்வு செய்தாலும், சட்டம், 'மனு'வின் பார்ப்பன கூட்டத்தின் முன் மண்டியிட்டு வருகிறது. இதுவே இப்போதும் நீடிக்கிறது.*

*விருதுநகர் மாவட்டம் நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கொட்டாங்கச்சியேந்தல் பஞ்சாயத்தின் தலைவன் வி.கருப்பன், தலித் பஞ்சாயத்து தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் கடந்த 7 மாதங்களாக பஞ்சாயத்து கூட்டங்களில் அவர் நாற்காலியில் அமரும் உரிமை கிடையாது. தரையில் தான் உட்கார வேண்டும. ஏனைய தலித் அல்லாத உறுப்பினர்கள் மட்டும்நாற்காலியில் அமர்ந்திருப்பார்கள். ஊராட்சி துணைத் தலைவர் ஆறு தொகுதி உறுப்பினர்கள் மற்றும் பஞ்சாயத்து ஊழியர் கூடிப் பேசி முடிவுகளை எடுப்பார்கள். நீட்டிய இடத்தில் பஞ்சாயத்து தலைவர் கையெழுத்திட்டாக வேண்டும். மாநில காவல்துறை இயக்குனருக்கு தன் மீது இழைக்கப்படும் தீணடாமைக் கொடுமைகளை விளக்கி, பஞ்சாயத்து தலைவர் புகார் செய்துள்ளார். இந்த பஞ்சாயத்திலும் மதுரை மாவட்டத்திலுள்ள பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி பஞ்சாயத்துகளிலும் 'தலித்' பஞ்சாயத்து தலைவரை சாதி வெறியர்கள் ஏற்க மறுத்ததால், 20 ஆண்டுகளாக தேர்தலே நடக்கவில்லை. 2006 ஆம் ஆண்டில் தான் தீவிர முயற்சிக்குப் பிறகு இந்த பஞ்சாயத்துகளில் தேர்தலையே நடத்த முடிந்தது. இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் வந்து பஞ்சாயத்து செயலாளரை மட்டும் பதவி நீக்கம் செய்துள்ளார். 'தீண்டாமை' யைத் திணித்த பஞ்சாயத்து உறுப்பினர்கள் மீது தீண்டாமை தடுப்புச் சட்டத்தின் கீழ் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 'மனுதர்டத்தின்' அதிகாரத்தின் முன் உள்ளாட்சி சட்டங்களும் வன்கொடுமை சட்டங்களும் மண்டியிட்டுத்தான் தீர வேண்டும் என்றால் இதற்குப் பெயர் 'மனுதர்ம' ஆட்சி தானே?*

## திட்டக் குழுவும் கல் முதலாளிகளும்

*நகரத்தில் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ.32 வருமான வந்தாலும், கிராமத்தில் ரூ.28 வருமானம் வந்தாலும் அவர் வறுமைக்கோட்டைத் தாண்டி விட்டார் என்கிறது திட்டக்குழு. திட்டக்குழு துணைத் தலைவர் அலுவாலியா, உலகமயமாக்கல் கொள்கையின் தீவிர ஆதரவாளர். அமெரிக்க முதலாளியின் கருத்தை செயல்படுத்தும் ஏவலர். ரூ.28 வருமானம் வந்தவருக்கு வறுமை ஒழிந்தவிட்டது என்று கூறிய இவர், டெல்லியிலுள்ள தனது திட்டக் குழு அலுவலகத்தின் இரண்டு கழிப்பறைகளை சீரமைக்க ரூ.35 லட்சம் செலவிட்டுள்ளார். 'ஸ்மார்ட் கார்டு' கையில் வைத்திருப்போர் மட்டுமே, இந்தக் கழிப் பறையை பயன்படுத்த முடியுமாம். வெளி நாட்டுப் பயணங்கள் வேண்டாம், நட்சத்திர ஓட்டல் கூட்டங்கள் வேண்டாம் என்று மத்திய அரசு சிக்கன நடவடிக்கைகளை அறிவிக்கும்போது இரண்டு கழிப்பறைகளை திருத்தி அமைக்க ரூ.35 லட்சம்*

*(6 ஆம் பக்கம்)*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# மீண்டும் நுழைவுத் தேர்வா?

*கல்வித் துறையில் தமிழ்நாடு தனித்துவம் பெற்றது. சமூக நீதிக்கான இட ஒதுக்கீடு கொள்கையை அமுல்படுத்துவதில் இந்தியாவுக்கே வழிகாட்டியாகத் திகழ்ந்தது தமிழ்நாடு. இந்திய அரசு 1976 ஆம் ஆண்டில் அவசர நிலை காலத்தில் மாநிலப் பட்டியலிலிருந்து கல்வியை பொதுப் பட்டியலுக்கு மாற்றிக் கொண்டது. இதனால் தமிழகச் சூழலுக்கு பொருந்தாக கல்வி முறைகளை மத்திய அரசு திணித்து வருகிறது. மத்திய மனித வளத் துறை அமைச்சர் கபில்சிபல் இப்போது இந்தியா முழுமைக்கும் ஒரே நுழைவுத் தேர்வு முறையைக் கொண்டு வரப் போவதாகக் கூறியுள்ளார். கிராமப்புற மாணவர்களை பாதிக்கக் கூடிய நுழைவுத் தேர்வு முறை தமிழ் நாட்டில் நீக்கப்பட்டுவிட்ட நிலையில் மீண்டும் நுழைவுத் தேர்வை இந்திய ஆட்சி திணிப்பதை தமிழ்நாடு ஏற்காது. மீண்டும் நுழைவுத் தேர்வை தமிழகத்தில் திணிக்கும் முயற்சியை மத்திய அரசு கைவிடவேண்டும்.*

## சிந்தனை வட்டத்தில் வே. மதிமாறன் உரை

*சென்னையில் கழகத் தலைமை நிலையத்தில் சாதி ஒழிப்புப் போராளிகள் பட்டுக்கோட்டை இராமசாமி மணல்மேடு வெள்ளைச்சாமி சிந்தனை வட்டம் 29.4.2012 அன்று மாலை கூடியது. இன்றைய காலகட்டததில் அம்பேத்கரின் "தீவிர தேவை" என்ற தலைப்பில் தோழர் வே. மதிமாறன் சிறப்புரையாற்றினார். பா.ராசன் நன்றிகூறினார்.*

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்ற கோரிக்கையை இம்மாநாடு சிபாரிசு செய்கிறது" என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இவற்றிலிருந்து சேலத்தில் 27-8-1944 இல் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் "திராவிடர் கழகம்" என்று பெயர் மாற்ற தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாகவே தமிழ்நாட்டின் பல பகுதிகளில் 'திராவிடர் கழகம்' என்ற பெயரோடு பல அமைப்புகள் இயங்கி வந்ததையும், சேலத்தில் நடைபெறுவதாக இருந்த மாகாண மாநாட்டில் நீதிக்கட்சியின் (தென்னிந்திய நல உரிமைச் சங்கம்) பெயரை "திராவிடர் கழகம்" என மாற்ற வேண்டுமென நீதிக்கட்சியின் நிர்வாகக் குழுவும் பல்வேறு மாவட்டக் குழுக்களும் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிலையில்தான் 27-8-1944 அன்று சேலத்தில் மாநாடு கூடியது. 'சேலம் மாநாடு' என்ற தலைப்பில் 5-8-1944 ஆம் நாளிடப்பட்ட 'குடிஅரசு' ஏட்டில் பெரியார் ஒரு தலையங்கம் எழுதியுள்ளார். அத்தலையங்கத்தில் 20-8-1944 ஞாயிற்றுக்கிழமை சேலத்தில் நடைபெறப் போவதாகவே பெரியார் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அது பின்னர் ஒரு வாரம் தள்ளி வைக்கப்பட்டு 27-8-1944 அன்றுதான் நடந்தது) அத்தலையங்கத்தின் மூன்றாவது பத்தியில் "மாநாட்டில் இரண்டு மூன்று விஷயங்கள் முக்கியமாக சிந்திக்க வேண்டியவைகளாக இருக்கும். திராவிட நாட்டு பிரிவினையை வலியுறுத்தி அதற்காகக் கிளர்ச்சி செய்தல், கட்சியின் பெயரை திராவிடர் கழகம் என்று திருத்தி அமைத்தல், கட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றி விவாதித்து வலியுறுத்தி அவைகளை அவசியம் நடைமுறைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்தல் ஆகியவைகள் முக்கிய மானவைகளாக இருப்பதோடு மற்றும் சில விஷயங்களும் இடம் பெறும் என்றே நினைக்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 12-8-1944 நாளிட்ட குடிஅரசு ஏட்டின் தலையங்கத்திலும் -

"... ஆகவே, கீழ்க்கண்ட கொள்கைகளை ஆதரிக்கும் திராவிட மக்கள், ஆண் பெண் இளைஞர் ஒவ்வொருவரும் தவறாமல் அவசியம் சேலம் மாநாட்டிற்குச் சென்று, நாம் திராவிடர், நம் கழகம் திராவிடர் கழகம் , நமக்கு வேண்டியது திராவிடநாடு என்பனவாகிய கொள்கைகளுக்கு..." என்பதாக குறிப்பிட்டுள்ளதோடு,... "ஓங்குக திராவிடர் கழகம் ! தோன்றுக திராவிட நாடு !! வாழ்க திராவிடர் !!! " என்ற சொற்களோடு முடிக்கிறார்.

அவ்வாறே 19-8-1944 நாளிட்ட குடிஅரசு ஏட்டின் துணைத் தலையங்கத்தில் -

"...20-8-1944 ல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சேலம் மாநாடு 27-8-1944 ஆம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டுவிட்டது. 27ஆம் தேதியில் அவசியம் நடக்கும். ஏராளமான மக்கள் பிரதிநிதிகளாய் வந்து பெருத்த உற்சாகத்துடன் ஏகமனதாய் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொடுத்து உடனே கிளர்ச்சி துவங்க வசதியையும் எழுச்சியையும் உண்டாக்க வேண்டியது அவசியம் என்பதை நாம் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. மாநாட்டில் வரும் தீர்மானங்களில் 'திராவிடர் கழகம்' 'திராவிட நாடு' என்ற தீர்மானங்களோடு தோழர்கள் பாண்டியன், அண்ணாதுரை ஆகியவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானங்கள்..." என்பதாக எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறாக திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட சேலம் மாநாட்டுக்கு முன்னதாகவே இரண்டு ஆண்டு காலமாக தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளில் 'திராவிடர் கழகம்' என்ற பெயரோடு அமைப்புகள் இயங்கி வந்த நிலையிலும், அக்கால கட்டங்களில் உரையாற்றிய பெரியார் "திராவிடர் கழகப் பெயர்க் காரணம்"- "எதற்காக திராவிடர்கழகம் என்ற பெயர் கொடுக்கிறோம்" - என்ற தலைப்பில் உரையாற்றி வந்துள்ள நிலையிலும், 27-8-1944 அன்று சேலம் மாநாடு நடப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னதாக 5-8-1944 அன்று அவர் குடிஅரசில் எழுதியுள்ள தலையங்கத்தில் எழுதியுள்ள மாநாட்டு விவாதப் பொருள்களில் ஒன்றாக "கட்சியின் பெயரை திராவிடர் கழகம் என்று திருத்தி அமைத்தல்" என்பதைக் குறிப்பிட்டு எழுதியுள்ள நிலையிலும், அடுத்தடுத்து 12.8.1944, 19.8.1944 ஆகிய இரண்டு இதழ்களிலும் தலையங்கம், துணைத் தலையங்கங்களில் திராவிடர் கழகப் பெயர் மாற்றம் பற்றி குறிப்பிட்டிருந்த நிலையிலும், அண்ணல்தங்கோ போன்றோர் காலையில் கட்சியின் பெயரை 'தமிழர் கழகம்' என்று மாற்றி அமைக்க முன்மொழிந்ததை ஏற்றுக்கொண்ட பெரியார், மாலையில் அது அவருக்கே ஆபத்தாகி விடும் என்பதால்தான் கட்சியின் பெயரைத் தந்திரமாக "திராவிடர் கழகம்" என்று மாற்றி வைத்துக் கொண்டார் என்ற கருத்தைப் பரப்புவது எவ்வளவு விஷமத்தனமானது என்பதையும், அது ஒரு தரம் தாழ்ந்த, திட்டமிட்ட பொய்யே என்பதையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதும், அப்பொய்யர்களும் இந்தப் புளுகை இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதுமே நமது விருப்பம், விண்ணப்பம்.

# 'திராவிடர் இயக்கம்' உருவாகிய பின்னணி (12)

## எதிரிகளை நடுங்க வைத்த நாயர்

*1919 – அது மட்டுமா? நாயர் லண்டனில் முடிவு எய்தியபோது, காங்கிரஸ் சார்பில் சுயராஜ்யம் கேட்டு வாதாடவும், நாடாளுமன்ற குழுவின் முன்பு சாட்சியம் சொல்லவும் சென்றிருந்த, சி.பி.ராமசாமி அய்யர், சுரேந்திரநாத் பானர்ஜி, திலகர், கோகலே, சத்தியமூர்த்தி, சரோஜினி (நாயுடு), லார்டு சின்ஹா இன்னும் பலர் இங்கிலாந்திலேயே இருந்தும், துக்கம் விசாரிக்கக்கூட செல்லவில்லை. இச்செயலானது, 'காங்கிரஸ், தேசியத் திலகங்களின்' மனிதாபிமானமற்ற தன்மையையும், யோக்கியதையையும், வெட்ட வெளிச்சமாக்கிக் காட்டியது. காலஞ்சென்ற தலைவர் டாக்டர் நாயர் அவர்கள் ஒரு புரட்சி வீரர், சுயமரியாதை வீரர், அவரை ஒரு 'திராவிட லெனின்' என்று சொல்ல வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் பின்னாளில் கூறினார் என்றால், அவரின் புகழுக்கு வேறு என்ன சான்று வேண்டும்? பாலக்காட்டில் பிறந்த தாரவாத் மாதவன் நாயர், மலையாளம் தந்த மாமேதை! சென்னை பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றுப் பின், இங்கிலாந்து சென்று மருத்துவத் துறையில் பட்டம் பெற்று, அங்கு 'கிங்ஸ்' மருத்துவமனையில் அவுஸ் சர்ஜனாக இருந்து, பேரும் புகழும் பெற்று, தாய்நாடு திரும்பி, காது, மூக்கு, தொண்டை (இ.என்.டி.) மருத்துவத்தில் தனக்கு நிகர் தானே என்றும், மருத்துவ மன்னன் என்றும் வெற்றிக் கொடி நாட்டியவர். இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்தபோது, காங்கிரசில் பற்றுக் கொண்டு, தாதாபாய் நவ்ரோஜியை ஒரு பிரிட்டிஷ் பாராளுமன்றத் தொகுதியில் நிறுத்தி வெற்றிப் பெறச் செய்ததில் இவரது செல்வாக்கும் திறமையும், சேவையும் முக்கியப் பங்கு வகித்ததை நவ்ரோஜி உட்பட பல காங்கிரஸ் தலைவர்கள் பாராட்டியுள்ளார்கள் என்பதே இவரது ஆற்றலை விளக்குவதாக அமையும். காங்கிரஸ் என்பது தேசியப் போர்வையில் உள்ள ஒரு பார்ப்பனியக் கூடாரம் என்பதை உணர்ந்து, அதைவிட்டு வெளியே வந்தவர் டாக்டர் நாயர்! அவர் ஒரு பகுத்தறிவுவாதி! சுயமரியாதை வீரர்! சிறந்த பேச்சாளர், நகைச்சுவை உணர்வுள்ளவர், சிறந்த எழுத்தாளர்! இவரின வாதத் திறமையையும், பேச்சாற்றலையும் கண்டு, சி.இராஜகோபாலாச்சாரியார், விஜயராகவாச்சாரியார், திலகர், கோகலே, மாளவியா, மோதிலால் நேரு போன்ற பார்ப்பன காங்கிரஸ் தலைவர்கள் குலைநடுக்கம் கொள்ளுவார்களாம்!* *(தொடரும்)*

(மனுதர்மம்.... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செலவிடலாமா என்ற கேள்விகள் எழுப்பப்படு கின்றன. நியாயமான கேள்விதான். வறுமை கோட்டுக்கும் நவீன கழிப்பறை சொகுசுவுக்கும் இடையே உள்ள பாகுபாடு, 'பிராமண-சூத்திர' பாகுபாடுகளின் மறு வடிவம் தானே. 'மனுதர்ம' தத்துவமே வெவ்வேறு வடிவங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் ஏடுகளில் வந்துள்ள மற்றொரு செய்தியையும் குறிப்பிட வேண்டும். காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு சென்னையைச் சேர்ந்த நாராயணன் என்ற தொழிலதிபர் ரூபாய் ஒன்றரை கோடி மதிப்புள்ள தங்கத்தால் செய்யப்பட்ட சங்கு, சக்கரம், அபயஹஸ்தம் ஆகியவற்றை காணிக்கையாக வழங்கினாராம்.

'குமுதம் ரிப்போர்ட்டர்' ஏடு (ஜூன் 14, 2012) மற்றொரு அதிர்ச்சியான செய்தியை வெளியிட்டுள்ளது. திருச்செந்தூர் முருகன் கோயிலில் ஒவ்வொரு நாளும் 9 காலப் பூஜைகள் நடக்கின்றன. ஒவ்வொரு மடப் பள்ளியின் போதும் முருகனுக்கு படைக்கப்பட்ட சோறு, கவளம் கவளமாக யானைக்கு போடப் பட்டதாம். வேறு சிலர் அதை மாடுகளுக்கு வாங்கிப் போனார்களாம். இவ்வளவுக்கும் பிறகு, ஒவ்வொரு நாளும் 193 கிலோ சோறு கடலில் கொட்டப்பட்டு வந்ததாம். நீண்ட காலம் இந்த 'கிரிமினல் விரயத்தை' பார்ப்பன புரோகிதர்கள் செய்து வந்தனர்". இதற்கு கடும் எதிர்ப்புகள் வந்த பிறகுதான், கடந்த மே 5 ஆம் தேதியிலிருந்து அந்த சோற்றில் மிளகு, சீரகம் சேர்த்து பக்தர்களுக்கு 'மிளகு சம்பா' என்ற பெயரால் பிரசாதமாக வழங்கத் தொடங்கியுள்ளார்களாம்.

பாழும் கல்லின் மீது குடம்குடமாக பாலைக் கொட்டி அழும் பாலாபிஷேகம், 'அக்னி'யை வளர்த்து, வேத மந்திரம் ஓதி, அதில் நெய்யையும், பருப்பையும் கொட்டி பாழடிக்கும் பார்ப்பனர்கள் நடத்தும் யாகங்கள்; இப்படி மக்களுக்கு எதிரான வீண் விரயங்கள், பார்ப்பன சவுண்டிகளால் ஒவ்வொரு நாளும் நடக்கிறதே. அலுவாலியாவின் 32 லட்சம் கழிவறையாவது மலத்தை வெளியேற்றப் பயன்படுகிறது. இந்த பார்ப்பனக் கும்பல் நடத்தும் படையலும், யாகமும் அதற்குக் கூடப் பயன்படுவதில்லையே! எந்தப் பார்ப்பனராவது எந்த ஆன்மீகப் புலியாவது, இதைக் கண்டு சீறியது உண்டா? மக்களாவது இந்த வீண் விரயத்தை உணர்ந்தார்களா? காரணம்.... மனுதர்ம சிந்தனை. அப்படி ஒரு மூளை விலங்கை அழுத்தமாகப் போட்டு வைத்துள்ளது என்பது தானே?

**தொகுப்பு: இரா**

**திருத்தம்:**

சென்ற இதழில் முதல் பக்கத்தில் வெளியான கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கையில் "உலகில் நிலவும் எல்லா அடையாளங்களும் உறவுகளும் **சார்பியல் கோட்பாட்டுக்கு** உட்பட்டவையே என்று திருத்திப் படிக்கக் கோருகிறோம். தவறுக்கு வருந்துகிறோம்.


(ஆர்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 14th June 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஜுன் 21, 2012 | புரட்சி 11 | முழக்கம் 23 | விலை: ரூ.2.50

## உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு மற்றொரு சிறப்பான தீர்ப்பு

# கோயில்களுக்கும் தகவல் உரிமை பெறும் சட்டம் பொருந்தும்

இந்து கோயில்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வரக்கூடியவையே என்றும் இது தொடர்பாக இந்து அறநிலையத் துறை பிறப்பித்த சுற்றறிக்கை செல்லத்தக்கதே என்றும் உயர்நீதிமன்ற நீதிபதி கே. சந்துரு மற்றொரு சிறப்பான தீர்ப்பை வழங்கியுள்ளார். “கோயில்களில் நடக்கும் செயல்பாடுகளை ரகசியமாக்கிவிட்டால்,கோயில் நிர்வாகம் சீரழிந்துவிடும். கோயிலில் நடக்கும் செயல்பாடுகள் தனி நபர் தொடர்புடையது என்று கருதிட முடியாது. கோயில் ஒரு பொது நிறுவனம். பரம்பரை அறங்காவலர்களின் நிர்வாகத்தின் கீழ் இருப்பதால் மட்டுமே கோயில் பொது நிறுவனம் இல்லை என்றாகிவிடாது. கோயில்கள் அனைத்தும் அறநிலையத் துறையின் கீழ் திட்டவட்டமாகக் கொண்டு வரப்பட்டுள்ளன. இதற்கு அரசுப் பணமும் ஒதுக்கப்படுகிறது. கோயில் சடங்குகள் உட்பட பல்வேறு நடவடிக்கைகளுக்கு பொது மக்களிடமிருந்து நன்கொடைகள் திரட்டப்படுகின்றன. இந்த நிலையில் கோயில்களும் தகவல் உரிமை சட்டத்துக்குக் கட்டுப்பட்டவையே” என்று நீதிபதி கே.சந்துரு தீர்ப்பில் கூறியுள்ளார்.

சென்னை வடபழனியிலுள்ள வெங்கீசுவரர் அழகர் பெருமாள் மற்றும் நாகாத்தம்மாள் கோயில் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலராக உள்ள பிரேம் ஆனந்த் என்பவர் இந்த வழக்கை தொடர்ந்தார். இந்து அறநிலையத் துறை கோயிலுக்கு தகவல் தரும் அதிகாரி நியமித்ததை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு இது. கோயில்கள் ஒரு நிர்வாக அமைப்போ அல்லது பொது நிறுவனமோ அல்ல என்று அவர் தாக்கல் செய்த மனுவை நீதிபதி தள்ளுபடி செய்து மேற்கண்ட தீர்ப்பை வழங்கினார்.

**நமது கருத்து:**

*“தெய்வாதீனம் ஜகத் சர்வம்*
*மந்த்ரா தீணம்து தெய்வதம்*
*தன்மந்த்ரம் பிராமண தீனம்*
*பிராமணோ மம தேவதாவநா’*

- என்று ரிக்வேதம் 62வது பிரிவு 10வது சுலோகம்

இதன் பொருள்: “இந்த உலகம் முழுதும் கடவுளுக்குக் கட்டுப்பட்டது. கடவுள் மந்திரங்களுக்குக் கட்டுப்பட்டது. மந்திரம் பிராமணர்களுக்கு கட்டுப்பட்டது” என்பதாகும்.

இப்படி மந்திரங்களுக்கும் ‘பிராமணர்’ களுக்கும் கட்டுப்பட்ட கடவுள் உள்ள கோயில்கள் தகவல் உரிமை பெறும் சட்டத்துக்குக் கட்டுப்பட முடியாது என்ற அடிப்படையிலேயே இந்த அறங்காவலர் வழக்கைத் தொடர்ந்தார்.

கோயில்கள் பார்ப்பனர்களுக்கும் மந்திரங்களுக்கும் கட்டுப்பட்டவை என்று கூறிக் கொண்டாலும் அரசுப் பணத்திலும் பொது மக்கள் நன்கொடையிலும் நடைபெறும் பொது நிறுவனம் என்பதால் கோயில் பற்றிய தகவல்களைக் கேட்க விரும்பும் எவருக்கும் தகவல் தந்தாக வேண்டும் என்று உயர் நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு தீர்ப்பு உணர்த்துகிறது.

எனவே, இத் தீர்ப்பு வேதங்களுக்கும் வேதங்களின் அடிப்படையில் விதிகளையும் தண்டனைகளையும் எழுதி வைத்துள்ள மனுதர்மத்துக்கும் எதிரான தீர்ப்பாகும்.

மனுதர்மத்தைக் காப்பாற்றவே பார்ப்பனர்கள் இப்போதும் துடிக்கிறார்கள் என்பதற்கு இந்த வழக்கும் ஒரு சான்று!

## சிங்கள அமைச்சர் ஓட்டம்



7.6.2012 அன்று காலை கோவையிலுள்ள இந்திய அரசின் கரும்பு இனப்பெருக்க ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பங்கேற்க வந்த சிங்கள அமைச்சர் ரெஜினோல்ட் கூரே தங்கியிருந்த லீ மெரிடியன் ஓட்டலை முற்றுகையிட்டு கண்டன முழக்கங்களை எழுப்பிய பெரியார் திராவிடர் கழகம், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் கட்சி, த.தே.பொ.க., தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

மாநில செயற்குழு உறுப்பினர் வே.ஆறுச்சாமி தலைமையில் கருப்புக் கொடி காட்டிய கழகத் தோழர்கள் 30 பேர் காவல்துறை கைது செய்தது. கழகமும் மற்ற அமைப்புகளும் போராட்டம் அறிவித்ததை அறிந்த சிங்கள அமைச்சர் உடனடியாக கோவையை விட்டு வெளியேறினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் கோவை மாநகர தலைவர் வே.கோபால், மாநில ஆலோசனை குழு உறுப்பினர் பிரகாசு, அலுவலக பொறுப்பாளர் சா.கதிரவன், வடக்கு மாவட்ட அமைப்பாளர் ம.சண்முகசுந்தரம், பெ.நா. பாளையம் கி.சீனிவாசன், கி.கடவு நிர்மல், பகுதி கழக செயலாளர் அர.ராசன், ஈசுவரன், மனோகரன், ஆறுமுகம் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர். முன்னதாக ம.தி.மு.க., த.தே.பொ.க., வி.சி. கட்சி தோழர்கள் 500 பேர் கைதானார்கள். சிங்கள அமைச்சரின் வருகை கோவை மக்களை கொந்தளிக்கச் செய்தது.

## காவிரி நீருக்கு யாகமாம்!



திருச்சி காவிரியாற்றில் ‘வேத பார்ப்பனர்கள்’ 25 அடி ஆழத்துக்கு குழி தோண்டி, தண்ணீரில் அமர்ந்துகொண்டு யாகம் நடத்தியிருக்கிறார்கள். கருநாடகத்தில் நல்ல மழை பெய்ய வேண்டும் என்பதற்கு இந்த யாகமாம். கருநாடக அணையில் நீர் வழிந்தால், வேறு வழியின்றி தமிழகத்துக்கு திருப்பி விடப்படுமல்லவா? ‘பாரதிய கிசான் சங்கம்’ ஏற்பாடு செய்துள்ள இந்த யாகத்தில் தமிழக அமைச்சர்கள் கே.வி.இராமலிங்கம், சிவபதி ஆகியோரும் கலந்து கொண்டார்களாம். தமிழகத்துக்கு நடுவர்மன்ற தீர்ப்பின்படி வழங்கப்பட வேண்டிய நீரை, முறையாக வழங்க கருநாடக அரசு மறுத்து வருகிறது. நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டும், அப்போதுதான் தீர்ப்பு சட்டப்படியான ஆவணமாகும் என்று தமிழக அரசும் தமிழக மக்களும் வலியுறுத்தி வருகிறார்கள். அதற்கு மத்திய அரசு செவி சாய்க்க மறுக்கிறது.

அரசியல் ரீதியாகப் போராடுவதைவிட யாகங்களுக்குத்தான் வலிமை அதிகம் என்ற வேதகால பார்ப்பனியத்தை இப்போதும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். வேதப் பார்ப்பனர்கள் ஓதும் வேதங்களுக்கு அவ்வளவு சக்தி உண்டு என்று நம்பும் ‘மனுதர்ம’ சிந்தனைதான் இதற்குக் காரணம்.

“அந்தந்த தேவர்களுக்கு ஹோமம் செய்யும்போது, அந்தந்தத் தேவர்களை தியானம் செய்ய வேண்டியது. கிழக்கு திசையில் இந்திரனுக்கும், தெற்கு திசையில் எமனுக்கும், **மேற்கு திசையில் வருணனுக்கும்**, வடக்கு திசையில் சோமனுக்கும் வரிசையாய் பூமியில் பலி வைக்க வேண்டும்” என்று மனுதர்மம் 3வது அத்தியாயம்; 87வது சுலோகம் கூறுகிறது.

அரசியல் சட்டத்தின் கீழ் உறுதிமொழி ஏற்று பதவிக்கு வந்த அமைச்சர்கள், கைகட்டி நிற்கிறார்கள். ஆனால், வேதப் பார்ப்பனர்களோ வருண பகவான் தங்களின் வேத கூச்சலுக்கு மட்டுமே செவிமடுத்து செயல்படுவான் என்று யாகம் நடத்தும் இழிநிலைதான் நாட்டில் இப்போதும் உள்ளது.


## மனுதர்ம எரிப்புப் போராட்ட விளக்க மண்டல மாநாடு: திருச்சி மாவட்டக் கழக தீர்மானம்

3.6.2012 அன்று காலை 11 மணியளவில் இளந்தாடி துரைராசன் தலைமையில் பெரம்பலூர் மாவட்ட செயலாளர் தாமோதரன், கரூர் மாவட்ட செயலாளர் காமராஜ், தாமரைக்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் திருச்சி சகிலா விடுதியில் மண்டல கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட செயலாளர் குமார், மாவட்ட இணை செயலாளர் புதியவன், மாவட்ட பொருளாளர் மனோகரன், திருவரங்க நகர செயலர் அசோக், சிரிகாந்த், பழனிவேலு, பொன்னுசாமி, முருகானந்தம் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டம் திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கரூர், தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களின் சார்பாக நடத்தப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சியில் ஆகஸ்ட் மாதத்தில் திருச்சி, தஞ்சை, பெரம்பலூர், அரியலூர், கரூர், நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்கள் சார்பாக மனு சாஸ்திர எரிப்புப் போராட்ட விளக்க மண்டல மாநாடு நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

# சீரழிக்கப்படும் திராவிடர் நாகரிகமும் – சீராட்டப்படும் ராமன் பாலமும்

அரியனாவில் ஹிகார் மாவட்டத்திலுள்ள இராக்கி ஷா, இராக்கி ஹாஸ் எனும் இரட்டை கிராமங்கள், வரலாற்று முக்கியத்துவமானவை. காரணம், இக்கிராமப் பகுதி சிந்து சமவெளி நாகரிகம் தழைத்தோங்கிய காலத்தில் மக்கள் வாழ்ந்த பகுதியாக கண்டறியப்பட்டவை.12 ஆண்டுகளுக்குமுன் இங்கே நடந்த அகழ்வாராய்ச்சியில் சிந்து சமவெளி மக்கள் பயன்படுத்திய பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அது, ஏடுகளில் தலைப்பு செய்திகளாகவும் வந்தன. சுமார் 160 ஹெக்டேர் நிலப்பரப்பைக் கொண்ட இந்த பகுதிதான் இந்தியாவிலேயே கண்டறியப்பட்ட சிந்து சமவெளி நாகரிக மக்கள் வாழ்ந்த மிகப் பெரிய பகுதி. அமரேந்திரநாத் என்ற அகழ்வாராய்ச்சியாளர் தலைமையிலான குழு, 1997-1999 ஆண்டுகளில் 3 கோடை விடுமுறைகளில் இந்த ஆய்வுகளை மேற்கொண்டது. ஒரு சமூகததின் நாகரிகத்தைக் கண்டறிய முக்கிய ஆவணமாகக் கருதப்படும், இறந்தவர் உடல்கள் புதைக்கப்பட்ட குழிகளும் இங்கே கண்டறியப்பட்டது. தொண்மை மிக்க திராவிடர் நாகரிகத்தின் சான்றுகளைக் கொண்ட இந்தப் பகுதி, இப்போது மலைமலையாக மாட்டுச் சாணங்களையும் குப்பைகளையும் கொட்டிக் கிடக்கும் இடமாக மாறிக் கிடக்கிறது. இது பற்றி மிக விரிவான ஒரு



பெயர்க்கப்பட்ட கம்பிவேலி

கட்டுரையை 'சண்டே டைம்ஸ்' ஏடு (ஜூன் 3, 2012) படத்துடன் வெளியிட்டுள்ளது. அச்சனா காரே கோஸ் என்ற அதன் பெண் செய்தியாளர் இப்பகுதிக்கு நேரில் சென்று இந்த அவலக் காட்சிகளை படம் எடுத்து வெளியிட்டுள்ளார்.

இந்தப் பகுதியைச் சுற்றி தொல்பொருள் ஆய்வுத் துறை கம்பி வேலி போட்டிருக்கிறது. ஆனால் அந்த கம்பிகள் அகற்றப்பட்டு அருகே உள்ள கிராமங்களுக்கு போய் வரும் குறுக்குப் பாதையாக இது பயன்படுத்தப்பட்டு வருகிறது. சிந்து சமவெளியில் திராவிடர்கள் வாழ்ந்த ஹரப்பா, மொகஞ்சாதாரோ பகுதிகள், பாகிஸ்தானில் உள்ளன. அங்கும் அது சீரழிந்துதான் கிடக்கிறது. 'ஆர்.ஜி.ஆர்.அய்' என்று ஆய்வாளர்கள் குறிப்பிடும் அரியானாவி லுள்ள இந்த இரட்டை கிராமப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட நடுத்தர வயதுப் பெண் அணியும் சங்குகளால் ஆன வளையல், டெல்லியிலுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இங்கே அகழ்வாராய்வில் கண்டெடுக்கப்பட்ட பல பொருள்கள் பூனேயில் உள்ள டெக்கான் கல்லூரியில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இத்தகைய முக்கியத் துவம் பெற்ற ஒரு நாகரீக வரலாற்றின் சான்றாக தொல்பொருள் துறையால் அறிவிக்கப்பட்ட இந்தப் பகுதி கடந்த பல ஆண்டுகளாக சீரழிக்கப்பட்டுக் கிடப்பதை விரிவாக, விளக்குகிறது இக்கட்டுரை.

இப்பகுதியில் நிறைந்து கிடக்கும் திராவிடர்கள் பயன்படுத்திய பொருள்களை அக்கிராம இளைஞர்கள் பார்வையிட வரும் வெளிநாட்டினரிடம் விற்பனை செய்து வருகிறார்கள். முள்கம்பி போடப்பட்டுள்ள பல பகுதிகள், கம்பிகள் அகற்றப்பட்டு துண்டிக்கப்பட்டுவிட்டன. சுடுகாடு ஒன்றையும் கட்டிவிட்டார்கள். சில ஆண்டுகளுக்கு முன் தர்கா ஒன்றும் வந்துவிட்டது. ஆசியாவிலுள்ள 10 வரலாற்று தொன்மைப் பகுதிகள் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதாக வரலாற்று தொன்மங்களை கண்காணிக்கும் சர்வதேச அமைப்பான உலக தொன்மங்களின் நிதியம் (Global Heritage Fund) அறிவித்துள்ளது. அதில் இந்தப் பகுதியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. தொல்பொருள் ஆய்வுத் துறை இந்தப் பகுதியை கண்காணிக்க தினக் கூலி அடிப்படையில் ஒரு காவல்காரரை நியமித்துள்ளது. ஆனால் அவரோ இங்கே திரும்பிப் பார்ப்பதே இல்லை.



மலைபோல் கிடக்கும் சாணக் குவியல்

தொல்பொருள் துறையின் சண்டிகார் பகுதி நிர்வாகத்தின் கீழ் இந்த தொன்மப் பகுதி வருகிறது. இதற்கு பொருப்பாளராக இருப்பவர் வி.சி.சர்மா என்ற பார்ப்பன அதிகாரி. இக் கட்டுரையை எழுதிய செய்தி யாளர். அவரிடம் இது பற்றி நேரில் கேட்டபோது, "அரணாக போடப்பட்ட வேலிகள் அப்படியே தான் உள்ளன" என்றார். வேலிகள் அகற்றப்பட்டு, சீரழிந்து கிடப்பதை புகைப்பட ஆதாரங்களுடன் செய்தியாளர் எடுத்துக் காட்டியபோது, அதை எதிர்பார்க்காத அந்த பார்ப்பன அதிகாரி, "எல்லாம் எங்களுக்கும் தெரியும்; எங்கள் துறையில் போதுமான ஊழியர்கள் கிடை யாது; 24 மணி நேரமும் எங்களால் கண்காணித்துக் கொண்டிருக்க முடியாது" என்று ஆத்திரத்துடன் பதிலளித்துள்ளார்.

தொல்பொருள் ஆய்வுத் துறையின் தலைமை இயக்குனர் சென்குப்தாவை சந்தித்தபோது அவரும், "இங்கு மட்டுமல்ல; நாடு முழுதும் அகழ் ஆய்வுக்குரிய பகுதிகள் இப்படித்தான் இருக்கிறது" என்று அலட்சியமாக பதிலளித்துள்ளார். "ஆபத்துகள் சூழ்ந்து நிற்கும் அகழ்வாய்வுப்பகுதி" (Endangered site) என்று உலக தொன்ம கண்காணிப்பு அமைப்பு குறிப்பாக இந்தப் பகுதியை அறிவித்துள்ளதே என்று கேட்டதற்கு இதற்கான முக்கியத்துவமே அந்த இயக்குனருக்குப் புரியவில்லை என்கிறார், செய்தியாளர். அருகே வாழும் கிராமங்கள் தங்களின் புழங்கக்கூடிய பகுதியாக பயன்படுத்தத் தொடங்கி விட்ட நிலையில், தொன்மை மிக்க திராவிடர் நாகரிகத்தின் சின்னங்களை அழிவிலிருந்து காப்பாற்ற முடியுமா என்ற கேள்வியுடன், இந்தக் கட்டுரையை முடிக்கிறார், செய்தியாளர் அர்ச்சனா காப்ரே கோஸ்!

பார்ப்பன இந்தியாவில் திராவிடர்கள் வாழ்ந்த நாகரிகத்தின் சுவடுகள் இப்படி அழிக்கப்படும்போது மற்றொரு நிகழ்வையும் இத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியம்!

தமிழ்நாட்டில் சேதுக் கால்வாய் திட்டம் தமிழர்களின் நீண்டகாலக் கனவு. தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கு பெரிதும் துணை செய்யும் திட்டம். வாஜ்பாய் பிரதமராக இருந்தபோதே அவரது கப்பல்துறை அமைச்சகம் மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் ஒப்புதல் பெற்ற திட்டம். அய்க்கிய முற்போக்குக் கூட்டணியில் டி.ஆர்.பாலு அமைச்சராக இருந்தபோது தீவிர முயற்சி எடுத்து திட்டத்தின் பணிகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் பல கோடி ரூபாய் செலவிட்ட பிறகு திட்டம் பாதியிலே நிறுத்தப் பட்டது. "இராமன் இலங்கை மீது போர் தொடுத்தபோது கடலுக்கடியில் கடந்து சென்ற பாலம், இத் திட்டத்தினால் அழிக்கப்படுகிறது" என்று பார்ப்பனர்கள் கூக்குரலிட்டார்கள். ராமன் கட்டிய பாலத்தை தேசிய சின்னமாக அறிவிக்க வேண்டும். சேது சமுத்திரத் திட்டத்தை உடனே நிறுத்த வேண்டும் என்று சுப்ரமணியசாமி என்ற பார்ப்பனர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். தமிழகத்தின் பார்ப்பன தலைவர் ஜெயலலிதாவும் இதே குரலைத்தான் ஒலித்தார். ராமன் கட்டிய பாலம் என்று ஒன்று இருந்ததாக வரலாற்று சான்றுகள் ஏதும் இல்லை என்று உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்த தொல்பொருள் துறை அடுத்த நாளே பார்ப்பனியத்துக்கு பயந்து மனுவைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டது.

இராமாயணம் வரலாறு அல்ல; அது ஒரு கற்பனை புராணம்; திராவிடர்களை ஆரியர்கள் எத்தகைய சூழ்ச்சிகளால் வென்று அடிமைப்படுத்த வேண்டும் என்று பார்ப்பனர்களுக்கு உணர்த்தும் ஒரு கற்பனை. இராமாயண கதை என்பது ஒன்று மட்டும் அல்ல; 20-க்கும் மேற்பட்ட இராமாயணக் கதைகள் உள்ளன. ஆனாலும் அதை வரலாறு என்று திரித்துக் கூறி - பார்ப்பனர்கள், இராமன் பாலத்தை வரலாற்றுச் சின்னம் என்று ஆர்ப்பரித்து உச்சநீதிமன்றம் வரை போய் தடைப்படுத்தி விட்டார்கள்.

ஒரு பக்கம் - திராவிடர்கள் வாழ்ந்த சிந்துவெளி நாகரிகப் பகுதி, மாட்டுச் சாணக் குவியலாய் கிடக்கிறது. ஆரிய மேலாண்மையை உயர்த்திப் பிடிக்கும் கற்பனையான 'இராமன்' பாலம் வரலாற்றுச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டு, சேது சமுத்திர திட்டமே முடக்கப்பட்டுவிட்டது. திராவிட அடையாளம் இழிவானது. பார்ப்பன 'கற்பனைகள்' புனிதமானது. இதுவே இப்போதும் இந்தியாவின் ஆட்சி முறை என்றால், 'மனுதர்மம்' கோலோச்சுகிறதா இல்லையா?

இத்தகைய மனுதர்ம சிந்தனைக்கு இறுதி முடிவு எழுதப்படாமல் கல்லறைக்கு அனுப்பப்படாமல் இந்த சமுதாயத்தில் எந்த மாற்றங்களைக் கொண்டு வர முடியும்?

– புரட்சிப் பெரியார் முழக்கம் 21.06.2012

## 28 ஆண்டுகளாக அகற்றப்படாத நச்சுக் கழிவுகள்

*"எந்த தேசத்தில் சூத்திரர் தெய்வத்தை நிந்திக்கிறவர்கள் இவர்கள் அதிகமாயும் துஜாதிகளில்லாமலும் (இரு பிறப்பாளர்கள்) இருக்கிறார்களோ அத்தேசம் முழுவதும் வறுமை நோய் இவைகளால் துன்பப்பட்டுச் சீக்கிரத்தில் அழிந்து விடும்."* – மனு அத்.8 சுலோகம் 22

- கீழ்சாதிக்காரர்கள் மற்றும் 'பிராமண' தெய்வங்களை ஏற்காதவர்கள் வாழும் பகுதி, துன்பத்தில் மூழ்கி, அழிந்தே போய்விடும் என்ற பார்ப்பன மனுவின் புத்தியை அப்படியே மண்டையில் ஏற்றிக் கொண்டுதான் இந்திய ஆட்சியும் செயல்படுகிறது என்பதற்கு போபாலில் நடக்கும் சம்பவங்களே சான்று.

போபாலில் யூனியன் கார்பைடு எனும் அமெரிக்க நிறுவனத்திலிருந்து நச்சு வாயு கழிவு கசிந்ததால் பல்லாயிரம் பேர் இறந்தனர். பெரும்பாலானவர்கள் ஏழை முஸ்லீம்கள், மனுதர்மப்படி புறக்கணிக்கப் பட்டவர்கள். வறுமையில் வாடி அழியப்பட வேண்டியவர்கள். நச்சு வாயுக் கசிவு நடந்து 28 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால், அந்த ஆலையைச் சுற்றி படிந்து கிடக்கும் ரசாயனக் கழிவுகள், இன்றும் அகற்றப்படாமல் 28 ஆண்டுகளாக அப்படியே அப்பகுதியில் பதிந்து கிடக்கின்றன. இந்த நச்சு வாயுவை அகற்றுவதற்கு எந்த முயற்சியும் எடுக்காத இந்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. தரையில் 27 ஆயிரம் டன் நச்சக் கழிவு புதைந்து கிடக்கிறது என்றும், பூமிக்கு மேல் 350 மெட்ரிக் டன் கொட்டிக் கிடக்கிறது என்றும், பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக வாதிட்ட வழக்கறிஞர் கருணாநந்தி, உச்சநீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கழிவுகளை யார் அகற்றுவது? மாநில அரசா? அல்லது யூனியன் கார்பைடு நிறுவனமா? என்று 28 ஆண்டுகளாக பட்டிமன்றம் நடக்கிறது. மத்திய அரசோ எந்த முடிவுக்கும் வரவில்லை. ஏற்கனவே பல்லாயிரக்கணக்கில் உயிரிழப்புக்கு உள்ளாகி, மேலும் பல்லாயிரக்கணக்கில் ஊனமுற்றுப்போன ஏழை ஒடுக்கப்பட்டோரும், ஏழை முஸ்லீம்களும் அதே பகுதியில் இந்த நச்சுக் கழிவுகளுடன் உழன்று கொண்டிருக்கிறார்கள். ஏன்? மனுதர்மப்படி இவர்கள் 'பாவிகள்', 'சூத்திரர்கள்', 'பிராமண'க் கடவுளை ஏற்காதவர்கள், வறுமை நோயால் துன்பப்பட்டு, அழிய வேண்டிவர்கள். ஆம், 'மனுதர்மத்தின்' உத்தரவையே இந்திய ஆட்சியும், செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

# மனித உரிமைச் சட்டங்கள்: அய்.நா.வை ஏமாற்றுகிறது இந்தியப் பார்ப்பன ஆட்சி

***நாட்டில் ‘மனுதர்மமே’ அதிகாரத்தோடு ஒவ்வொரு துறையிலும் கொடிகட்டி திமிரோடு பறந்து கொண்டிருக்கிறது என்பதற்கு சான்றாக வந்து கொண்டிருக்கும் செய்திகளின் தொகுப்பு:***

*அய்*.நா. மனித உரிமைகளைக் காப்பாற்று தற்கும், சித்திரவதைகளைத் தடுப்பதற்கும் இனப் பாகு பாடுகளை ஒழிப்பதற்கும் சர்வதேச சட்டங்களை யும், நெறிமுறைகளையும் வகுத்துள்ளது. உலகின் பல நாடுகள் இதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட் டுள்ளன. தொடர்ந்து இந்த உரிமை மீறல்களைத் தடுத்து, மக்களைப் பாதுகாக்க உரிய சட்டங்களை நிறைவேற்றியுள்ளன. ஆனால், உலகிலே பெரிய நாடுகளில் ஒன்றாக பெருமைப்பட்டுக் கொள்ளும் இந்தியாவில் என்ன நிலை? மனித உரிமை மீறல் களுக்கும், சித்திரவதைகளுக்கும் உள்ளாகிறவர்கள் “சூத்திரர்களும்”, பஞ்சமர்களும்தானே தவிர, “பிராமணர்கள்” அல்ல. இந்த நாட்டில் பார்ப்பனர்கள் ‘பிராமணர்’ களாகி விடுவதால், அவர்கள் மனிதர்களைவிட மேலானவர்கள். தங்களின் பிரதிநிதியாகவே கடவுளால் படைக்கப் பட்டதாக பார்ப்பனர்கள் கூறுவதை அரசாங்கமும் அங்கீகரித்துவிட்டது. அதனால்தான் ஆகமங்கள் தீண்டாமையை வலியுறுத்தியபோதும் அரசும் அப்படியே ஏற்றுக் கொண்டுவிடுகிறது. நீதிமன்றங் களும் இந்த ‘ஆகமத் தீண்டாமை’களை ஏற்று, தீர்ப்புகளை வழங்குகின்றன. யாகம் நடத்த வேண்டுமா? கூப்பிடு “வேதப் பிராமணர்களை”; கும்பாபிஷேகமா? வேதப் பிராமணர்கள்தான் நடத்த வேண்டும்; அர்ச்சனையா? அதை செய்வதற்கு அவாளுக்கு மட்டுமே உரிமை! அவாள்கள் “பூ தேவர்கள்” மனிதர்களைவிட மேலானவர்கள் என்கிற போது, மனித உரிமை மீறல்கள் இவர்களிடம் எப்படி நெருங்கிட முடியும்?

ஆனால், சித்திரவதைக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் உள்ளாகும் ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’கள் பற்றி ஆட்சியாளர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. இதில் அய்.நா.வை இந்தியா எப்படி ஏமாற்றுகிறது என்பதை விளக்கி ‘டைம்ஸ்ஆப் இந்தியா’ நாளேடு (ஜன் 3) ஒரு செய்தி கட்டுரை வெளியிட்டுள்ளது.

சித்திரவதைகளுக்கு எதிரான அய்.நா.வின் சர்வதேச உடன்பாட்டை ஏற்றுக் கொள்வதாக இந்தியா கையெழுத்திட்டுள்ளது. உடனே இந்தியா வில் அதற்கான சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டியது அரசின் கடமை. ஆனால், சித்திரவதைக்கு எதிரான சட்டம் இதுவரை இந்தியாவில் நிறைவேற்றப்படவில்லை. 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சித்திரவதைக்கு எதிரான மசோதா கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. ஆனால், மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட முடியாமல், தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. மசோதாவில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து தேர்வுக் குழு 2011 டிசம்பரில் பரிந்துரைகளை வழங்கிய பிறகும், மசோதாவில் உரிய திருத்தங்கள் கொண்டு வந்து சட்டமாக்க இந்திய அரசு முனைப்பு காட்டாமல் கிடப்பில் போட்டு விட்டது. உறுப்பினர்கள் கேள்வி கேட்டால் ‘பரிசீலனையில் இருக்கிறது’ என்ற வழமையான பதில்களே வந்து கொண்டிருக்கின்றன. அதேபோல காவலில் இருப்போர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுவோர், கொலை செய்யப்படு கிறார்கள். பிறகு ‘காணாமல் போய் விடுகிறார்கள்’ என்று அரசு சமாதானம் கூறுவதுதான் வழக்கம். இதைத் தடுப்பதற்கு “கட்டாயமாக காணாமல் போகச் செய்யப்படுவோரை” தடுப்பதற்கு அய்.நா. சர்வதேச பிரகடனத்தை உருவாக்கியுள்ளது. உலகத்தின் கண்களை ஏமாற்ற, அய்.நா.வில், இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்ட இந்தியா, அதற்கான சட்டத்தையும் நாடாளுமன்றத்தில் கொண்டுவர எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

இனப்பாகுபாடுகள் காட்டுவதை அய்.நா. முழுமையாக தடை செய்துள்ளது. இதற்கான உடன்படிக்கையில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. இந்தியாவில் ‘தீண்டாமை’யும், இனப்பாகுபாடுதான் என்பதை முதலில் ஏற்க மறுத்த இந்தியா, பிறகு, அய்.நா. அழுத்தத்தின் காரணமாக ஒப்புக் கொள்ள நேரிட்டது. இதன்படி இந்தியாவில் சாதி-சாதிபாகுபாடுகள் தொடர்பான விவரங்களை புள்ளி விவரங்களுடன் ஒவ்வொரு ஆண்டு அய்.நா. மனித உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும். ஆனால், இந்தியா இதிலும் துரோகம் செய்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியினர் பற்றிய புள்ளி விவரங்கள் தயாராக இருக்கிறது என்று கூறுகிறது இந்திய அரசு. ஆனால், இவர்களுக்கு எதிராக ஒவ்வொரு நாளும் நிகழ்ந்து கொண்டிருக் கும் வன்கொடுமைகள் பற்றிய விவரங்களைப் பதிவு செய்வதே இல்லை. இது இந்திய அரசே சட்டத்தை மீறுவதாகும். காரணம், இந்தியாவில் நடைமுறை யிலுள்ள தீண்டாமைக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டமே ஒவ்வொரு ஆண்டும், இத்தகவல் களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறுகிறது. 2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு இத்தகவல்கள் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப் படவில்லை. அய்.நா.வுக்கும் அனுப்பப்படவில்லை. தீண்டாமை தடுப்புச் சட்டத்தை இந்திய அரசு இப்படித்தான் அலட்சியப்படுத்துகிறது.

அதேபோல், குழந்தைகளுக்கான வயது வரம்பு 18 என்று சர்வதேச அளவில் நிர்ணயிக்கப்பட் டிருந்தாலும் இந்தியாவில் 14 என்ற நிலையே உள்ளது. அதனால்தான் கட்டாயக் கல்விச் சட்டத்தில் குழந்தைகளுக்கான வயதை 14 என்றே நிர்ணயித் துள்ளனர். இது சர்வதேச சட்டங்களுக்கு எதிரான தாகும். 14 வயதிலிருந்து 18 வயது வரை குழந்தைகளின் உரிமைகளை சட்ட ரீதியாக உறுதி செய்யப்படாத நிலையில், அவர்கள் தொழிலாளர்களாக உழைப்புச் சந்தையில் தள்ளப்படுகிறார்கள். இந்தியாவின் சமூக பொருளாதார நிலை இன்னும் உயரவில்லை என்று இதற்கு இந்திய அரசு சமாதானம் கூறுகிறது.

அதேபோல், “மகாத்மா காந்தி கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டம்” செயல்படும் முறைகள் குறித்து மனித உரிமைக் குழுக்கள் போன்ற சிவில் சமூகத்தின் கண்காணிப்புக்கும் தணிக்கைக்கும் உட்படுத்தி அறிக்கைகள் சமர்ப்பிப்பதாக ஜெனிவா வில் நடந்த அய்.நா. மனித உரிமைக் குழு கூட்டத்தில் இந்தியா உறுதியளித்தது. ஆந்திர மாநிலத்தைத் தவிர இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இத்தகைய ‘சமூக தணிக்கைகள்’ நிகழ்வதில்லை. அதற்கான சட்டமும் இல்லை. ஆனால், 91 சதவீத கிராம பஞ் சாயத்துகளில் சமூக தணிக்கை நடத்தி, 24,400 அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக இணைய தளத்தில் பொய்யான தகவல்களை ஏற்றி அய்நாவுக்கு அதை அனுப்பி வைத்திருக்கிறது இந்திய அரசு.

மேற்குறிப்பிட்ட அத்தனை பிரச்சினைகளும் ‘சூத்திரர்- பஞ்சமர்’ தொடர்பானவை. சித்திர வதைக்கோ, கட்டாய வேலை வாய்ப்புத் திட்டத்தில் வேலை செய்வதற்கோ, வன்கொடுமைக்கோ, காவலில் அடித்துக் கொலை செய்யப்படுவதற்கோ, குழந்தைத் தொழிலாளியாக உழைப்பதற்கோ - பார்ப்பனர்களோ, உயர்சாதிக் கூட்டமோ முன் வருவது இல்லை. வேத ‘பிராமணர்களுக்கு’ பூ தேவர்கள் என்ற உயர் மதிப்பு. சூத்திரர் பஞ்ச மருக்கோ மனிதர் என்ற அங்கீகாரம் கூட இல்லாமல் சட்டத்தையும் சர்வதேச நெறி முறைகளையும் தூக்கி எறிந்துவிட்டு செயல்படும் போக்கு இது ‘மனுதர்மம்’ அல்லவா?


# 337 தலித் மக்களைக் கொன்று குவித்த பார்ப்பனர்களின் சேனை

‘*இ*ஸ்லாமிய பயங்கரவாதம்’, ‘மாவோயிசப் பயங்கரவாதம்’, ‘விடுதலைப் புலிகள் பயங்கரவாதம்’ - என்று பார்ப்பன ஏடுகளும், பனியாக்களின் ஏடுகளும், ‘தேசிய’ ஏடுகளும் பக்கம் பக்கமாக எழுதி, ஏதோ, இந்த அமைப்புகள் எல்லாம் பயங்கர வாதத்துக்காகவே பிறப்பெடுத்து வந்ததைப்போல சித்தரிக்கின்றன. எந்த பயங்கரவாதமும் அடிப்படை வாதமும் ஏற்க முடியாதவைதான். ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் புறக்கணிக்கப்பட்டவர்கள் தான் ஆயுதங்களை ஏந்த வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

இதற்கு நேர் மாறாக, மேலாதிக்கத்தை நிலைநிறுத்த பார்ப்பன பயங்கரவாதம் என்று ஒன்று இருப்பது பற்றி எந்த ஏடும் எழுதுவதற்கு முன்வருவது இல்லை. பீகாரில் ‘ரன்வீன் சேனா’ என்ற பயங்கர வாத ஆயுதம் தாங்கிய அமைப்பின் நிறுவனராகவும், தலைவராகவும் இருந்த பிரமேஷ்வர் சிங், கடந்த ஜூன் முதல் தேதி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் சுட்டுக் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து அவரது ஆதரவாளர்கள் மிக மோசமான கலவரத்தை நடத்தியுள்ளனர். அது என்ன ‘ரன்வீன் சேனா?’ இது பார்ப்பனர்களின் ஆயுதம் தாங்கிய ஒரு படை!

ராஜபுத்திரர்களை எதிர்த்து அவர்களை ஒழிக்க ஆயுதம் தாங்கிய படையை உருவாக்கிய ‘ரன்வீர்’ என்ற பார்ப்பனரின் பெயரிலேயே இந்தப் படையை உருவாக்கிய பிரமேசுவர்சிங்கும் ஒரு பார்ப்பனர்தான். 1995 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை தலித் சமூகத்தைச் சார்ந்த பெண்கள், குழந்தைகள், ஆண்கள் உட்பட 337 பேரை இந்தப் பார்ப்பன தலைமையிலான குண்டர் படை கொலை செய்துள்ளது. இதைத் தவிர, நூற்றுக்கணக்கான தலித், முஸ்லீம் மக்களை வேறு பல சம்பவங்களிலும் கொலை செய்துள்ளனர்.

தலித் மக்களும், முஸ்லீம்களும் வாழ்வுரிமை இழந்து, ஆடு மாடுகளைப்போல் நடத்தப்பட்ட கொடுமையான சமூகச் சூழலில் 1968 இல் மார்க்சிய லெனினியக் கட்சி இவர்களுக்காக அணி திரட்டிப் போராடியது. பின்னர், ‘மாவோயிச ஒருங்கிணைப்பு மய்யம்’ என்று பெயர் மாற்றப்பட்டு, இப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) என்ற பெயரில் இயங்கி வருகிறது. நிலமற்ற மற்றும் கொத்தடிமை யாக்கப்பட்டுள்ள மக்களின் உரிமை களுக்காக இந்த இயக்கம் போராடத் தொடங்கியதை சகித்துக் கொள்ள முடியாத பார்ப்பனர்கள், இவர்களைக் கொன்று குவிப்பதற்காகவே ‘தன்வீர் சேனை’யை உருவாக்கினார்கள். தலித்-முஸ்லீம் மக்கள் தேர்தலில் ஓட்டுப் போடும் உரிமைகளையே



பார்ப்பன பயங்கரவாதி பிரமேஷ்வர்

தடுத்து வைத்திருந்தது பார்ப்பன நிலவுடைமை யாளர்கள் கும்பல். தேர்தலிலும் போட்டியிட முடியாது. மாவோயிச இயக்கம் வந்த பிறகு, 1989 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில்தான் தலித், முஸ்லீம்கள் வாக்களிக்கும் நிலையே உருவானது.

பல கிராமங்களில் கொத்து கொத்தாக தலித் மற்றும் முஸ்லீம்களை கொலை செய்த இந்த பார்ப்பன குண்டர் படைத் தலைவன், 2002 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு, ‘அரா’ சிறையி லடைக்கப்பட்டார். சிறையிலிருந்தவாறே பல ஊடகங்களுக்கு பேட்டி அளித்த இந்த பிரமேஷ்வர், “நான் தான் தலித், முஸ்லீம்களைக் கொலை செய்தேன். காரணம், இவர்கள் எல்லாம் எதிர்காலத்தில் நக்சலைட்டுகளாக மாறப் போகிறவர்கள்” என்று திமிருடன் கூறினார்.

இவ்வளவு படுகொலை செய்து முதல் குற்ற வாளியாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பார்ப்பனருக்கு 2011 இல் அரா மாவட்ட நீதிமன்றம் பிணை வழங்கியது. காவல்துறை நீதிமன்றம் மற்றும் மாவட்ட அரசு நிர்வாகம் முழுவதும் பார்ப்பன குண்டர் படைக்கும் அதன் தலைவனுக்கும் வெளிப்படையாகவே ஆதரவாக செயல்பட்டன. ‘பதானிடோலா’ எனும் கிராமத்தில் தலித் மக்கள் கொன்று குவிக்கப்பட்ட வழக்கில், நீதிமன்றம் இவருக்கு பிணை வழங்கியபோது, பிரமேஷ்வர் சிறைக்குள்ளேதான் இருந்தார். ஆனால், மாவட்ட நீதிபதி அவர் தலைமறைவாகிவிட்டதாக நீதிமன்றத்தில் அப்பட்டமாக பொய் கூறினார். சிறையில் இருந்து கொண்டே 2009 நாடாளுமன்றத் தேர்தலில் இந்த பார்ப்பன குண்டர் படைத் தலைவனை தேர்தலில் போட்டியிட வைத்தனர் - பார்ப்பனர்கள். தேர்தலில் தோற்றாலும், ‘தலித்-

(4 ஆம் பக்கம்)

# 89 வயது பெரியார் தொண்டரின் உணர்ச்சிமிகு கடிதம்

திருவரங்கத்தைச் சார்ந்த பெரியார் பெருந்தொண்டர் ஆ.பெரியசாமி எழுதியுள்ள கடிதம்:

எனக்கு 89 வயதாகிவிட்டது. 'பெரியார் முழக்கம்' இதழை எனது முதுமை காரணமாக படிக்க இயலவில்லை. எனவே என் முகவரிக்கு இதழை அனுப்ப வேண்டாம் என்று அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதழை படிக்க முடியவில்லையே என்று வருத்தம் மேலிடுகிறது. எங்கள் ஊர் செயலாளர் த.அசோக் வழியாக கழக நிகழ்ச்சிகளை நான் கேட்டு அறிந்து வருகிறேன்.

வயது 89 ஆகிவிட்டாலும், என்னால் முடிந்த அளவு இந்தக் கழகத்துக்கு உதவிட வேண்டும் என்று விரும்புகிறேன். உதவியும் வருகிறேன். பெரியார் திராவிடர் கழகத் தொண்டும், (பெரியார் முழக்க'த்தின் செய்திகளும் எனக்கு மிக மிக விருப்பமாக உள்ளது.

பெரியார் அப்படியே நடந்து வருவதுபோலவே - நான் உணருகிறேன். பெரியாரின் உண்மையான தொண்டர் என்ற உணர்வோடு இதைக் கூறுகிறேன்.

- **ஆ.பெரியசாமி,**
154, சங்கிலி தோப்பு, அம்மா மண்டப சாலை, திருவரங்கம்-4.

---

# நாகர்கோயிலில் மின்சுடுகாடு: குமரிமாவட்டக் கழகம் வலியுறுத்தல்

குமரி மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம் 13.5.2012 ஞாயிறு மாலை நாகர்கோவில் குமரி மாவட்ட ஓய்வு பெற்ற அலுவலர் சங்க கட்டிடத்தில் குமரி மாவட்ட கழகத் தலைவர் சூசை தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வே.சதா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். நிகழ்வில் பேபி ஜெபக்குமார், அருட்செல்வர், குலசேகரம் சேவியர் நீதியரசர் ஆகியோர் உரைக்குப் பின் கழக ஆலோசனைக் குழு உறுப்பினர் தூத்துக்குடி பால்.பிரபாகரன் சிறப்புரையாற்றினார். இதில் வழக்கறிஞர் அப்பாஜி, சஜித், மணி மற்றும் பலர் கலந்து கொண்டனர். பகுத்தறிவுத் துண்டறிக்கை பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

- கூடங்குளம் அணு உலைக்கு எதிராக அமைதி வழியில் போராடும் போராட்டக் குழுவினர்மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெறுவதோடு கைது செய்துள்ள விடுவிக்காத போராளிகளை விடுவிப்பதோடு காவல்துறையின் காவல் அரண் மற்றும் 144 தடை உத்தரவை உடனடியாக விலக்கிக் கொள்ள தமிழக அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.
- நாகர்கோவிலில் அனைத்து மதம் மற்றும் சாதியினரையும் எரியூட்டும் மின் சுடுகாட்டினை அமைத்திட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.
- அரசு அலுவலகங்களில் கடவுளர் படங்களோ கோவில்களோ வைக்கக்கூடாது என அரசு ஆணைகள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகள் வந்த பின்பும் அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களுக்கு பூஜை புனஸ்காரங்கள் செய்வதை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.
- குமரி மாவட்ட பெரியார் திராவிடர் கழக பொருளாளராக மார்த்தாண்டம் பேபி ஜெபக்குமாரை இக்கூட்டம் நியமிக்கிறது.

இறுதியில் தோழர் சேவியர் நன்றி கூறினார்.

---

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லீம் படுகொலைகளுக்கு' ஆதரவு தெரிவித்து 1.5 லட்சப் பார்ப்பன உயர்சாதி கும்பல் தங்கள் வாக்குகளை இந்த மனிதனுக்கு வாரிப் போட்டது. இந்த பிரமேஷ்வர் - தீவிரமான ஆர்.எஸ்.எஸ்.காரர். பிணையில் வெளிவந்த பிறகு, அரசியலில் இறங்கிட முனைப்பு காட்டினார். இவருக்கு அடுத்த நிலையிலிருந்த மற்றொரு பார்ப்பனரான சுனில் பாண்டே என்பவர்தான் பிரமேஷ்வர் கொலைக்கு திட்டமிட்டதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

"பரசுராமன் பிராமணர்களைக் காப்பாற்ற கோடரியைத் தூக்கியதுபோல் நானும்தூக்கினேன். இந்த சமூகத்தில் அநீதிக்கு எதிராக ஆயுதத்தைத் தூக்கியாக வேண்டும்" என்று பல பேட்டிகளை அளித்த பிரமேஷ்வர் மனுதர்மத்தின் காவலன்! 'பகவான் கிருஷ்ணன்' காட்டிய வழியில் பார்ப்பன தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக ஆயுதம் ஏந்தியவன்."

இது ஏதோ ஒரு யுகத்தில் நடந்தது அல்ல; இப்போதும் நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. 337 தலித் -முஸ்லீம் மக்களை படுகொலை செய்த பார்ப்பன ராணுவம் பற்றி ஊடகங்கள் மூச்சு விடவில்லை. இது பற்றி கட்டுரை வெளியிட்ட 'பிரன்ட்லைன்' பத்திரிகைகூட பிரமேஷ்வர், பார்ப்பான் என்பதை இருட்டடித்து விட்டது.

சொல்லுங்கள்! 'மனுதர்மம்' உயிர் வாழ்கிறதா? இல்லையா?

# லண்டன் நாடாளுமன்றக் குழு முன் வகுப்புரிமைக்கு குரல்!

**'திராவிடர் இயக்கம்' உருவாகிய பின்னணி (13)**

1919 – லண்டனில் நாயர் முடிவு எய்தியதும், கே.வி.ரெட்டி நாயுடுவும், ஏ.ராமசாமி முதலியாரும் களத்தில் போராடும்போது, திடீர் என்று தளநாயகன் முடிவு எய்திவிட்ட நிலையில், கை பிசைந்து நின்றனர். நாடாளுமன்றக் குழுவின் முன் நீதிக்கட்சியின் சார்பாக, பார்ப்பனரல்லாதாருக்குப் பிரதிநிதித்துவம் கோரி வாதாடி வேண்டிய பெரும் பொறுப்பு தன் மீது விழுந்ததை கே.வி. ரெட்டி உணர்ந்தார். நாயர் அவ்வப்போது சொன்ன கருத்துகளைத் தனது நாட்குறிப்பில் குறித்து வைத்திருந்தார். அதன் துணை கொண்டு, மாறும் சில புள்ளி விவரங்களின் துணை கொண்டும், இரவு பகலாக 10 நாட்கள் உழைத்து 18 பக்கங்கள் கொண்ட அறிக்கையைத் தயார் செய்தார். அங்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த நாயரின் நண்பர்களான வாட்னிஸ், லர்ட் சிடன்ஹாம் ஆகியோர் உதவியினால், நாடாளுமன்றக் குழுவின் முன் சாட்சியம் சொல்ல வேண்டியதற்கான நடை முறைகள் மற்றும் தெளிவு சுழிவுகளை அறிந்து கொண்டு, ஆகஸ்டு 12-ல் நாடாளுமன்ற பொதுக் குழு முன்னர், சுமார் 5 மணி நேரம் வாதாடி, கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தக்கவாறு விடையளித்து, வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை வலியுறுத்தியதோடு, வரலாற்றுப் புகழ் மிக்க தனது அறிக்கையையும் குழுவின் முன் வழங்கினார். தனது அறிக்கையின் தொடக்கத்திலேயே அவர் தெரிவித்திருந்ததாவது:

இந்தியா என்பதை ஒரு நாடாகக் கருத இயலாது. குறிப்பாக தென்னிந்தியாவில் பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் அடிப்படையிலேயே இன வேறுபாடு உண்டு. முன்னவர், ஆரிய இனத்தைச் சார்ந்தவர், பின்னவர், திராவிட இனத்தைச் சார்ந்தவர். ("India could not be considered as a Nation especially in South India, there was he testified a basic difference that seperated Brahmins from Non-Brahmins the former was Aryans and the later Dravidians.")

கே.வி. ரெட்டி, பார்ப்பனரல்லாதவர் நிலை பற்றி நாடாளுமன்றக் குழுவின் முன் சாட்சியளிக்கும்போது கூறிய கருத்துகளில் ஒன்று வருமாறு: மதத்தின் பேராலும், வர்ணாஸ்ரம தர்மத்தின் பேராலும் சிதறுண்டு திணறும் பார்ப்பனரல்லாத மாபெரும் சமுதாயமானது, யானைப் பாகனிடம் அடங்கிப் போகப் பழக்கப்பட்ட யானைக்குச் சமமானது. சின்னஞ்சிறு குட்டிச் சமுதாயமான பார்ப்பனர், யானைப் பாகனைப்போல், பார்ப்பனரல்லாத பெரிய சமுதாயத்தைப் பன்னெடுங் காலமாக அடக்கி வைத்திருப்பதில் வல்லவர்கள், வஞ்சகர்கள். ஆனால், என்றேனும் ஒரு நாள் எதிர்த்து பாகனை விரட்டும் யானைபோல, பார்ப்பனரல்லாதாரின் எழுச்சிக்கு பார்ப்பனர் கூடிப் பேசி முடிவு எடுக்க வேண்டும் என்றும், முடிவு ஏற்படாவிட்டால் நடுவர் குழுவின் தீர்ப்புக்கு (Arbitrary Commttee) விட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை வெற்றியாகக் கருதி நீதிக் கட்சித் தூதுக்குழு லண்டனிலிருந்து இந்தியா திரும்பியது.


இந்த ஆண்டு சென்னை மாநகராட்சிக்கு முதன் முறையாக நடைபெற்ற தேர்தலில் தியாகராயர் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு நகராட்சியின் முதல் தலைவராகவும் ஆனார். வெல்லிங்டன் சென்னை மாகாண கவர்னராக ஏப்ரல் 10-ல் பதவி ஏற்றார். உறுப்பினராகச் சேரா மலேயே காங்கிரஸ் தலைவர்களால் இழுக்கப்பட்டு, சென்ற சில ஆண்டுகளாக காங்கிரஸ் மாநாடுகளில் பங்கு கொண்டும், சென்னை மாகாணச் சங்கத்தில் சேர்ந்து பார்ப்பனரல்லாதாருக்குப் பதவிகளில் விகிதாச்சாரம் அளிக்க வேண்டும் என்ற தீர்மானம் கொண்டு வந்தும், பணி ஆற்றி வந்த பெரியார், இந்த ஆண்டுதான் காங்கிரசில் உறுப் பினராக சேர்ந்தார். காங்கிரஸ் சமூக சீர்திருத்தத்துக்குப் பாடுபடும் என்றும், வகுப்புரிமைக் கொள்கையை ஏற்றுக் கொள்வதாகவும், பதவி, உத்தி யோகங்களில் 100க்கு 50 சதவீதம், பார்ப்பனர் அல்லாதாருக்கு ஒதுக்கி அளிக்கப்படும் எனவும், தேர்தலில் போட்டியிட்டு அரசியலைக் கைப்பற்றும் எண்ணம் காங்கிரசுக்கு இல்லை எனவும், காங்கிரசார் உறுதி கூறியதை நம்பி சமுதாய சேவைக்கு ஒரு வாய்ப்பு என்று கருதிக் காங்கிரசில் பெரியார் உறுப்பினர் ஆனார். தாம் வகித்து வந்த ஈரோடு நகர்மன்றத் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். திருச்சியில் நடைபெற்ற ராஜ்ய, மாகாண காங்கிரஸ் கான்பரன்சில்" பெரியார் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 21st June 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஜூன் 28, 2012 | புரட்சி 11 | முழக்கம் 24 | விலை: ரூ.2.50


## களமிறங்கினர் ஈரோடு கழகத் தோழர்கள்!

# சட்டவிரோத கொடுமுடி விநாயகன் குடமுழுக்கு நிறுத்தம்

*ஈரோடு மாவட்ட கழகத் தோழர்கள் உடனடியாக களமிறங்கி, கொடுமுடியில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட விநாயகன் கோயில் குடமுழுக்கை தடுத்து நிறுத்தினர்.*

14.6.2012 அன்று காலை 6 மணிக்கு கொடுமுடி சாலைப்புதூர் மின்வாரிய அலுவலகத்தில் விநாயக னுக்கு கோவில் கட்டி குடமுழுக்கு நடத்துவதாக இருந்தது. இந்தச் செய்தி கழகத் தோழர்களுக்கு 13.6.2012 மதியம் கிடைத்தது. உடனே களமிறங்கிய தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர் ரத்தின சாமி தலைமையிலான தோழர்கள் சசிக்குமார், மோகன் மற்றும் பாண்டியன் ஆகியோர் அன்று மாலையே கொடுமுடி காவல் நிலையத்தில், அரசு அலுவலகங்களில் குறிப்பிட்ட மதத்தைக் குறிப்பிடும் சின்னங்களோ, கோவில்களோ, கடவுளர் பொம்மை களோ இருக்கக் கூடாது என்ற அரசாணையை சுட்டிக்காட்டி இந்த கும்பாபிஷேகத்தை நிறுத்தக் கோரி புகார் அளித்தனர்.

காவல் நிலையத்தில் புகார் மனுவை வாங்க மறுத்த காவல் துறையினர் இந்த மனுவை மாவட்ட காவல்துறைக்குத்தான் அனுப்ப வேண்டும். மேலும், இவ்வாறு கடைசி நேரத்தில் வந்து புகார் தருகிறீர்களே என்றனர். மேலதிகாரிக்கு அனுப்புவது உங்கள் வேலை. இப்போதுதான் தகவல் கிடைத்தது என்றனர் கழகத் தோழர்கள். நாளை நடக்க இருக்கும் கும்பாபிஷேகத்தை தடுக்காவிட்டால் நாங்கள் தடுக்க நேரிடும் என்றும் எச்சரிக்கை விடுத்தனர்.

வேறு வழியில்லாத காவல்துறையினர் இரவோடு இரவாக யாகக் குண்டம், பந்தல் போன்றவற்றை அகற்றி, அங்கிருந்த பார்ப்பனர்களையும் விரட்டினர். முறைகேடாக அரசு விதிகளுக்குப் புறம்பாக நடக்க இருந்த கும்பாபிஷேகம் ஈரோடு கழகத் தோழர்களின் சீரிய முயற்சியால் தடுக்கப்பட்டது.

அரசு அலுவலகங்களில் கடவுளர் படங்களோ சிலைகளோ இருக்கக் கூடாது என்ற அரசாணை பொது மக்களுக்கும் குறிப்பாக அரசு அலுவலர் களுக்கேகூட தெரியாமல் இருக்கும் நிலையைப் போக்க கொடுமுடி சாலைப் புதூரில் 18.6.2012 அன்று மாலை 4 மணிக்கு மக்கள் கவன ஈர்ப்புப் பொதுக் கூட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

இதனிடையே இப்பிரச்சாரத்தைத் தடுக்க காவல்துறை முயற்சிகளை மேற்கொண்டது. அதனைத் தகர்த்தெறிந்து தோழர்களின் தளராத முயற்சியால் 18.6.2012 அன்று மக்கள் கவன ஈர்ப்புக் கூட்டம் வெற்றிகரமாக நடந்தது. கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் இராம.இளங்கோவன், மாவட்டத் தலைவர் நாத்திகசோதி, தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர் ரத்தினசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கொடுமுடி பொறுப்பாளர் ஆறுமுகம், பா.ம.க. மாவட்டச் செயலாளர் வடிவேல், தி.மு.க. மாநிலப் பொறுப்பாளர்கள் பரமத்தி சண்முகம், இளஞ்செழியன், கந்தசாமி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொறுப்பாளர் சேதுபதி, ஆதித் தமிழர் பேரவைப் பொறுப்பாளர் வீரகோபால், வீரமுருகு ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக கொடுமுடி பாண்டியன் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் சென்னிமலை நாத்திகர் விழாவின் மூலம் பெரியார் கொள்கைகள் பால் ஈர்க்கப்பட்ட புதிய தோழர்கள், சென்னிமலை செல்வராசு தலைமையில் கலந்து கொண்டனர்.

இதன் தொடர் நிகழ்வாக, ஈரோடு பெரிய மாரியம்மன் கோவில் அருகே நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் கோவிலை விரிவாக்கம் செய்வதைக் கண்டித்தும் ஈரோடு சென்னிமலை ரோட்டில் அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அருகே நெடுஞ்சாலைக்குச் சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து முறைகேடாக கட்டப்பட்டுள்ள கோவிலுக்கு போக்குவரத்துக் கழகப் பணிமனையிலிருந்து முறைகேடாக மின் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதைத் தடுக்கக் கோரியும் கோவை மண்டல காவல்துறை ஆணையர் ஜெயராமிடம் கழகத் தோழர்கள் மனு அளித் துள்ளார்.

கொடுமுடி நகப்பாளையத்தில் கட்டப்பட்டுள்ள தீண்டாமைச் சுவரை இடிக்கும் போராட்டத்தில் கழகத் தோழர்கள் பெருவாரியாகக் கலந்து கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. +

# மக்கள் ஆதரவுடன் பரப்புரைப் பயணம் வெற்றி நடை

ஜாதிய வாழ்வியல் எதிர்ப்பு - மனுதர்ம எரிப்புப் போராட்டம் விளக்கப் பரப்புரைப் பயணம் 23.6.2012 முதல் திருவள்ளூர் - வேலூர் - திரு வண்ணாமலை - விழுப்புரம் காஞ்சி புரம் ஆகிய அய்ந்து மாவட்டங்களில் 10 நாட்கள் எழுச்சி நடைபோட்டு வருகிறது. சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் இந்த பரப்புரையை ஒழுங்கு செய்துள்ளது. பயணத்தின் துவக்கப் பொதுக் கூட்டம் 22.6.2012 அன்று சென்னை மந்தைவெளியில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இரா சேந்திரன், பயணத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினர். சிற்பி ராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியும், சமர்பா எழுச்சி இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. இக் கூட்டத்தை மயிலைப் பகுதி கழகத் தோழர்கள் பா.ஜான், இராவணன், சுகுமாறன், மனோகரன், மாரிமுத்து, முருகன், வாகனராஜ், பார்த்திபன், நாத்திகன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

மறுநாள் 23.6.2012 அன்று காலை 10 மணியளவில் கு.அன்புதனசேகர், வழக்கறிஞர் சு.குமாரதேவன் ஆகி யோரின் உரையைத் தொடர்ந்து கழகத்தின் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் பரப் புரைப் பயண பேருந்தை இராயப் பேட்டை பெரியார் படிப்பகத்தி லிருந்து கொடி அசைத்து தொடங்கி வைத்தார். தொடர்ந்து புது வண்ணாரப் பேட்டை பெரியார் பூங்கா அருகில் முதல் பரப்புரை நடை பெற்றது.

முன்னதாக திருவொற்றியூர் கழகம் சார்பில் அந்தப் பகுதித் தோழர்கள் டார்வின் தாசன், ஏசுக் குமார், துரை, முனுசாமி, செல்வம், சத்யா, டில்லி பாபு, கலையரசன் ஆகியோர் குழுவினருக்கு வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து காலை 11.45 மணியளவில் திருவொற்றியூர் பேருந்து நிலையம் அருகில் பரப்புரை நடந்தது.

அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கத்தைச் சேர்ந்த தோழர் தெய்வ மணி பேசினார். மதியம் 1 மணியளவில் திருவொற்றியூரில் நான்கு முனைச் சாலை அருகில் என்பீல்டு தொழிற் சங்கத்தைச் சார்ந்த ஆதித் தமிழன் சிறப்புரை நிகழ்த்தினார். தோழர் களுக்கு மதிய உணவை மீஞ்சூர் பகுதியைச் சேர்ந்த கழகத் தோழர் துரை வழங்கினார். மாலை 3.30 மணியளவில் மீஞ்சூர் பேருந்து நிலையம் அருகிலும், 4.30 மணிக்கு பொன்னேரி பேருந்து நிலையம் அருகிலும், இரவு 8 மணியளவில் திருவள்ளூர் மார்க்கெட் அருகிலும், இரவு 9 மணியளவில் திருவள்ளூர் இரயிலடி அருகிலும் பரப்புரை நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் அஸ்வத்தாமன் பங்கேற்று கருத்துரை வழங்கினார்.

பயணத்தில் தோழர்கள் இரா.உமா பதி, சு. மருதமூர்த்தி, செ. செந்தில், ராஜன், மனோகர், சுகுமார், முழக்கம் உமாபதி, அசோக் ஆகியோர் பங் கேற்றனர். அனைத்து இடங்களிலும் சிற்பி ராசன் மந்திரமல்ல தந்திரமே நிகழ்ச்சி நடத்தினார். தோழர் நாத்திகன், சாதி ஒழிப்புப் பாடல் களைப் பாடினார். கு.அன்புதனசேகர், ந. அய்யனார் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

**இரண்டாம் நாள்**

24.6.2012 அன்று காலை 9 மணி யளவில் கடம்பத்தூர் பேருந்து

(4 ஆம் பக்கம்)

## பரப்புரைப் பயணத்தில்...

- சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் மேற்கொண்டுவரும் சாதி-தீண்டாமை எதிர்ப்புப் பரப்புரைப் பயணத்தில் 'அரசியல் சட்டத்துக்கு சவால் விடும் மனுதர்மம்' என்ற விளக்க துண்டறிக்கை பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது. பலரும் துண்டறிக்கைகளை ஆர்வத்துடன் படிக்கிறார்கள். சிலர் துண்டறிக்கைகளை வாங்கவே மறுத்துவிடுகிறார்கள்.
- சிற்பி ராசனின் 'மந்திரமா தந்திரமா' பகுத்தறிவு விளக்கத்தைத் தொடர்ந்து, சாதி தீண்டாமைக்கு எதிரான கருத்துக்களை தோழர்கள் பேசும்போது பலரும் அமைதியாக கேட்கிறார்கள். வெளிப்படையாக கருத்துக் கூறாமல், சிலர் மவுனம் சாதிக்கிறார்கள். நிகழ்வுகளில் நேரில் பாராட்டுவோரும் உண்டு.
- தோழர்கள் மக்களிடம் உண்டியல் மூலம் நிதி திரட்டுகிறார்கள். நாள்தோறும் 3000 ரூபாய்க்கு குறையாது மக்கள் நிதியளிக்கிறார்கள்.
- காட்பாடி அருகே தேவரிஷி குப்பம் கிராமத்தில் நூறு நாள் வேலை திட்டத்தில் நடக்கும் மோசடிகளை எதிர்த்து அமைதி வழியில் போராட வந்த மக்களை போலீசார் விரட்டியடிக்க முயன்றபோது கழகப் பயணக்குழுவினர் அந்த முயற்சியை முறியடித்து போராட்டத்தைத் தொடரச் செய்தனர்.
- பல ஊர்களில் கழகத்தில் சேர இளைஞர்கள், தங்கள் தொடர்பு எண், முகவரிகளை ஆர்வத்துடன் தருகிறார்கள்.

## கழக மாநில செயற்குழு கூடுகிறது

*பெரியார் திராவிடர் கழக மாநில செயற்குழுக் கூட்டம் 7.7.2012 சனி காலை 10 மணி யளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கூடுகிறது. செயற்குழு உறுப் பினர்கள் வருகை தர வேண்டு கிறோம்.*

*இடம்:*
*முருகேசன் திருமண மண்டபம் (சென்னை இராயப்பேட்டை கழக பெரியார் படிப்பகம் அருகில்)*

*பொருள்:*
*எதிர்காலத் திட்டங்கள்*

**– கோவை இராமகிருட்டிணன்,**
**– விடுதலை இராசேந்திரன்**
*(பொதுச் செயலாளர்கள்)*

# “விதவைகள்” சடலங்களை வெட்டி சாய்க்கும் ‘மனுதர்ம’ வெறி

உலகிலே எங்கும் இல்லாத ‘விதவை’ என்ற சமூகக் கொடுமையை பெண்கள் மீது திணித்தது, இந்து பார்ப்பனிய மதம் தான். இதில் கூடுதல் பாதிப்புக்குள்ளானவர்கள் பார்ப்பனப் பெண்கள். மொட்டை அடித்து, ரவிக்கையை கழற்றி, காவி உடை போர்த்தி, மூளையில் உட்கார வைத்து விடுவார்கள். எந்த ‘மகிழ்ச்சி’யான நிகழ்வுகளிலும் பங்கேற்க அவர்களுக்கு உரிமை கிடையாது. பார்ப்பனர்களை பின்பற்றி அவர்கள் வழியில் வாழ முயன்ற, வேறு உயர் வர்ணத்தவரிடமும் இது வேகமாகப் பரவியது. ஆனால், இந்து சாஸ்திர சம்பிரதாயங்களை உயர்த்திப் பிடிக்கும் பார்ப்பனர்கள், தங்கள் சமூகத்துக்கு அதனால் பாதிப்பு ஏற்படும்போது அதைக் கைவிடத் தயங்க மாட்டார்கள். இன்று மொட்டையடித்து காவிப் புடவை சுற்றிக் கொள்ளும் பார்ப்பனப் பெண்களைப் பார்ப்பது அபூர்வம். ஆனால், பார்ப்பனியத்தைப் பின்பற்றத் துடிக்கும் ஆதிக்கசாதி சக்திகளிடம் விதவைக் கோலத்தைப் பார்க்க முடிகிறது.

‘காதரைன் மேயோ’ என்ற அமெரிக்கப் பெண், இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வந்தபோது, இங்கே நடந்த சமூகக் கொடுமைகளைக் கண்டு அதிர்ச்சியடைந்து 1928 இல் ஒரு நூலை ஆங்கிலத்தில் எழுதினார். அந்த நூலின் பெயர் ‘இந்திய மாதா’. இந்த நூல் வெளிவந்த பிறகு, உலகம் முழுதும் இந்தியாவில் நடக்கும் சமூக அவலங்கள் பரவியது. உலகம் முழுதும் பேசப்படும் நூலாகிவிட்டது. ஆத்திரமடைந்த காந்தியார், ‘இது சாக்கடை ஆராய்ச்சி என்றும், மேயோ குப்பைத் தொட்டிகளைத் தேடிப் போய் ஆராய்ச்சி செய்யும் குப்பைக்காரி’ என்றும் கடுமையாக விமர்சித்தார். பெரியாரின் சுயமரியாதை இயக்கம் நூலில் கூறப்பட்டுள்ள கருத்துகள் உண்மையா, இல்லையா என்று கேள்வி எழுப்பியது. பெரியாரின் நெருங்கிய நண்பரும் சுயமரியாதைக் காரருமான கோவை அய்யாமுத்து, “மேயோ கூற்று மெய்யா? பொய்யா?” என்ற நூலை எழுதி காந்திக்கு பதிலடி தந்தார். அந்த மேயோ, இந்தியாவில் விதவைகள் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்.

> “ஒரு பெண் விதவையாய் விட்டால் அவளை, புருஷன் வீட்டிலுள்ள அனைவரும் வேலைக்காரியைப் போலவே நடத்துகிறார்கள். மிகவும் கடினமான வேலைகளையே அவள் செய்ய நேரிடும். அவளுடைய சௌகரியத்தை வீட்டில் எவரும் கவனிப்பதில்லை. ஒரு வேளை சாப்பாடுதான் அவளுக்குக் கிடைக்கும். வீட்டில் ஏதாவது சுபகாரியங்கள் நடந்தால் அதில் விதவையாயுள்ளவள் கலந்து கொள்ள முடியாது. விதவை வீட்டிலிருப்பதே மிகவும் அபசகுணமென இந்துக்கள் கூறுகின்றனர். வீட்டிலுள்ளவர்களில் எவருக்காவது உடம்பு அசௌகரியமாய் விட்டால், அதை கவனிக்க வேண்டியது வீட்டிலுள்ள விதவையின் கடமையாகும்.
>
> “எங்கள் மனைவிகளை மிகவும் கொடுமையாக நடத்துகிறதால், அவர்கள் ஒரு வேளை விஷம் கொடுத்துக் கொன்று விட்டாலும் கொன்றுவிடலாமெனக் கருதியே எங்கள் முன்னோர்கள் விதவையாய்ப் போய் விட்டால் அவளுக்குப் பலவித துன்பங்களையும், நிபந்தனைகளையும் ஏற்படுத்தினார்கள்” என ஒரு பிரபல இந்து என்னிடம் கூறினார்.
>
> விதவைகள் விஷயத்தில் இன்னும் சில பரிதாபகரமான சம்பவங்கள் நிகழ்கின்றன. சிறு வயதுள்ள ஒருத்தி விதவையாய்விட்டால், உடனே தன்னுடைய ஆடைகள் மீது எண்ணெயை ஊற்றிக் கொண்டு தன்னையே தீக்கிரையாக்கிக் கொள்கிறாள். விதவையாயிருந்து வீட்டிலுள்ள அனைவரும் துன்பப்படுத்துவதைச் சகித்துக் கொண்டிருப்பதைவிட இறந்து விடுவதே மேலென எண்ணுகிறாள்” – என்று படம் பிடித்தார், மேயோ.

முதன்முதலாக பிரிட்டிஷ் ஆட்சியில், 1885 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதி லண்டனிலுள்ள ‘கவர்னர் ஜெனரல்’ ஆலோசனைக் குழுவில் ‘இந்து விதவைகள் மறுமணம்’ எனும் மசோதாவை கிராண்ட் என்ற உறுப்பினர் அறிமுகம் செய்தார். பார்ப்பன வைதீக பிற்போக்கு இந்துக்களிடமிருந்து இதற்கு கடும் எதிர்ப்பு வந்தது. எதிர்ப்புகளைப் புறக்கணித்து, 1856 இல் ‘இந்து விதவைகள் மறுமணம்’ சட்டமாக இயற்றப்பட்டது. 1871 இல் ‘விதவைகள் மறுமணச் சங்கம்’ அமைக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் 1856 டிசம்பர் 7இல் வங்காளத்தில் முதன்முதலாக விதவை மறுமணம் நடத்தப்பட்டது.



சென்னை மாகாணத்தில் விதவைகள் மறுமணத்துக்கு பலத்த ஆதரவு இருந்தது. 1898 இல் வீரேசலிங்கம் பந்துலு என்பவர், சென்னையில் விதவைகள் காப்பகம் ஒன்றைத் தொடங்கினார். அதை முன் உதாரணமாகக் கொண்டு சென்னை மாகாண அரசு 1903 இல் இந்து மற்றும் முஸ்லீம் விதவைகளுக்குக் கல்வி வழங்கும் நோக்கத்துடன் நிதி உதவி வழங்கும் திட்டம் ஒன்றை அறிவித்தது. சென்னை நகரத்தில் இது தொடர்பாக திவான் பகதூர் ஆர். ரெங்கநாதராவ் மற்றும் பி.சென்ட்சல் ராவ் ஆகியோர் விதவை மறுமணத்தை ஆதரித்து பல நூல்களையும் சிறு வெளியீடுகளையும் வெளியிட்டனர். சென்னை மாகாணத்தில் வீரேசலிங்கம் முயற்சியால் முதல் விதவை மறுமணம் நடத்தப்பட்டது. அதற்கு பலத்த எதிர்ப்புகள் வந்ததால், ஆங்கிலேய காவல்துறை மேலதிகாரி பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடுகளை செய்தார். சென்னை மாகாணத்தில் அடுத்த ஏழு ஆண்டுகளில் மூன்றே மூன்று விதவைகள் மறுமணம் மட்டுமே நடந்தது.

1925களுக்குப் பிறகு சுயமரியாதை இயக்கம் தோன்றிய பிறகு, விதவை மறுமணத்துக்கான கருத்துகள் வீரியத்துடன் மக்கள் மன்றத்தில் கொண்டு சேர்க்கப்பட்டது. பெரியார் தனது சொந்த குடும்பத்திலேயே விதவை மறுமணத்தை நடத்தி வைத்தார். ஆனாலும், பெண்களை புறக்கணிக்கும் பார்ப்பன ‘மனுதர்ம சிந்தனை’ இன்னும் உயிர்த் துடிப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

உத்தரபிரதேசம் மதுரா மாவட்டத்தில் ஆதரவற்ற ‘விதவை’ப் பெண்களுக்கான மறுவாழ்வு இல்லம் 2006 ஆம் ஆண்டு உ.பி. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது. பின்னர் விருந்தாவன் ‘அகிலா பாரதிய மாசாரதா சமாஜ் கல்யாண் சமிதி’ என்ற அரசு சாராத அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த ‘விருந்தாவன் விதவை’கள் காப்பகத்தில் மரணமடை யும் “விதவைகள்” சடலம் குப்பை எடுப்பவர்களிடம் அளிக்கப்படுகிறது. காரணம், விதவைப் பெண்கள் மரணமடைந்தால் அவர்களை அடக்கம் செய்ய அந்த அரசு சாரா அமைப்பு மறுத்துவிட்டதுதான். எனவே அவர்கள் உடல்களை குப்பை எடுப்போரிடம் எடுத்து வீசப்படுகிறது. அவர்களோ துண்டு துண்டுகளாக வெட்டி சணல் சாக்குகளில் திணித்து தூக்கி எறிகிறார்கள். சாக்கில் மூட்டை கட்டிப் போடப்பட்டுள்ள இந்தப் பெண்களின் உடல்கள் பணம் தந்தால்தான் அங்கிருந்து எடுக்கப்படும் நிலை. மாவட்ட சட்ட சேவை ஆணையகம் நேரில் ஆய்வு நடத்தியபோது இந்த அதிர்ச்சியான உண்மைகள் வெளி வந்தன. ஆங்கில நாளேடு ஒன்றும் இந்த உண்மைகளை வெளிக் கொண்டு வந்தது. விதவைப் பெண்களை ‘மனு தர்ம’த்தை பொது புத்தியில் ஏற்றிக் கொண்ட சமூகம், அதே பார்வையில் அவர்களை வெறுப்புக்குரியவர்களாகவே பார்க்கிறது. சட்டசேவை மய்யம் உச்சநீதிமன்றத்தின் கவனத்துக்கு வழக்கு ஒன்றின் மூலம் கடந்த மே முதல் வாரம் கொண்டு சென்றது. இது பற்றி விசாரித்து அறிக்கை அளிக்க 7 பேரடங்கிய குழு ஒன்றை உச்சநீதிமன்றம் நியமித்துள்ளது.

‘மனுதர்ம சிந்தனை’ - பெண்கள் பிணமான பிறகும்கூட அவர்களை வெறுத்து ஒதுக்குகிறது; குப்பைக் கூடையில் உடல்களை வெட்டிக் கூறு போட்டு வீசி எறிகிறது; கவுரவமான உடல் அடக்கத்தைக்கூட செய்ய மறுக்கிறது; இந்த ‘மனுதர்ம சிந்தனை’ தீ வைத்துப் பொசுக்கப்பட வேண்டுமா? வேண்டாமா? ✦

## ‘அக்கிரகார’மாக்கப்படும் அடுக்குமாடி குடியிருப்புகள்




சென்னை புறநகர் சிறுசேரியில் அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் தொடர்பான விளம்பரம் ஒன்று ‘இந்து’ நாளேட்டில் (ஏப்.7, 2012) வெளி வந்துள்ளது. இந்தக் குடியிருப்புகளை விலைக்கு வாங்குவோர் முன் பணம் கட்டிப் பதிவு செய்யும் நிகழ்வு 8.4.2012 இல் தொடங்குகிறது என்று கூறும் அந்த விளம்பரம், முக்கியமான ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்தக் குடியிருப்பு **“பிராமணர்களுக்கு மட்டும்”** என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ‘இந்து’ நாளேடும் இந்த விளம்பரத்தை அப்படியே வெளியிட்டுள்ளது. சூத்திரர்களோ, பஞ்சமர்களோ, இஸ்லாமியர்களோ, கிறிஸ்தவர்களோ பணம் கொடுத்து வாங்க முன் வந்தாலும் அவர்களுக்கு “ஆத்துகள்” (வீடுகள்) வழங்கப்படமாட்டாது என்று இந்த விளம்பரம் கூறுகிறது.

சென்னையைச் சேர்ந்த இனியன் இளங்கோ என்ற வாசகர் இது குறித்து எழுதியுள்ள ஆசிரியருக்குக் கடிதம் ஒன்றை ‘இந்து’ நாளேடு ஜூன் 22 இதழில் வெளியிட்டுள்ளது. (அதாவது இந்த விளம்பரம் வெளி வந்த சுமார் 3 மாத இடைவெளிக்குப் பிறகு)

“சாதி மத அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என்ற அரசியல் சட்டப் பிரிவின் 15 மற்றும் 17வது பிரிவுகளுக்கு இந்த விளம்பரம் எதிரானது. இப்படி பாகுபாடு காட்டப்படும் வர்த்தகமும், விளம்பரமும் தண்டனைக்குட்பட்டவை” என்று அக்கடிதத்தில் இனியன் இளங்கோ சுட்டிக்காட்டியிருந்தார். அந்தக் கடிதத்தை வெளியிட்டுவிட்டு, அதன் கீழே ‘ஆசிரியர் பதில்’ என்ற குறிப்பையும் ‘இந்து’ ஏடு வெளியிட்டுள்ளது.

“பாகுபாடு மற்றும் ஒதுக்குதல் என்ற கொள்கைகளுக்கு ‘இந்து’ ஏடு எதிரானது என்றும், சில நேரங்களில் இத்தகைய வருந்தக்கூடிய சம்பவங்கள் நிகழ்ந்துவிடுகின்றன என்றும், வந்த விளம்பரம் வெளிவந்தது எதிர்பாராமல் நடந்துவிட்ட ஒன்று” என்றும் சமாதானம் கூறியுள்ளது.

வாசகர் இனியன் இளங்கோவன் கடிதத்தை ‘இந்து’ வெளியிட மறுத்து, பிறகு, பத்திரிகை கண்காணிப்புக் குழுவுக்கு இது குறித்து அவர் புகார் செய்யவே, அதனடிப்படையில் குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதிபதி கட்ஜு, ‘இந்து’விடம் விளக்கம் கேட்டுள்ளார். அதன் பிறகே ‘இந்து’ 3 மாதம் கழித்து இந்தக் கடிதத்தையும் விளக்கத்தையும் வெளியிட்டுள்ளதாக அறிகிறோம்.

அடுக்குமாடி குடியிருப்புகளைக்கூட அவாள் ‘ஆத்துக்களாக்கி’ அக்கிரகாரமாக்கிடவே பார்ப்பனர்கள் இப்போதும் கருதுகிறார்கள். மனுதர்மம் கூறும் நான்கு வர்ணங்களை பார்ப்பான் கைவிடத் தயாராக இல்லை என்பதால்தான் இப்போதும் “பிராமணன்” என்ற வர்ண அடையாளத்தை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். ‘சூத்திர’ வர்ணம் சாதிகளாக கூறுபட்டு அவர்கள் சாதி அடையாளத்தை ஏற்றுக் கொண்டுவிட்டனர். ஆனால், அய்யர், அய்யங்கார், சர்மா, சாஸ்திரி என்று சாதிகளால் கூறுபட்டாலும், “பிராமணன்” என்ற வர்ண அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும், அதற்கான ‘காயத்ரி’ ஓதி பூணூல் போடுவதை கைவிடவும் பார்ப்பனர்கள் தயாராக இல்லை. இதைத்தான் **“பிராமணர்களுக்கு மட்டும்”** என்ற அறிவிப்பு பறைசாற்றுகிறது. ‘மனுநீதியே எங்கள் நீதி’ என்பது தானே இந்த அறிவிப்பின் நோக்கம்?

## போர் குற்றம்: முன்னாள் லைபீரிய அதிபருக்கு 50 ஆண்டு சிறை

நெதர்லாந்து நாாட்டின் ஹேக் நகரிலுள்ள சர்வதேச நீதிமன்றம் லைபீரியாவின் முன்னாள் அதிபர் சார்லஸ் கேங்கே டெய்லருக்கு 50 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. லைபீரியாவுக்கு அருகே உள்ள சியாரா லியோன் பகுதி மக்கள் மீது, 2002 ஆம் ஆண்டில் அவர் நடத்திய உள்நாட்டு யுத்தத்தில் போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான வன்முறைகள், பயங்கரவாதம், பாலியல் வன்முறை உள்ளிட்ட குற்றங்களை அவர் செய்துள்ளதற்காக இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. நெதர்லாந்து நாட்டில் 6 ஆண்டுகாலம் இந்த விசாரணை நடந்தது. 80 நாட்கள் அதிபர் நீதிமன்றத்துக்கு நேரில் வந்திருந்தார். விசாரணையை தள்ளிப் போடுவதற்கான அத்தனை முயற்சிகளையும் டெய்லர் செய்து பார்த்தார். ஆனாலும் குற்றத்தி லிருந்து தப்ப முடியவில்லை. இரண்டாவது உலகப் போரின் இறுதியில் போர்க் குற்றவாளிகள் நூரம்பர்க் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டனர். அதன் பிறகு முதன்முதலாக சர்வதேச நீதிமன்றத் தில் தண்டனைக்குள்ளாகும் – ஒரு நாட்டின் அதிபர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

‘ஒரு முள்ளிவாய்க்கால் போதாதா? இன்னும் நூறு முள்ளிவாய்க்கால்களை சந்திக்க வேண்டுமா?’ என்று தனது குட்டிகளை விட்டு குரைக்க வைக்கும் ராஜபக்சேக்கள் இப்படி, கூண்டில் ஏற்றப்படும் காலம் வந்தே தீரும்.

## போஸ்னியா படுகொலை: ராணுவ தளபதிக்கு ‘மரண’ தண்டனை

1992-95 ஆம் ஆண்டுகளில் போஸ்னியா நாட்டில் செர்பிய ராணுவம் யுத்தம் நடத்தியது. (இரண்டு நாடுகளும் முன்னாள் யுகோஸ்லேவி யாவில் இடம் பெற்றவையாகும்) அப்போது செர்பிய ராணுவத்தின் தளபதியாக இருந்த இராட்கே மிலடி, பல்லாயிரக்கணக்கான போஸ்னியா முஸ்லீம்களை கொன்று குவித்தான். போஸ்னியாவிலுள்ள செரப்னிகா என்ற ஊரில் மட்டும் 1995 இல் 8 ஆயிரம் முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். ஷேக் நகரிலுள்ள யுகோஸ்லேவ் போர்க்குற்ற நீதிமன்றம் இதை விசாரித்து ராட்கே மிலடிக்கு ‘8 ஆயிரம் முறை மரண தண்டனை’ என்ற தீர்ப்பை (8 ஆயிரம் முஸ்லீம்களைக் கொலை செய்தமைக்காக) இப்போது வழங்கியுள்ளது.

## கந்தர்வன் கோட்டையில் அணுஉலை எதிர்ப்புக் கூட்டம்

கூடங்குளம் அணு உலையை எதிர்த்தும், கூடங்குளம் அணு உலையை அகற்றக் கோரியும், கல்பாக்கம் அணு உலையை இழுத்து மூடக் கோரியும், போராடுகிற மக்கள் மீது புனையப்பட்ட பொய் வழக்குகளை திரும்பப் பெறக்கோரியும், கூடங்குளம் அணுஉலை எதிர்ப்பு மக்கள் கூட்டியக்கம் சார்பாக 14.6.2012 மாலை 6 மணிக்கு புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வன் கோட்டையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இந்திய பொதுவுடைமை கட்சி, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் மக்கள் விடுதலை அமைப்பின் மாநிலப் பொதுச் செயலாளர் மீ.த. பாண்டியன், இப்பொதுக் கூட்டத்திற்கு தலைமையேற்றார். தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தியாகு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ் சைவப் பேரவை கலையரசி அம்மையார் உட்பட பலர் உரையாற்றினர். தோழர் பாரி இந்த நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

## வரப்பெற்றோம்

**‘மக்கள் உரிமைகளை மறுக்கும் காவல் சட்டங்கள்’**

பிரிட்டிஷ் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட கருத்துரிமையை மறுக்கும் காவல்துறை சட்டங்கள் இப்போதும் நடைமுறையில் இருப்பதையும் அதற்கு எதிராக வந்த உயர்நீதிமன்றத் தீர்ப்புகளையும் விளக்கிடும் நூல்.

வெளியீடு:
மானமும் அறிவும் பயிற்சிப் பாசறை, 95, அய்.ஆர்.எம்.பி. வளாகம், ஆட்சியர் அலுவலகம் எதிரில், பெருந்துறை சாலை, ஈரோடு.

தொகுப்பு :
நிழல் வண்ணன். விலை : ரூ. 20.
தொடர்புக்கு: 98940 13138

## மன்னை கூட்டத்தில் கொளத்தூர் மணி பேச்சு

# ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’களுக்கு ‘தமிழர்’ அடையாளத்தைப் பெற்றுத் தந்ததே திராவிடர் இயக்கம் தான்!

4.6.2012 அன்று மாலை 6 மணிக்கு, தஞ்சை மாவட்டம் மன்னை பந்தலடியில், கழகம் சார்பாக, பொதுக் கூட்டம் நடைபெற்றது. திராவிடர் இயக்க நூற்றாண்டில் சாதீய வாழ்வியலை எதிர்த்து நவம்பர் 26 அன்று நடைபெறவிருக்கும் மனு சாஸ்திர எரிப்புப் போராட்ட விளக்கக் கூட்டமாய் நடைபெற்ற இப் பொதுக் கூட்டம், சுயமரியாதை சுடரொளி அப்பர் சாமி நினைவாக அமைக்கப்பட்ட மேடையில், பள்ளத்தூர் நாவலரசன் இசைக் குழுவினரின் பாடல் களோடு துவங்கியது. இந்தக் கலைக் குழுவினரோடு இணைந்து சமர்பாகுமரன் சில பாடல்களைப் பாடினார். ஒரத்தநாடு ஒன்றிய கழக செயலாளர் சிவசுப்ரமணியம் வரவேற்புரையாற்றினார்.

இக் கூட்டத்திற்கு மன்னை நகர செயலாளர் காளிதாசு தலைமை உரையாற்றினார். திருச்சி புதியவன், சோலை மாரியப்பன், தமிழக மக்கள் புரட்சிக் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் ஆறு. நீலகண்டன் ஆகியோரை தொடர்ந்து, தமிழக மக்கள் புரட்சிக் கழகப் பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன் அரிய உரையை ஆற்றி, நாங்களும் எங்களோடு பல அமைப்புகளும் சேர்ந்து இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி தருவோம் என்ற ஆதரவு உரையையும் ஆற்றினார்.

இறுதியாக நிறைவுரையாற்றிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி தனது உரையில், “இது திராவிடர் இயக்க நூற்றாண்டு. பார்ப்பனர்களை தவிர்த்து பார்ப்பனரல்லாத அனைத்து மக்களையும் ஒன்று திரட்டி, பார்ப்பனர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்த இழிவுகள், பார்ப்பன பண்பாடு நம் மீது சுமத்தி யிருந்த இழிவுகளைத் துடைப்பதற்கு, அதிலிருந்து இந்த சமுதாயம் மீள்வதற்கான பெரும் போராட் டத்தை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டு, ஒரு நீண்ட காலம் நடந்தும் வந்திருக்கிறது. அதன் சமுதாய பிரிவுகள் தொடர்ந்து அந்த எண்ணத்தோடு இருந்தும், அரசியல் பிரிவுகள் ஆற்றிவிட்ட சில இழுக்குகளுக்காக ஒட்டு மொத்த திராவிடர் இயக்கத்தையும் விமர்சனம் செய்ய சிலர் கிளம்பி யிருக்கிறார்கள். இதைப் பற்றி இங்கு பலர் விளக்கிப் பேசியிருப்பதால் நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்த திராவிடர் இயக்கம் தோன்றா மல் இருந்திருக்குமேயானால், இவர்கள் தங்களை தமிழர் என்று அடையாளப்படுத்திக் கொண்டிருக்க முடியாது. இந்த திராவிடர் இயக்கம் தோன்றுகிற வரை, இவர்கள் சூத்திரர்களாக - பஞ்சமர்களாகத் தான் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தார்கள். இந்த இயக்கம் தோன்றி போராடி பெற்றுத் தந்த உரிமை யால் தான், தங்களை தமிழர்கள் என்று அடையாளப் படுத்திக் கொள்ள முடிகிறது என்பதை இவர்கள் முதலில் உணர வேண்டும்” என்று பேசினார்.

இந்த ஜாதி இழிவுகளுக்கு ஆட்படாதவர்கள் எவருமே இல்லை என்பதை விளக்குவதற்காக, முதல்வர்களாக இருந்த ஓமந்தூர் ராமசாமி, டாக்டர் சுப்பராயன், மேயராக இருந்த சர். பிட்டி. தியாகராயர், நகராட்சித் தலைவரின் (பெரியாரின்) தந்தையாகவும், பெரிய செல்வந்தராகவும் இருந்த வெங்கட்டர் போன்றவர்கள் பார்ப்பனர்களால் எப்படி இழிவுபடுத்தப்பட்டார்கள் என்பதையெல்லாம் விளக்கிப் பேசிய கொளத்தூர் மணி, பிசிராந்தையார் என்ற நாடகத்தைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதியுள்ளார். அதில் ஒரு உரையாடல் வருகிறது. அரசரும் அமைச்சரும் ஆலமரத்தடியில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது, மரத்தின் மேல் இருந்த ஒரு பறவை எச்சமிட்டுவிடுகிறது. அது அரசரின் தோள்மீது விழுகிறது. அரசர் எரிச்சலோடு மேலே பார்க்கிறார். அப்போது அமைச்சர் சொல்வார்... “அரசே இது ஆலின் குற்றமன்று ஆலின் மர நிழலில் அண்டிய பறவை செய்த குற்றம்” என்று. இந்த திராவிடர் இயக்கம் என்ற ஆலமரத்தின் நிழலில் அண்டிய சிலர் செய்தது குற்றமாக இருக்கலாம். ஆனால், அதற்காக ஒட்டு மொத்த இயக்கத்தின் மீது வைக்கின்ற விமர்சனமாக, நேற்று பெய்த மழையில், இன்று முளைத்த காளான்கள் எல்லாம் பேசத் தொடங்கிவிட்டன. அது அவர்களின் புரியாத தன்மை மட்டுமல்ல, திமிரான போக்கு என்றும் எடுத்துக் கொள்ளலாம் என்று எடுத்துக் கூறி திராவிடர் இயக்கம் தோன்றிய காரணங்களையும், மனுதர்ம எரிப்புப் போராட்டம் ஏன் என்பதையும் விளக்கி விரிவாக உரையாற்றினார்.

# திருச்சி அரசு மருத்துவமனையில் பெரியார்– மணியம்மை பெயர் நீக்கமா? கழகம் ஆர்ப்பாட்டம்



திருச்சி அரசு மருத்துவமனையில் பெரியார் மணியம்மை குழந்தைகள் பிரிவு பெயரை மாவட்ட நிர்வாகம் திடீரென அகற்றியதை எதிர்த்து, பெரியார் திராவிடர் கழகம் திருச்சி தொடர் வண்டி சந்திப்பு - காதி விற்பனையகம் அருகே ஜூன் 11 ஆம் தேதி மாலை 5 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடத்தியது. மாவட்ட அமைப்பாளர் ஆரோக்கியம் தலைமை தாங்கினார்.

பெரியார் பெருந்தொண்டரும் சட்ட எரிப்பு வீரருமான இளந்தாடி துரைராசன், மாவட்ட செயலாளர் குமார், இணை செயலாளர் புதியவன், புதிய தமிழகம் மாநகர செயலாளர் கோ.சங்கர், புறநகர் மாவட்ட செயலாளர் அய்யப்பன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட துணை செயலாளர் ஆற்றலரசு, ஆதித் தமிழர் பேரவை மாநில இளைஞரணி துணை செயலாளர் கு. சோழன், மாவட்ட தலைவர் திராவிடன், மாவட்ட செயலாளர் இரமேஷ் ஆகியோர் கண்டன உரையாற்றினர். குணா நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொரு ளாளர் மனோகரன், திருவரங்க நகர செயலாளர் அசோக், முருகானந்தம், பழனி, பொன்னுசாமி மற்றும் அனைத்து இயக்கங்களைச் சார்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர். திருச்சி அரசு மருத்துவமனையில் பெரியார் மணியம்மை குழந்தைகள் பிரிவு அதே பெயரில் எப்போதும்போல் செயல்படும் என்று மருத்துவமனை தலைமை அதிகாரி அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## நன்கொடை

25.5.2012 மாலை 6 மணிக்கு பவானியில் நடந்தேறிய பவானி வழக்குரைஞர் ப.பா.மோகன் அவரது மகள் ஆர்த்தி–விஜயகுமார் ஆகியோரின் மணவிழா மகிழ்வாக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதியாக ரூ.1000/– வழங்கினார்.

ஈரோடு கருமாண்டப்பாளையம் சிவக்குமார்– கோகிலா, சாதி மறுப்புத் திருமண இணையர் தங்களது முதலாமாண்டு திருமண நாள் மகிழ்வாக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதியாக ரூ.500 வழங்கியுள்ளனர்.

மேட்டூர் அணை ஆர்.எஸ். கழகத் தோழர் அ.சக்திவேல் – அ. அனிதா இணையரின் மகள் அ.ச.அறிவுமதியின் 9 ஆவது பிறந்தநாள் மகிழ்வாக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதிக்காக ரூ.1000/– வழங்கியுள்ளனர்.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆ–ர்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# சேலம் (மேற்கு) மாவட்டக் கழகம் தீவிரம்: 200 ஊர்களில் 5 கட்ட பரப்புரை இயக்கங்கள்

சேலம் மேற்கு மாவட்ட கழகக் கலந்துரையாடல் கூட்டம் 20.6.2012 மாலை 5 மணிக்கு மேட்டூர் தாய்த் தமிழ்ப் பள்ளி வளாகத்தில் கூடியது. கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் முல்லைவேந்தன், மாவட்ட செயலாளர் சூரியகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர்களும் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பொறுப்பாளர்களும், தோழர்களும் திரளாகக் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

- சேலம் மேற்கு மாவட்டங்களிலுள்ள அனைத்து ஒன்றியங்களையும் உள்ளடக்கி 200க்கும் மேற்பட்ட கிராமங்களில் சாதிய வாழ்வியல் எதிர்ப்பு மற்றும் நவம்பர் 26 மனுதர்ம எரிப்புப் போராட்ட விளக்கப் பிரச்சாரப் பயணம் மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

  முதற்கட்டமாக வருகிற 29.6.2012 மாலை நங்கவள்ளியில் பிரச்சாரப் பயண துவக்க விழா பொதுக் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி பயணத்தை தொடங்கி வைக்கிறார்.

  முதல் கட்ட பிரச்சாரப் பயணம் சூன் 30, சூலை 1 ஆகிய தேதிகளிலும், இரண்டாம் கட்டமாக சூலை 14, 15, நான்காம் கட்டமாக சூலை 21, 22, அய்ந்தாம் கட்டமாக சூலை 28, 29 ஆகிய தேதிகளிலும் சுமார் 200க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுற்றுப்பயணம் நிகழ்த்தி, மேச்சேரியில் நிறைவு விழா பொதுக்கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

- பிரச்சாரப் பயண செலவினங்களுக்காக மேட்டூர் நகர கழகம் ரூ.25,000, கொளத்தூர் ரூ.25,000, மேட்டூர் ஆர்.எஸ். ரூ.25,000, காவலாண்டியூர் ரூ.25,000, லக்கம்பட்டி ரூ.5,000, தார்க்காடு கிளை ரூ.5,000, உக்கம்பருத்திக்காடு சார்பாக ரூ.10,000, நங்கவள்ளி கிளைக் கழகம் சார்பாக ரூ.5,000 என, அனைத்து பகுதிகள் சார்பாக ரூ.1,25,000, பங்களிப்பு செய்வதென உறுதியளிக்கப்பட்டது.
- இதுவரை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழுக்கு சேலம் மேற்கு மாவட்டம் சார்பாக 800 சந்தாக்கள் அனுப்பப்பட்டுள்ளது. இன்னும் ஒருவார காலத்தில் மேலும் 200 சந்தாக்கள் சேர்த்து ஆயிரம் சந்தாக்களை நிறைவு செய்து தருவதென தீர்மானிக்கப்பட்டது.
- மேட்டூர் வட்டார பகுதிகளிலுள்ள அரசு துறைகளான காவல் துறை வருவாய் துறை, மருத்துவத் துறை, கல்வித் துறை, மின் துறை போன்றவற்றில் ஊழல் மிகுந்து காணப்படுவதும், ஏழை எளிய மக்களை இத்துறைகள் முற்றாக புறக்கணிப்பதும் வழக்கமாகிவிட்டது. இந்நிலையில் கழகம் முன் முயற்சி எடுத்து சமூக அக்கறையுள்ள பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகளை ஒன்று திரட்டி ஆர்ப்பாட்டம், கண்டன பொதுக் கூட்டம், உயர் அதிகாரிகளுக்கு புகார் அளித்தல் போன்ற முயற்சிகளில் ஈடுபடுவதென தீர்மானிக்கிறது.

இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஒருங்கிணைப்பாளர்களாக கீழ்க்கண்ட தோழர்கள் நியமிக்கப்படுவதென தீர்மானிக்கப்பட்டது.

அண்ணாதுரை - மாவட்ட அமைப்பாளர்; பாசுக்கர் - நகர தலைவர்; சம்பத்குமார் - நகர செயலாளர்.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் குமரப்பா நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நிலையம் அருகில் பரப்புரைப் பயணம் துவங்கியது. காலை 10.30 மணிக்கு பேரம்பாக்கம் அம்பேத்கர் சிலை அருகிலும் 11.30 மணியளவில் தக்கோலம் நான்கு முனை ரோடு அருகிலும், மதியம் 12.30 மணியளவில் அரக்கோணம் புதிய பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரை நடந்தது. நிகழ்ச்சிகளில் மார்க்சிய-பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த தமிழேந்தி சிறப்புரை நிகழ்த்தினார். மோகன் மதிய உணவுக்கு ஏற்பாடு செய்தார். மாலை 3.30 மணியளவில் தமிழேந்தி இல்லத்தில் தோழர்களுக்கு தேனீர் வழங்கப்பட்டது. மாலை 5 மணியளவில் நெமிலி பெரியார் சிலை அருகிலும், மாலை 6 மணியளவில் பணப்பாக்கம் பேருந்து நிலையம் அருகிலும், மாலை 7 மணியளவில் மேலப்புலம்புதூர் கிராமத்திலும், இரவு 8 மணியளவில் ஆற்காடு பேருந்து நிலையத்திலும் பரப்புரை நடைபெற்றது.

பயணத்தில் செ. அஸ்வத்தாமன், 69 காரணை சு.பரசுராமன், ஏ.சீனிவாசன், கீற்று இரமேசு, பாலமுரளிகிருஷ்ணா, வேலூர் மாவட்ட அமைப்பாளர் திலீபன், சென்னை திலீபன் ஆகியோர் பங்கேற்றனர்.

**மூன்றாம் நாள்**

25.6.2012 திங்கள் காலை 9 மணியளவில் வேலூர் பேருந்து நிலையம் அருகில் பரப்புரை நடைபெற்றது. காலை 10.30 மணியளவில் காட்பாடி பேருந்து நிறுத்தம் அருகிலும், 11.30 மணியளவில் லித்தேரி பேருந்து நிறுத்தம் அருகிலும், 12 மணியளவில் கே.வி.குப்பம் பேருந்து நிறுத்தம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது.

கே.வி.குப்பத்தில் பரப்புரை முடித்துவிட்டு குடியாத்தம் செல்லும் வழியில் தேவரிஷக் குப்பம் ஊராட்சியைச் சேர்ந்த 300-க்கு மேற்பட்ட பொது மக்கள் "நூறு நாள் வேலை உறுதித் திட்ட"த்தில் பணியாற்றுவோருக்கு ஊதியம் வழங்குவதில் முறைகேடுகள் நடப்பதைக் கண்டித்து ஊராட்சி மன்றத் தலைவரை எதிர்த்து ஆலமரம் பேருந்து நிறுத்தத்தில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த பரப்புரைப் பயணக் குழுவினர் போராட்டக்காரர்களிடம் போராட்டத்தைப் பற்றி விசாரித்தபோது கழகத் தோழர்களிடம், "ஊராட்சி மன்றத் தலைவர் முருகன், அரசு 100 நாள் வேலைத் திட்டத்தில் அரசு அறிவித்துள்ள ரூ.119-க்கு பதிலாக ரூ.50 மட்டுமே ஒரு நாள் கூலியாக தருகிறார். அதோடு இல்லாமல் 100 நாள் வேலைத் திட்டப் பணிகளுடன் தனது சொந்த தோட்ட வேலைகளான பருத்தி, மஞ்சள் விவசாயப் பணிகளுக்கும் பயன்படுத்துகிறார்" என்றும் கூறினர்.

இந்நிலையில் காவல்துறையினர் போராட வந்த தொழிலாளர்களை விரட்டியடிக்க முயன்றனர். அதனைத் தடுத்து நிறுத்திய நமது கழகத் தோழர்கள் போராடும் மக்களுக்கு ஆதரவாக போராட்டத்தில் இறங்கினர். கழகத் தோழர்களின் போராட்டத்தை அறிந்த காவல்துறையினர், அதற்குப் பிறகு, வேறு வழியின்றி வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பஞ்சாயத்துத் தலைவரையும் நேரில் வரவழைத்து பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையில் இனிமேல் உரிய கூலி வழங்கப்படும் என்றும், முறைகேடுகள் மீது நடவடிக்கை எடுப்பதாகவும் அதிகாரிகள் உறுதியளித்தனர். போராட்டத்தில் பங்கேற்ற கழகத் தோழர்களுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

தொடர்ந்து பரப்புரைக்கு குழு பயணத்தை தொடர்ந்தது.

மாலை 5.30 மணியளவில் பள்ளி கொண்டா பேருந்து நிறுத்தம் அருகிலும், மாலை 5.30 மணியளவில் அணைக்கட்டு பேருந்து நிறுத்தம் அருகிலும், மாலை 7.30 மணியளவில் கணியம்பாடி பேருந்து நிறுத்தம் அருகிலும், 8.30 மணியளவில் கண்ணமங்கலம் பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது.

நிகழ்வில் குடியாத்தம் சிவா, மோகன், செந்தில், ஜெயக்குமார் ஆகியோர் பங்கேற்றனர். பள்ளிகொண்டா பகுதியை சேர்ந்த கோதண்டபாணி மாலை உணவு வழங்கினார். குடியாத்தம் பகுதியைச் சேர்ந்த கழக ஆதரவாளர் மதிவாணன், "மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு" என்ற வாசகம் பொருந்திய புகைப்படத்தை நினைவுப் பரிசாக வழங்கினார்.

பயணக்குழு தொடர்ந்து பரப்புரை இயக்கத்தை நடத்தி வருகிறது.

**– நமது செய்தியாளர்**

## பா.ஜ.க.வின் பொய் வழக்கு: கழகத் தோழர் இராசன் விடுதலை

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் தேதி பா.ஜ.க.வினர் அத்வானி பிறந்த நாள் சுவரொட்டிகளை சேத்துப்பட்டு பகுதியில் ஒட்டியிருந்தனர். அதில் இரண்டு சுவரொட்டியில் நீல மையினால் கோடிட்டு அத்வானி முகத்தை அசிங்கப்படுத்திவிட்டதாகவும் (?), இதைக் கேட்ட பா.ஜ.க.வினரை தரக் குறைவான வார்த்தைகளால் திட்டியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும், தென்சென்னை மாவட்ட கழகத் துணைத் தலைவர் பா.இராசன் மற்றும் ம.க.இ.க.வை சேர்ந்த வாசுதேவன் ஆகியோர் மீது இ.த.ச. பிரிவுகள் 427, 294 (பி), 506 (ii) கீழ் வழக்குத் தொடரப்பட்டு, 14வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம் எழும்பூரில் வழக்கு நடந்தது. 6 சாட்சிகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டனர். சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தபோது முன்னுக்குப் பின் முரணாக நடந்த சம்பவத்தைப் பற்றி முழுமையான அளவில் சாட்சிகளால் கூற முடியவில்லை. அடையாளமும் காண முடியவில்லை. கடந்த 26.4.2012 அன்று குற்றவியல் நடுவர் திருமதி கீதாராணி, கழகத் தோழர் ராசன் மீது போடப்பட்ட வழக்கின் மீது எந்தவித ஆதாரமுமில்லையென்று விடுதலை செய்து உத்தரவிட்டார். இராசன் சார்பில், கழக வழக்கறிஞர் சு.குமாரதேவன், இர. ஜான் ஞானசீலன் மற்றும் கே.ஜெ.சிவா ஆருத்ரா ஆகியோர் நேர் நின்றார்கள்.

## நெல்லையில் கைதிகள் உரிமை கோரி விளக்கக் கூட்டம்

சிறையில் 10 ஆண்டுகளுக்கும் மேல் அடைக்கப்பட்டிருக்கும் அரசியல் சிறைவாசிகளை விடுதலை செய்யக் கோரி இன அழிப்புக்கு எதிரான இசுலாமிய இளைஞர் இயக்கம் சார்பில் நெல்லை மேலப்பாளையத்தில் 10.6.2012 ஞாயிறு மாலை 6 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இவ்வமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் வழக் குரைஞர் உமர்கய்யாம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்நாடு முசுலீம் முன்னேற்றக் கழகத் தலைவர் ஜே.எசு.ரிஃபாயி, கழகத் தலைவர் கொளத்தூர்மணி, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், சிறுபான்மை உதவி அறக்கட்டளை சம்சுதீன், இன அழிப்புக்கு எதிரான இசுலாமிய இளைஞர் இயக்கம் ஒருங்கிணைப்பாளர் மை. வீரர் அப்துல்லா, இந்திய தேசிய லீக் கொள்கை பரப்புச் செயலாளர் கம்பம் இப்ராகிம் ஆகியோர் உரையாற்றினர். மேலப்பாளையம் ஊர் மக்கள் இந்நிகழ்வில் அதிக அளவில் கலந்து கொண்டனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 28th June 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.